# பகுதி IV

# பகுதி IV

## மத்திய வங்கியினதும், இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகளும், தொழிற்பாடுகளும் தொடர்பான 1996 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பகிரங்க தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம் | I |
| 2. | 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நாடு காக்கும் உதவுதொகைச் சட்டம் | XIII |
| 3. | 1996 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் | XX |
| 4. | 1996 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மதுவரி (திருத்தச்) சட்டம் | XXI |
| 5. | 1996 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் | XXII |
| 6. | 1996 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | XXIV |
| 7. | 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் | XL |
| 8. | 1996 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பகிரங்க தொழில் முயற்சிகளைப் புனரமைத்தல் சட்டம் | LIII |
| 9. | 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் | LX |
| 10. | 1996 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் | CXX |
| 11. | 1996 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் | CXXIV |
| 12. | 1996 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க நாடு காக்கும் உதவு தொகை (திருத்தச்) சட்டம் | CXXVIII |
| 13. | 1996 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் | CXXIX |

# 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பகிரங்க தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம்

[1996 ஆம் ஆண்டு சனவரி 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நியமித்த திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

### பாகம் I

### இலங்கைப் பகிரங்கத் தொழிற்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவைத் தாபித்தல்

2. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" என்று குறிப்பீடு செய்யப்படும்)

(2) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

3. (1) ஆணைக்குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பதவிநிலை உறுப்பினர் இருவர், அதாவது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அத்துடன் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி ; அத்துடன்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்பட்ட நான்கிற்குக் குறையாததும் ஆறுக்கு மேற்படாததுமான உறுப்பினர்கள் ; இவர்களுள் ஒருவர் பகிரங்க அலுவலராதல் வேண்டும். இவர்கள் இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்.

(2) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக இருப்பதற்கென பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினர்களது பதவியில் நியதிகள், ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான வேதனம், ஆணைக் குழுவின் கூட்டங்கள், இலச்சினை என்பன தொடர்பில் இச் சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் பயனுறுவனவாதல் வேண்டும்.

## பாகம் II

### பணிகளும் தத்துவங்களும்

4. ஆணைக்குழுவின் பணியானது, பின்வரும் குறிக்கோள்களைக் கருத்திற் கொண்டு, பகிரங்கத் தொழில் முயற்சிகளின் சீர்திருத்தங்கள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதலும் துணை புரிதலுமாதல் வேண்டும்.

(அ) நாட்டின் அபிவிருத்தியைப் பேணி வளர்த்தலும் துரிதப்படுத்தலும் ;

(ஆ) பொருளாதாரத்தின் வினைத்திறனையும் போட்டி இயல்பினையும் மேம்படுத்தல் ;

(இ) புதிய தொழில்நுட்பவியலையும்,நிபுணத்துவத்தையும் பெற்றுக் கொள்வதன் மூலம் போட்டி அடிப்படையொன்றில் சர்வதேசச் சந்தைகளை அணுகும் வாய்ப்புடன் உற்பத்தியையும் சேவைகளையும் தரமுயர்த்துதல் ;

(ஈ) மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்தலும், விரிவுபடுத்தலும், அத்துடன் நீண்ட தவணைத் தனியார் சேமிப்புகளை புழக்கத்திற்குக் கொண்டுவருதலும் ;

(உ) தனியார் துறையை செயற்படத் தூண்டுதல் ;

(ஊ) அரசாங்கம் சமூக நிகழ்ச்சி நிரலுக்கு மேலும் சிறப்பாக கவனம் செலுத்துவதை இயலச் செய்வதற்கு அதன் வருமானங்களை அதிகரித்தல்.

5. ஆணைக்குழு அதன் பணிகளைப் புரியும் நோக்கத்திற்கென பின்வரும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன் கடமைகளையும் நிறைவேற்றலாம் :

(அ) சீர்திருத்தப்படத் தேவைப்படும் பகிரங்கத் தொழில் முயற்சிகளை ஆய்ந்தறிவதற்கும் தீர்மானிப்பதற்கும் மதிப்பீடுகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்ளுதல் ;

(ஆ) நிலைபேறானதும் உறுதியானதுமான பகிரங்கத் தொழில் முயற்சி உபாயமொன்றுக்கான கட்டுக்கோப்பொன்றை வகுத்தமைத்தல் ;

(இ) இலாபம் ஈட்டுவனவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையுமான பகிரங்கத் தொழில் முயற்சிகளின் தொடர்ந்தியங்கும் நிலையையும் வினைத்திறனையும் பற்றி அரசாங்கத்திற்கு விதப்புரை வழங்குதல் ;

(ஈ) 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதற் சட்டத்தின் கீழ் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுவதற்கு பகிரங்கத் தொழில் முயற்சிகளைத் தெரிவு செய்தல் பற்றி அரசாங்கத்திற்கு விதப்புரை செய்தல் ;

(உ) 1987ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளை, பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதற் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளிலுள்ள பங்குகளை அல்லது அவற்றின் சொத்துக்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்தலைப் பற்றி அல்லது கையுதிர்த்தலைப் பற்றி அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தல் ;

(ஊ) திறைசேரிச் செயலாளரினால் முழுப் பங்குகளும் சொந்தமாக வைத்திருக்கப்படுவதான 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளை அரசாங்கத்தின் சார்பில் முகாமை செய்தல் ;

(எ) 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவையும் எத்தகைய கம்பனிகளின் பெரும்பான்மையான பங்குகளை அரசாங்கத்தைத் தவிர வேறு ஆட்கள் சொந்தமாகக் கொண்டிருக்கிறார்களோ அத்தகையவையுமான கம்பனிகளின் செயற்பாட்டை கண்காணித்தலும், அவற்றின் செயற்பாட்டிலுள்ள பலவீனங்களை இனங்காணலும், இப்பலவீனங்களைத் திருத்துவதற்கென அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தலும் ;

(ஏ) 1987 ஆம ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதற் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதலும் துணை புரிதலும் ;

(ஐ) பகிரங்கத் தொழில் முயற்சிகளின் சீர்திருத்தத்தின் மீதான அரசாங்கக் கொள்கைகளுக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கும் பொதுமக்களின் ஈடுபாட்டுறுதியொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அத்தகைய கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் பற்றி பகிரங்க விழிப்புணர்வை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்குத் துணை புரிதல்;

(ஒ) அத்தகைய கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுலாக்குவதில் வேலையாள் பங்கெடுப்பதனை மேம்படுத்துதலும், (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனிகளின் ஒப்புரவிலான வேலையாள் பங்கெடுப்பை நிச்சயப்படுத்துதலும்.

(ஓ) ஆணைக்குழுவின் அலுவல்களை முகாமை செய்வது தொடர்பாக விதிகளை ஆக்குதல்;

(ஔ) அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமெனக் கருதப்படுகின்றவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்தல் ;

(க) அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களை, சேவையாளர்களை, அல்லது முகவர்களை நியமித்தல்,தொழிலில் ஈடுபடுத்துதல், ஊதியமளித்தல் அத்துடன் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ;

(ங) இலங்கையிலானுஞ்சரி, வெளிநாட்டிலாயினஞ்சரி, ஆளணியினரின் பரிமாற்றத்திற்காக மதியுரைச் சேவைகளுக்கும், அத்துடன் ஆளணியினரின் பயிற்சிக்கும் என கல்விசார்ந்த

நிறுவனங்களுடனும் அத்துடன் ஏனைய நிறுவனங்களுடனும் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளல் ;

(ச) எதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறந்து பேணுதல் ;

(ஞ) ஆணைக்குழுவின் அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் நன்மைக்காக, சகாய நிதியங்களை அல்லது ஓய்வூதியத் திட்டங்களைத் தாபித்தலும், அத்தகைய நிதியம், அல்லது திட்டம் எதற்கும் உதவுதொகைகளை அளித்தலும் ;

(ட) அதன் பணிகளையும் கடமைகளையும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடன் பெறுதல் ;

(ண) அதன் அலுவலர்களினதும், சேவையாளர்களினதும், திறமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் ;

(த) வெளியீடுகள், சுற்றறிக்கைகள், அத்துடன் பத்திரிகை அறிவித்தல்களையும் வழங்குதல்;

(ந) அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டால், ஏதேனும் கருமத்தின் அல்லது கொடுக்கல் வாங்கலின் நோக்கங்களுக்காக இலங்கையிலானுஞ்சரி, வெளிநாட்டிலாயினுஞ்சரி, இலங்கை அரசாங்கத்தின்முகவராகச் செயலாற்றுதல்.

(ப) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில், அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் வசதியளிப்பதற்கும் அவசியமாகவுள்ளனவான அத்தகைய எல்லாச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.

## பாகம் III
## நிதி

6. (1) ஆணைக்குழுவானது அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் நிதியத்திற்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்கென, பாராளுமன்றத்தினால் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(ஆ) ஆணைக்குழுவினால் அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் அத்துடன் நிறைவேற்றுகையிலும் பெறப்படக் கூடியவாறாக அத்தகைய பணத்தொகைகள் யாவும் ;

(இ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு எத்தன்மைத்தான எந்த மூலத்திலிருந்தாயினுஞ்சரி, கட்டணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள், கொடைகள் மரண சாதனக் கையளிப்பு என்பன வாயிலாக ஆணைக்குழுவினால் பெற்றுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவினால் கடனாகப் பெறப்படும் பணத்தொகைகள் யாவும்

(3) ஆணைக்குழு அதன் தத்துவங்களை, கடமைகளை, அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் அதனால் உறப்பட்ட செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

7. ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

8. (1) ஆணைக்குழுவானது, அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள், அத்துடன் பொறுப்புக்கள் என்பன பற்றியும், அதன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியும் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக் குழுவின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV
## பொது

9. (1) அமைச்சரானவர், ஆணைக்குழுவின் மதியுரையின் மீது, (இதனகத்துப் பின்னர் “பணிப்பாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான) ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியானவர் ஒரு முழுநேர அலுவல ராதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியத்தையும் ஏனைய நன்மைகளையும் பெறுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியே ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாதல் வேண்டும். அவர் மதியுரை கூறும் தன்மையில் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவினால் அவருக்குக் கையளிக்கப் பட்ட அத்தகைய தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைப் பிரயோகித்தலும், புரிதலும் அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும்.

10. (1) ஆணைக்குழுவானது ஆணைக்குழுவின் நிருவாகத்திற்கும், அலுவலர்களின் முகாமைக்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் அத்துடன் உசாவுநர்களையும் நியமிக்கலாமென்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் உசாவுநர்களுக்கும் கொடுபடற்பாலதான ஊதியத்தையும் அவர்களது சேவை நிபந்தனைகளையும் தீர்மானித்தலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய காலப் பகுதிக்கு

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க சேவையில் எவரேனும் அலுவலர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அத்துடன் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க சேவையில் எவரேனும் அலுவலர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(5) குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றிற்கு அரசாங்கத்தில் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை ஆணைக்குழு தொழிலுக்கமர்த்தியுள்ளவிடத்து, அவ்வாளினால் ஆணைக்குழுவுக்கான ஏதேனும் சேவைக்காலப் பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

11. (1) ஆணைக்குழுவின் வேண்டுதலின் பேரில் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் அத்தகைய அலுவலரினது அல்லது சேவையாளரினது அத்துடன் ஆளுஞ் சபையின் சம்மதத்துடன், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அதே சம்மதத்துடன் ஆணைக்குழுவினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபை யினாலும் உடன்பட்டுக் கொள்ளக் கூடியவாறான ஓய்வூதியம் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலானவை உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு (1) ஆம் உட் பிரிவின் கீழ் ஆள் எவரும் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அவர் பணியாட் டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினருக்கானதைப் போன்ற அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

12. (1) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழு அதன் ஏதேனும் தத்துவங்களைப் பணிகளை அத்துடன் கடமைகளைப் பிரயோகிப்பதனை, புரிவதனை அத்துடன் நிறை வேற்றுவதனை இயலச் செய்யும் நோக்கத்துக்காக, ஆணைக்குழு அல்லது ஆணைக் குழுவினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப் பெற்றுள்ள எவரேனும் ஆள் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டிருக்க வேண்டியதான அத்தகைய எவரேனும் ஆளுக்குத் தெரிந்ததான அல்லது அவரின் உடைமையிலுள்ளதான ஏதேனும் பகிரங்கத் தொழில் முயற்சியின் ஏதேனும் தொழில் அலுவல்கள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அத்தகைய விபரத்திரட்டுகளை அல்லது தகவலை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டிருக்க வேண்டியதான அத்தகைய காலப்பகுதிக்குள்

ஆணைக்குழுவுக்கு அல்லது அதிகாரமளிக்கப் பெற்ற ஆளுக்குக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றின் மூலம் ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆள் எவரும், அத்தகைய ஆள் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய விபரத்திரட்டைச் செய்வதினின்று அல்லது அத்தகைய தகவலை வெளியிடுவதினின்று தடை செய்யப்பட்டிருக்குமிடத்து தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நேரத்தினுள் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் அவரின் கடமையாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு அல்லது அதன் எவரேனும் உறுப்பினர் அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டபோது அல்லது ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காகத் தவிர, (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொள்ளப்பட்ட ஏதேனும் விபரத் திரட்டுக்களை அல்லது தகவலை எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்தலாகாது அல்லது அவற்றைப் பயன்படுத்தலாகாது.

13. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

14. ஆணைக்குழுவானது இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டுமெனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

15. தலைவரானவர், காலத்திற்குக் காலம், ஆணைக்குழுவின் வேலை தொடர்பாக, விபரத்திரட்டுகளையும், கணக்குகளையும், வேறு தகவலையும் அவர் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்கு கொடுத்துதவுமாறு ஆணைக் குழுவைப் பணிக்கலாமென்பதுடன் ஆணைக்குழுவானது அத்தகைய பணிப்புரை ஒவ்வொன்றையும் கொண்டு நடாத்துதலும் வேண்டும்.

16 (1) துடர்ச்சி அல்லது வழக்குத் தொடுப்பு எதுவும் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக் குழுவின் பணிப்புரையின் மேல் அத்தகைய உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு எதிராக அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலர்களுக்கு அல்லது சேவை யாளர்களுக்கு எதிராகத் தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது வழக்குத் தொடுப்பில் ஆணைக்குழுவினால் உறப்படும் செலவினம் எதுவும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சி அல்லது வழக்குத் தொடுப்பில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட அல்லது ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் ஆணைக்குழுவின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான எவரேனும் அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின் மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னராக அவருக்கெதிராகக் கொணரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில், அவரால் உறப்பட்ட ஏதேனும் செயலானது, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொள்ளுமாயின், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அத்தகைய செலவு அறவிடப்பட்டாலொழிய, ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

17. (1) (அ) பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் அவர் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கிணங்க ஏதேனும் விபரத் திரட்டுகளை அல்லது தகவலைக் கொடுக்கத் தவறுகின்ற :

(ஆ) பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாடுகளுக்கிணங்க அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் ஏதேனும் பொய்யான கூற்றை அறிந்து கொண்டே செய்கின்ற ;

(இ) பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கிணங்க அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் ஏதேனும் கருமத்தை வேண்டுமென்று தவிர்க்கின்ற ;

(ஈ) பன்னிரண்டாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ;

(உ) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரை அல்லது ஆணைக்குழுவின் அலுவலர் ஒருவரை அல்லது சேவையாளரை இச் சட்டத்தின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதினின்றும் வேண்டுமென்று தடுக்கின்ற

ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னராக சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் தவறொன்று, ஆட்கள் குழு ஒன்றினால் புரியப்படு மிடத்து –

(அ) அத்தகைய ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருந்தால், அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும் ;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாகவிருந்தால், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்குதாரரும் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் ;

ஆயின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளர் அல்லது ஓர் அலுவலர், அல்லது அத்தகைய குழுமத்தின் ஒரு பங்காளர், அவரது அறிவில்லாது அத்தகைய தவறு புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறைப் புரிவதற்கு எல்லா உரிய விழிப்புக் கவனமும் பிரயோகிக்கப்பட்டதென அவர் எண்பிப்பாரேயானால் அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படமாட்டார்.

18. (1) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவை உள்ளடக்கியதிலிருந்து, அத்துடன் உள்ளடக்கியபின் ஆணைக்குழுவின் இலாபமும் நட்டமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) 1979 ஆம் ஆண்டில் 28 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், ஆணைக் குழுவை உள்ளடக்கியதிலிருந்து அத்துடன் உள்ளடக்கிய பின் ஆணைக்குழுவின் ஒவ்வோர் அலுவலரதும், சேவையாளரதும், ஆலோசகரினதும் ஊதியங்கள் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழுவிற்குப் பணமாக அல்லது வேறுவகையாகச் செலுத்தப்பட்ட ஒரு நன்கொடை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நிதியத்திற்கு பணமாக அல்லது வேறு வகையாகச் செலுத்தப்பட்ட ஒரு நன்கொடையாகக் கருதப்படுதல் வேண்டும்.

19. ஆணைக்குழுவானது 5 ஆம் பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் செய்யப்பட்ட விதப்புரையைப் பின்பற்றி விடயத்திற்கேற்றாற்போன்று ஒவ்வொரு விற்பனை, அல்லது குத்தகை வாயிலான அல்லது வேறு வகையான கையுதிர்ப்பின் பின், அத்தகைய விற்பனை, அல்லது கையுதிர்த்தல் தொடர்பிலான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சருக்கூடாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

20. 1995 மார்ச் 1 ஆம் திகதி தொடங்கி, நியமனத் திகதியன்று முடிவடையும் காலத்தில் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சி சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென விசேட நடவடிக்கைப் பணிமுறைக் குழுவினால் செய்யப்பட்ட ஒரு செயல், அத்தகைய செயலைச் செய்வதற்கு சட்ட முறையாக அத்தகைய நடவடிக்கைப் பணிமுறைக் குழுவுக்கு அதிகாரமளிக்கப்படவில்லை என்ற நிகழ்வின் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக இல்லாமலுள்ளதென அல்லது செல்லுபடியற்றதாக இல்லாமலிருக்குமெனக் கருதப்படுதல் வேண்டும்.

21. (1) ஆணைக்குழுவானது அமைச்சின் அங்கீகாரத்துடன் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றல் தொடர்பாகவும், இச்சட்டத்தால் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் கசெற்றில் வெளியிடப்படுவதன் மேல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

22. இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே எதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

23. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி :-

"தவிசாளர்" என்பது 3 ஆம் பிரிவின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளர் என்று பொருளாகும்.

"உள்ளூரதிகார சபை" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை அல்லது ஏதேனும் பிரதேச சபை என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட, அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றிற்கு நேரொத்ததாகவுள்ள அல்லது ஒத்ததாகவுள்ள தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்.

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது கொடை மூலம், கடன் மூலம் அல்லது வேறு விதமாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியங்களைக் கொண்டு அல்லது மூலதனங்களைக் கொண்டு, கம்பனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள் ஆகும்.

"மாகாணசபை" என்பது அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சபை என்பது பொருளாகும்.

"பகிரங்க தொழில் முயற்சி" ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சியை அல்லது எந்தக் கம்பனியின் பங்குகளை அல்லது பங்குகளின் பெரும் பாலானவையை அரசாங்கம் வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பனியை உள்ளடக்குகிறது.

## அட்டவணை (பிரிவு 3)

## ஆணைக்குழு உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்

1. ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு உறுப்பினராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும் :-

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூரதிகார சபை உறுப்பினராக இருப்பின், அல்லது

(ஆ) அவர் இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டின் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றராகக் காணப்படின் அல்லது வெளியேற்றப்படின், அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கி முறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டு, பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக இருப்பின், அல்லது

(ஈ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்புக்கு உட்படுகின்றவராக அல்லது உட்பட்டவராக இருப்பின்,

2. ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சனாதிபதிக்கு அதன் சார்பில் முகவரியிடப்பட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் ஆணைக்குழுவிலிருந்து நீங்கலாம்.

3. அமைச்சர் அதற்கான காரணமெதுவும் குறிக்காமல் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரெவரையும் அகற்றலாம்.

4. (1) பதவிவழி உறுப்பினர், அவர் எந்தப் பதவியினைக் கொண்டு ஆணைக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டாரோ அந்தப் பதவியை அவர் வகிக்கும் வரை ஆணைக்குழுவின் உறுப்பினராகப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பின் மூலம், பதவி நீங்கல் மூலம் அல்லது அகற்றுகை மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலப் பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

ஆயின், இறக்கின்ற, அல்லது பதவி நீங்குகின்ற அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்ற ஓர் உறுப்பினரின் இடத்தில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினரொருவர் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுத் தவிசாளர் அல்லது ஆணைக்குழுவின் வேறெவரேனும் உறுப்பினர் சுகவீனம், உடற்றகுதியீனம், அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வருமிடத்து அமைச்சர், தவிசாளராகப் பதிற்கடமையாற்றுவதற்கு வேறெவரேனும் உறுப்பினரை, அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய ஆணைக்குழு தவிசாளரின் அல்லது ஆணைக்குழு உறுப்பினரின் இடத்திற் பதிற்கடமையாற்றுவதற்கென எவரேனுமாளை நியமிக்கலாம்.

5. தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, ஆணைக்குழு நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் செலுத்தப்பட வேண்டும்.

6. (1) ஆணைக்குழுத் தவிசாளரின் பதவிக்காலம், அவர் ஆணைக்குழுவில் உறுப்பாண்மை கொண்டுள்ள காலப்பகுதியின் போது (2) ஆம் (3) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அதற்கென அமைச்சருக்கு முகவரியிடப்பட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் தவிசாளர் என்ற பதவியிலிருந்து முன்னரே நீங்கலாம்.

(3) அமைச்சர், எந்நேரத்திலும், அதற்கான காரணமெதுவும் குறிக்காமல், தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

7. (1) தவிசாளர் ஆணைக்குழுக் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் ஆணைக்குழுக் கூட்டத்திற்கு வராதிருப்பின், அதில் சமூகமாயிருக்கும் ஆணைக்குழு உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும்.

(2) சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை ஆணைக்குழுவானது தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது, ஒவ்வோர் ஆறு பஞ்சாங்க மாதங்களிலும் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(4) ஒரு கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலையும் ஒழுங்குபடுத்துகின்ற விதிகளை ஆக்குதல் வேண்டும்.

8. (1) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழு காலத்துக்குக் காலம் முடிவு செய்யக் கூடியவாறாக அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினை, இரு உறுப்பினர்களின் சமூகத்திலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது ; அவர்கள் தாம் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிட வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் இலச்சினை எந்தச் சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை ஆணைக்குழு பேணுதல் வேண்டும்.

9. ஆணைக்குழுவானது, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமிருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் ; அத்துடன் ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அத்தகைய ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும் அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக இருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது.

# 1996 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க நாடு காக்கும் உதவுதொகைச் சட்டம்

[1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1996 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும் நாடு காக்கும் உதவுதொகை ஒன்றினை விதிப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடை நேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

1. இச்சட்டமானது, 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடு காக்கும் உதவுதொகைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் –

(அ) ஏதேனும் பதவியிலிருந்து அல்லது ஊழியத்திலிருந்து –

(i) இலங்கைப் பொலிசுப் படையின் உறுப்பினரொருவராக ; அல்லது

(ii) இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற் படையின் அல்லது இலங்கை வான் படையின் உறுப்பினரொருவராக,

ஏதேனும் பதவியிலிருந்தான அல்லது ஊழியத்திலிருந்தான எவையேனும் இலாபங்களைத் தவிர்த்து (உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களாகிய) இலாபங்கள் கிடைக்கப்பெறுகின்றவரான; அல்லது

(ஆ) பந்தி (இ) என்பதில் குறிப்பீடு செய்யப்படும் பங்காண்மையொன்றின் பங்காளர் ஒருவராக அல்லது சுயேட்சையான தன்மைத்தான ஏதேனும் உயர்தொழிலை, வாழ்க்கைத் தொழிலை அல்லது இதனையொத்த செய் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரான அல்லது பிரயோகிக்கின்றவரான (இதனகத்துப் பின்னர்) "சுயதொழில் புரியும் ஆள்" ஒருவர் எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான; அல்லது

(இ) பங்காண்மையில் ஏனையோருடன் சுயேட்சையான தன்மைத்தான ஏதேனும் உயர்தொழிலை, வாழ்க்கைத் தொழிலை, அல்லது இதனையொத்த செய்தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவரான அல்லது பிரயோகிக்கின்றவரான (இதனகத்துப் பின்னர் ஒரு "பங்காளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான) ; அல்லது

(ஈ) ஊழியர் ஒருவரும் சுயதொழில் புரியும் ஆளொருவரும், அல்லது ஊழியர் ஒருவரும் பங்காளர் ஒருவரும் அல்லது சுயதொழில் புரியும் ஆள் ஒருவரும் பங்காளர் ஒருவருமான ; அல்லது

(உ) ஊழியர் ஒருவரும் சுயதொழில் புரியும் ஆள் ஒருவரும் அத்துடன் பங்காளர் ஒருவருமான இலங்கைப் பிரசை ஒவ்வொருவருக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் இலங்கைப் பிரசை ஒவ்வொருவரும் இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் "இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள் ஒருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்)

3. (1) இச்சட்டத்தின் அடுத்துப் பின்வரும் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆள் ஒவ்வொருவரிடமிருந்தும் (இதனகத்துப் பின்னர் "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும், (இதனகத்துப் பின்னர் "உதவுதொகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "நாடு காக்கும் உதவுதொகை" என அழைக்கப்பட வேண்டியதும், அக்காலாண்டிற்கு (இச்சட்டத்தில் இதன் பின்னர் "உதவுதொகையாகச் செலுத்தப்படற்பால தான வேதனாதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்). அவ்வாளின் வேதனாதிகளின் மீது இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தோதான வீதங்களில் கணிக்கப்பட்டதுமான உதவுதொகையொன்று சுமத்தப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் அடுத்துப் பின்வரும் ஏற்பாடுகளுக்கமைய, இச் சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆளொருவரினால் இயைபான ஏதேனும் காலாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான உதவுதொகை, அத்தகைய ஆளினால் அக்காலாண்டின் முடிவை உடனடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

4. ஊழியர் ஒருவரான எந்த ஆளுக்கு இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரினதும் தொழில்தருநர் இயைபான காலாண்டொன்றில் ஒவ்வொரு மாதத்திற்கும் அத்தகைய தொழில்தருநரினால் அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான வேதனாதிகளிலிருந்து –

(i) அக்காலாண்டிற்கு அவ்வாளின் மாதாந்த வேதனாதிகளின் கூட்டு மொத்தம் நாற்பத்தையாயிரம் ரூபாவை விஞ்சுமாயின், ஆனால் தொண்ணூறாயிரம் ரூபாவை விஞ்சாதிருப்பின், அத்தகைய ஆளின் அத்தகைய மாதத்துக்கான வேதனாதிகளின் இரண்டு சத வீதத்திற்கு ; அல்லது

(ii) அக்காலாண்டிற்கு அவ்வாளின் மாதாந்த வேதனாதிகளின் கூட்டு மொத்தம் தொண்ணூறாயிரம் ரூபாவை விஞ்சுமாயின், அத்தகைய ஆளின் அத்தகைய மாதத்துக்கான வேதனாதிகளின் மூன்று சதவீதத்திற்கு சமமான தொகையொன்றைக் கழிப்பனவு செய்தலும் அத்துடன் அத்தகைய தொகையை, அத்தகைய தொகை அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட மாதத்தின் முடிவை உடனடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

5. இயைபான காலாண்டின் ஏதேனும் மாதத்திற்கு, 4 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான முறையில், அப்பிரிவின் கீழ் கழிக்குமாறும் அனுப்புமாறும் அவர் தேவைப்படுத்தப்பெற்ற ஏதேனும் தொகையை எவரேனும் தொழில்தருநர் கழிக்கத் தவறுகின்றவிடத்து, அல்லது கழித்துப் பின் அனுப்பத் தவறுகின்றவிடத்து, அத்தகைய தொகையானது அத்தகைய தொழில்தருநரிடமிருந்து அறவிடப்படலாம். உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 107, 108, 109 அத்துடன் 110 எனும் பிரிவுகளினதும் அத்தியாயம் XXI இனதும் ஏற்பாடுகள், அத்தகைய தொழில்தருநரால் கழிக்கப்பட வேண்டுமெனவும் அனுப்பப்பட வேண்டுமெனவும் அவ்வாறு

தேவைப்படுத்தப்பட்ட தொகைகளின் மதிப்பீடு கொடுப்பனவு மற்றும் அறவீட்டுக்கும் அத்துடன் அத்தகைய தொகைகளின் கொடுப்பனவின் தவறுகைக்கான தண்டங்களுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

6. ஊழியரொருவராகவுள்ளவரும் இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றவருமான ஆள் ஒருவர் தொடர்பில் 4 ஆம் பிரிவின் கீழ் இயைபான காலாண்டு ஒன்றிற்குக் கழிக்கப்பட்ட அத்துடன் அனுப்பப் பட்ட தொகைகளின் கூட்டு மொத்தம், அத்தகைய காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான உதவுதொகைக்குக் குறைவாகவிருக்குமிடத்து, அத்தகைய ஆள், அக்காலாண்டின் முடிவிலிருந்து பதினைந்து நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய உதவுதொகைக்கும் அவ்வாறு கழிக்கப்பட்டு அனுப்பப்பட்ட தொகைக்கும் இடையேயான வித்தியாசத்தைச் செலுத்துதல் வேண்டும்.

7 (1) இச்சட்டம் ஏற்புடைத்தாகின்ற ஆளினால் செலுத்தப்படற்பாலதான உதவுதொகை அல்லது அதன் பாகம் அத்தகைய உதவுதொகையின் கொடுப்பனவுக்காக 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்படாதவிடத்து அல்லது ஏதேனும் உதவுதொகை அல்லது அதன் பாகம் ஏதேனும் இயைபான காலாண்டிற்கு மதிப்பீட்டாளர் ஒருவரினால் மதிப்பீடு செய்யப்பட்டு, மதிப்பீட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்டிருக்குமிடத்து அவ்வாறு செலுத்தப்படாவிட்டால், அத்தகைய உதவுதொகை அல்லது அதன் பாகம் விடயத்திற்கேற்றாற் போன்று 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து அல்லது அத்தகைய மதிப்பீட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து தவணை தவறியதாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அத்திகதியிலிருந்து இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவர் ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் உதவுதொகை அல்லது அதன் பாகம் தவணை தவறுகையில் உள்ளவிடத்து, தவணை தவறியவர் தவணை தவறுகையில் உள்ள உதவு தொகைக்கு அல்லது அதன் பாகத்திற்கு மேலதிகமாகப் பின்வருவனவற்றைச் செலுத்துதல் வேண்டும் :-

(i) தவணை தவறுகையில் உள்ள தொகையின் பத்து சதவீதத்திற்குச் சமமான தொகையினதான தண்டம் ஒன்றுடன் : அத்துடன்

(ii) அத்தகைய உதவுதொகை தவணை தவறுகையில் இருக்கத் தொடங்கியதன் பின்னர் முப்பது நாட்கள் முடியுமுன்னர் செலுத்தப்படாதவிடத்து, தவணை தவறியதாக அது இருக்கும் காலத்தின் போது முப்பது நாட்கள் கொண்ட ஒவ்வொரு மேலதிக காலப் பகுதி தொடர்பிலும் அல்லது அதன் பாகம் தொடர்பிலும் தவணை தவறிய உதவுதொகையின் இரண்டு சதவீதத்திற்குச் சமமான மேலதிகத் தண்டம் ஒன்றும் :

ஆயின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டின் கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை, எவ்விடயத்திலும் தவணை தவறிய உதவுதொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது.

8. விவரத் திரட்டுகள், மதிப்பீடுகள், மதிப்பீடுகளின் இறுதியாந் தன்மை, பிழையான விவரத் திரட்டுகளுக்கான தண்டம், வருமான வரியை அறவிடுதலும் மீளச் செலுத்துதலும் என்பது தொடர்பான உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் xiii எனும் அத்தியாயத்தினதும் (94 ஆம் 95 ஆம் பிரிவுகளைத் தவிர) xviii, xix, xxi அத்துடன் xxiii எனும் அத்தியாயங்களினதும் ஏற்பாடுகளும் வருமான வரிக்கெதிரான மேன்முறையீடுகள் தொடர்பான அச்சட்டத்தின் xviii ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளும் அச்சட்டத்தின் கீழான விடயங்கள், தண்டங்கள், தவறுகளும் பொது விடயங்களும் என்பன தொடர்பான அச்சட்டத்தின் xxii, xxiv அத்துடன் xxvi ஆகிய அத்தியாயங்களின் ஏற்பாடுகளும் அச்சட்டத்தின் நிர்வாகம் தொடர்பான அச்சட்டத்தின் xxv ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளும் இச்சட்டத்தின் கீழான மதிப்பீடுகளுக்கும் மதிப்பீடுகளின் இறுதியாந்தன்மைக்கும் பிழையான விவரத் திரட்டுகளுக்கும் இச்சட்டத்தின் கீழ் கொடுபடற்பாலதான உதவுதொகையின் அறவீட்டிற்கும், மீள் கொடுப்பனவுக்கும் அத்தகைய உதவுதொகைக்கெதிரான மேன்முறையீடுகளுக்கும் இச்சட்டத்தின் கீழ் எழும் நானாவித விடயங்களுக்கும் தண்டங்களுக்கும் தவறுகளுக்கும், பொதுக் கருமங்களுக்கும் அத்துடன் இச்சட்டத்தின் நிருவாகத்திற்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

10. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"ஆணையாளர் தலைமையதிபதி", "ஆள்" மற்றும் "முன்னுறு பங்காளர்" என்பன, உண்ணாட்டரசிறைச் சட்டத்தினால் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அவ்வக் கருத்துக்களைக் கொண்டவையாகும் ;

"தொழில் தருநர்" என்பது –

(அ) ஊழியர் ஒருவராக ஒரு தனியாள் சேவைகளைப் புரிகின்ற ;

(ஆ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கருத்துக்குள்ளாகத் தொழிலில் இருந்து எவையேனும் இலாபங்களைச் செலுத்துகின்ற ;

(இ) எவரேனும் முன்னைய ஊழியருக்கு அல்லது வேறெவரேனும் ஆளுக்கு அத்தகைய ஊழியரின் கடந்த காலச் சேவைகளுக்காக ஏதேனும் ஓய்வூதியத்தை அல்லது வேறு ஊதியத்தைச் செலுத்துகின்ற

எவரேனும் ஆள், பங்காண்மை, ஆட்கள் குழு அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும் என்பதுடன், இதன் கீழான I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட குழு, நிறுவனம் அல்லது ஆள் தொடர்பான விடயத்தில் இதன் கீழான II ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட ஆளையும் உள்ளடக்கும் :–

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. ஒரு கம்பெனி அல்லது கூட்டிணைக்கப் பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு | அத்தகைய கம்பெனியின் அல்லது ஆட்கள் குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு பிரதான அலுவலர். |
| 2. ஒரு பங்காண்மை. | முன்னுறு பங்காளர் அல்லது இலங்கையில் வதியும் எவரேனும் முனைப்பான பங்காளர் ; அத்துடன் முனைப்பான பங்காளர் இலங்கையில் வதியாதவொரு பங்காண்மையின் விடயத்தில் அத்தகைய பங்காண்மையின் இலங்கையிலுள்ள முகவர். |
| 3. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி. | வேதனாதிகளின் கொடுப்பனவுக்குப் பொறுப் பான ஆள். |
| 4. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது அமைச்சர்களின் அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், ஒரு மாகாணத்தின் ஆளுநர், ஒரு மாகாணத்தின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவர், ஒரு மாகாண சபையின் உறுப்பினர். | – மேற்படி – |
| 5. அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான எவரேனும் நீதித்துறை அலுவலர். | – மேற்படி – |
| 6. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 9 (1) (ஆஆ) (x) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒருவர் | – மேற்படி – |

"வேதனாதிகள்" என்பது, ஏதேனும் இயைபான காலாண்டு தொடர்பாகவும், இச்சட்டம் ஏற்புடைத்தாகின்ற எவரேனும் ஆள் தொடர்பாகவும் –

(அ) அவர் ஊழியரொருவராகவிருப்பின், உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 (1) அ (1) என்னும் பிரிவின் கருத்திற்குட்பட அத்தகைய காலாண்டுக்கு அத்தகைய ஆளின் தொழிலிலிருந்து மேலதிக நேரக் கொடுப்பனவைத் தவிர, (இலங்கையில் எழுகின்ற, அல்லது" திரளுகின்ற அல்லது செலுத்தப்படுகின்ற) இலாபம் எனப் பொருள்படும்.

(ஆ) சுயதொழில் புரியும் ஓர் ஆளாகவிருப்பின், 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கருத்திற்குட்பட, அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் உயர்தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது ஒரு சுயேச்சையானதான இதையொத்த செய்தொழில் என்பவற்றிலிருந்து எழுகின்ற அத்தகைய காலாண்டிற்கு அத்தகைய ஆளின் மொத்த விற்பனை வரவின் ஐம்பது சத வீதம் எனப் பொருள்படும் ;

(இ) ஒரு பங்காளராகவிருப்பின், அத்தகைய மொத்த விற்பனை வரவின் இருபத்தைந்து சத வீதம் அத்தகைய பங்காண்மையின் பிரிபடக் கூடிய இலாபம் அத்தகைய பங்காளர்களிடையே பகிர்ந்தளிக்கப்படற்பாலதான விகிதாசாரத்தில் அத்தகைய பங்காண்மையின் பங்காளரிடையே பகிர்ந்தளிக்கப்படுமாயின், அத்தகைய பங்காளருக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதாய் அவர் பங்காளராகவுள்ள அத்தகைய பங்காண்மையின் அத்தகைய காலாண்டுக்கு 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கருத்திற்குட்பட மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் எனப் பொருள்படும் ;

(ஈ) ஓர் ஊழியராக அத்துடன் ஒரு சுயதொழில் புரியும் ஓர் ஆளாக அல்லது ஓர் ஊழியராக அத்துடன் ஒரு பங்காளராக அல்லது ஒரு சுயதொழில் புரியும் ஓர் ஆளாக அத்துடன் ஒரு பங்காளராக இருப்பின், விடயத்திற்கேற்ப (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டு மொத்தம் அத்துடன் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவின் நூற்று வீதம் அல்லது (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்கள் அத்துடன் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவின் பாகம் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவின் ஒரு நூற்றுவீதம் அத்துடன் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவின் பாகம் எனப் பொருள்படும் ;

(உ) ஊழியர் ஒருவர் அத்துடன் சுய தொழில் புரியும் ஓர் ஆளாக அத்துடன் ஒரு பங்காளராக இருப்பின், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களின் கூட்டு மொத்தம் அத்துடன் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவின் நூற்றுவீதம் அத்துடன் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவின் பாகம் எனப் பொருள்படும்.

'உண்ணாட்டரசிறைச் சட்ம் " என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப் பொருள்படும்.

## அட்டவணை

(பிரிவு 3)

| ஓர் இயைபான காலாண்டிற்கான வேதனாதிகள் | வீதம் |
|---|---|
| ஓர் இயைபான காலாண்டிற்கு இச்சட்டம் எந்த ஓர் ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஓர் ஆளின் வேதனாதிகள், நாற்பத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து – | இல்லை. |
| ஓர் இயைபான காலாண்டிற்கு இச்சட்டம் எந்த ஓர் ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஓர் ஆளின் வேதனாதிகள், நாற்பத்தையாயிரம் ரூபாவை விஞ்சி ஆனால் தொண்ணூறாயிரம் ரூபாவை விஞ்சாதிருக்கின்ற. | அத்தகைய வேதனாதிகளின் 2 சதவீதம். |
| ஓர் இயைபான காலாண்டிற்கு இச்சட்டம் எந்த ஓர்ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஓர் ஆளின் வேதனாதிகள் தொண்ணூறாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து. | அத்தகைய வேதனாதிகளின் 3 சதவீதம். |

# 1996ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்.

[1996, மார்ச் மாதம் 25ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க முத்திரைத் தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1993ஆம் ஆண்டின் 63ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 5ஆம் பிரிவு, அப்பிரிவின் (23)ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

" (24) கடன் பிணைப்பொறுப்பொன்றைக் கைமாற்றுவதற்காக நிறைவேற்றப்படும் சாதனம்;

(25) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்துக்குட்பட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றினால், அல்லது அதன் சார்பில், அல்லது அதற்குச் சாதகமாக நிறைவேற்றப்படும் சாதனம் அல்லது அச்சட்டத்தின் 59ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றிச் சட்ட நீதிமன்றத்தில்கோப்பிடப்பட்ட ஆவணம் ; அத்துடன்

(26) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்துக்குட்பட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றின் உறுப்பினரொருவரால், அத்தகைய பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்குச் சாதகமாகவும் அத்துடன் அதன் தொழில் தொடர்பாகவும் நிறைவேற்றப்பட்ட சாதனம்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70ஆம் பிரிவு அப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71ஆம் பிரிவு "வரவு வைக்கப்பட்ட அட்டை கம்பெனி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

" கடன் பிணைப் பொறுப்பு" என்பது எந்த முறி, பத்திரம், தொகுதிக் கடன் பத்திரம், கடன், பங்குத் தொகுதி அல்லது வேறு பிணைப் பொறுப்பு அல்லது சாதனம் என்பவற்றில் விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைப் பகிரங்கக் கம்பெனி ஒன்றின் கடப்பாடு உருவாக்கப்படுகின்றதோ, பதியப்படுகின்றதோ அல்லது ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ அத்துடன் 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவாத்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் விற்பனை செய்யப்பட்ட அல்லது கைமற்றப்படக் கூடுமோ அந்த ஏதேனும் முறி, பத்திரம், தொகுதிக் கடன் பத்திரம், கடன் பங்குத் தொகுதி அல்லது வேறு பிணைப் பொறுப்பு அல்லது சாதனம் எனப் பொருளாகும்."

5. இச் சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மதுவரி (திருத்தச்) சட்டம்.

[1996, மார்ச் மாதம் 25ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 15ஆம் பிரிவு அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "மதுவடிப்பாலை அல்லது குதம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மதுவடிப்பாலை, மதுபான உற்பத்திச் சாலை அல்லது குதம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் –

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் "வடிசாலைகளும், மதுவடிப்பாலைகளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வடிசாலைகளும், மதுவடிப்பாலைகளும் மதுபான உற்பத்திச் சாலைகளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியில் "மதுவடிப்பாலைகள் அல்லது குதங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மதுவடிப்பாலைகள், மதுபான உற்பத்திச் சாலைகள், அல்லது குதங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிவிரின் "மதுவடிப்பாலை அல்லது குதம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மதுவடிப்பாலை, மதுபான உற்பத்திச் சாலை அல்லது குதம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "வடிசாலை அல்லது மது வடிப்பாலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வடிசாலை, மது வடிப்பாலை அல்லது மதுபான உற்பத்திச்சாலை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு அப்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் "வடிசாலை அல்லது மதுவடிப்பாலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வடிசாலை, மதுவடிப்பாலை, மதுபான உற்பத்திச் சாலை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "மதுவடிப்பாலை அல்லது குதம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மதுவடிப்பாலை, மதுபான உற்பத்திச் சாலை அல்லது குதம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலாங்கி நிற்றல் வேண்டும்.

# 1996ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்.

[1996, ஜூன் மாதம் 20ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் –

(அ) அவ்வுட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில் உள்ள "பொறித் தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனம் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான மொத்த விற்பனை வரவாகவிராத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவாகவிராத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் விடயத்தில் உள்ள "பொறித் தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது சாதனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் மோட்டார்க் காராக, மோட்டார்க் கோச்சாக அல்லது லொறியாகவல்லாத ஏதேனும் பொறித்தொகுதியின், எந்திரத்தொகுதியின் அல்லது சாதனத்தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் –

(அ) அவ்வுட்பந்தியின் (அ) என்னும் விடயத்தில் உள்ள "பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனம் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்திலியிருந்து எழுகின்றதான மொத்த விற்பனை வரவாகவிராத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவாகவிராத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்,

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் விடயத்தில் உள்ள "பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, அல்லது சாதனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் மோட்டார்க் காராக, மோட்டார்க் கோச்சாக அல்லது லொறியாகவல்லாத ஏதேனும் பொறித்தொகுதியின், எந்திரத்தொகுதியின் அல்லது சாதனத்தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு, "பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனம்" என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை, அவ்வட்டவணையின் 6ஆம் விடயத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"6. 1996 சனவரி 1ஆம் திகதியன்றோ, அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் 1997 சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு –

(i) இவ்விடயத்தின் (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவு தவிர்ந்த மொத்த விற்பனை வரவின் மீது

4.5 சதவீதம்.

(ii) (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் மோட்டார்க் கார், மோட்டார்க் கோச்சு, அல்லது பொறி தவிர்ந்த ஏதேனும் பொறித் தொகுதியை, எந்திரத்தொகுதியை அல்லது சாதனத்தை இறக்குமதி செய்வதிலிருந்து அல்லது உற்பத்தி செய்வதிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவின் மீது

2 சதவீதம்"

5. இச்சட்டத்தின் 2ஆம், 3ஆம், 4ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும், 1995 திசெம்பர் 29ஆம் திகதி வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்.

[1996, ஜூலை மாதம் 17ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

*1.* இச்சட்டம், 1996ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2.* (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :

(1) அப்பந்தியின் **(LXIX)** என்னும் உட்பந்தியில், "ஜப்பான் கடல் கடந்த பொருளாதாரக் கூட்டுறவு நிதியம்; அத்துடன் ; " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஜப்பான் கடல் கடந்த பொருளாதாரக் கூட்டுறவு நிதியம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அப்பந்தியின் **(LXX)** என்னும் உட்பந்தியில் "உலகப் பேணிக் காத்தல் சங்கம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உலகப் பேணிக் காத்தல் சங்கம் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் **(LXX)** என்னும் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் –

" **(LXXI)** 1976ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க இலங்கை ஆளணி முகாமைத்துவ நிறுவகச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை ஆளணி முகாமைத்துவ நிறுவகச் சட்டம்;

**(LXXII)** 1996ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக் குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு."

*3.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

"(1) அப்பிரிவின் (அஅ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்.

(1) "(அஅஅ) எந்தக் கம்பனியுடன் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் 1995 நவம்பர் 8ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளதோ அந்தக் கம்பனியொன்றினால், அந்த உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் அக்கம்பனியின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் விலக்களிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியின் போது அல்லது அதன் பின்னர் ஓராண்டிற்குள் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து அக்கம்பனியின் ஏதேனும் பங்குதாரருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம்" ;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "17ஒ ஆம், 18ஆம்" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக, "17ஒ, 17ஒ, 18 என்னும்" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (இ) என்னும் பிரிவின் "பந்தி (அ) வில் அல்லது பந்தி (ஆ) வில் என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பந்தி (அ) அல்லது பந்தி (அஅ) வில் அல்லது பந்தி (அஅஅ) அல்லது பந்தி (ஆ)வில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பந்தியின் (இஇ) என்னும் பந்தியில் "(அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக அச்சொற்கள், அப்பந்தியில் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் "பந்தி (அ) அல்லது பந்தி (அஅ) அல்லது பந்தி (அஅஅ) அல்லது பந்தி (ஆ)" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்.

"(மம) 1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டுத் தொழில் பணியகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டுத் தொழில் பணியகத்தால் எந்த இலங்கையருக்கு இல்ங்கைக்கு வெளியே தொழில் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளதோ அல்லது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த இலங்கையர் தொடர்பில் 1990 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் எதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய பணியகத்தால் பெறப்பட்ட இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாததான ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம் ;"

(2) அப்பிரிவின் (ய) என்னும் பந்தியில் "எவையேனும் இலாபங்களும் வருமானங்களும் ; அத்துடன் என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவையேனும் இலாபங்களும் வருமானங்களும் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் ( ர ) என்னும் பந்தியில் "பணத்தொகைகளின் கூட்டுமொத்தத்தின் அத்தகைய பாகம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணத்தொகைகளின் கூட்டுமொத்தத்தின் அத்தகைய பாகம் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (ர) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்.

"(ல) தேசிய லொத்தர் சபையால் நடத்தப்படும் விவசாயிகளின் லொத்தரிலிருந்து கிடைக்கும் இலாபங்களும் வருமானமும்."

5. பிரிவு 17ஒ என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 17ஒ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

17ஓ. (1) இரண்டாம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்டதும் எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் தயாரிப்பிற்கு அல்லது உற்பத்திக்கு அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதற்கு ஏதேனும் பொறுப்பு முயற்சியின் புதிய மூலதனச் செலவினத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலனவான இலாபங்களும் வருமானமும், இயைபான திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொருகாலப் பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் -

(அ) இயைபான திகதியிலிருந்து தொடங்கும் பன்னிரெண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் மேம்பாடடைந்த தொழில்நுட்பவியலைப் பெற்றுப் பயன்படுத்துவதன் மீது பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத தொகையான புதிய மூலதனச் செலவினத்தை உற்றிருக்கின்றதும் ; அத்துடன்

(ஆ) அதன்பொருட்டு 1996 செத்தெம்பர் 30ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பமொன்றின் மீது, 1997, மார்ச் 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், இப்பிரிவு எந்தப் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்தப் பொறுப்பு முயற்சியொன்றாக இருப்பதாக அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதும் ; அத்துடன்

(இ) இயைபான திகதியன்று உள்ளவாறு அல்லது அத்தகைய திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் சொல்லப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி முடிவடையும் வரை, இயைபான திகதியன்று முடிவடையும் ஆண்டின் போது அப்பொறுப்பு முயற்சியால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்களின் சராசரி எண்ணிக்கையைவிடக் கூடுதலாக, ஐம்பதுக்குக் குறையாத ஊழியர்களை தொழிலுக்கமர்த்தியுள்ளதும் தொடர்ந்து தொழிலுக்கமர்த்துகின்றதுமான ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

ஆயினும் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் சொல்லப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப் பகுதிக்குட்பட்ட வரிமதிப்பீட்டாண்டின் போது, ஏதேனும் நேரத்தில், அத்தகைய பொறுப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையானது அத்தகைய சராசரி எண்ணிக்கையை ஐம்பதால் விஞ்சாத விடத்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அப்பொறுப்பு முயற்சியின் அத்தகைய இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதலாகாது.

இப்பந்தியில், "ஊழியர்" மற்றும் "சராசரி எண்ணிக்கை" என்னும் சொல்லமைப்புகள் 16ஈ என்னும் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (IV) என்னும் உட்பந்தியின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட அந்தந்த பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்திற்கு –

(அ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் ஏதேனும் பொறுப்பு முயற்சி தொடர்பிலும் "புதிய மூலதனச் செலவினத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான இலாபங்களும் வருமானமும்" என்னும் சொல்லமைப்பானது –

(i) மூன்றாம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் (எவையேனும் மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து அல்லது எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் கொள்வனவிலும் மறு விற்பனையிலுமிருந்து வருகின்றவையான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு எற்புடைத்தானதாக இருக்கின்றவாறு இப்பந்திக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான நூற்றுவீதத்தால் குறைக்கப் பட்டதான அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு இப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் ;

(ii) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அப்பொறுப்பு முயற்சியானது, இயைபான திகதிக்கு முன்னர் மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப் பகுதிக்கு அல்லது அதற்கு மேல் தொழிலைக் கொண்டு நடாத்தி வருகின்றவிடத்து, இயைபான திகதிக்கு உடன் முன்னரான மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு கணிப்பிடப்பட்ட, அல்லது பொறுப்பு முயற்சி, இயைபான திகதிக்கு முன்னர் மூன்றாண்டுகளுக்குக் குறைவானவொரு காலப்பகுதிக்குத் தொழிலைக் கொண்டு நடாத்தி வருகின்றவிடத்து அது தொழிலைக் கொண்டு நடாத்தி வந்த முழுக் காலப் பகுதிக்கும் கணிப்பிடப்பட்ட அப்பொறுப்பு முயற்சியின் ஆண்டு சராசரி அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் ஆண்டு சராசரியைவிட எந்தத் தொகையால் விஞ்சுகின்றதோ அந்த விஞ்சு தொகை என்று பொருள்படும்.

ஆனால், 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் (எவையேனும் மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான அல்லது எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் கொள்வனவிலும் மறு விற்பனையிலுமிருந்தான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) புதிய மூலதனச் செலவினத்தினதும் எவையேனும் பொருட்களின் அல்லதுபண்டங்களின் தயாரிப்பிற்கு அல்லது உற்பத்திற்கு அல்லது இயைபான திகதியன்று அத்தகைய பொறுப்பு முயற்சியால் எவையேனும் சேவைகளை ஏற்பாடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த ஏதேனும்.

(i) பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, பொருத்திகள் அல்லது உபகரணம் ; அத்துடன்

(ii) ஓராம் உட்பந்தியில் உள்ளடக்கப்படாத சொத்து (ஏதேனும் காணியை அல்லது கட்டிடத்தைத் தவிர)

என்பவற்றின் கொள்ளளவின் போது அவற்றின் பெறுமதியினதும் கூட்டு மொத்தத்துடன் எந்த விகிகதாசாரத்தில் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில் கொண்டுள்ள பணத்தொகையின் நூற்றி இருபது சதவீதத்தை விஞ்சுதலாகாது. ;

ஆயினும், மேலும் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் பொறுப்பு முயற்சியானது, 17 ஊ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் பொறுப்பு முயற்சியாகவும் இருக்குமிடத்து, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் கூடுதலான நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்யும் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பொறுப்பு முயற்சி தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அட்டவணை

இயைபான திகதி எந்த வரிமதிப்பீட்டாண்டில் வருகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டு (இதனகத்துப் பின்னர் இந்த அட்டவணையில் “இயைபான ஆண்டு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 10 சத வீதம்.

| | | |
|---|---|---|
| இயைபான ஆண்டை அடுத்துறும் முதலாம் ஆண்டு | 10 | சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் இரண்டாம் ஆண்டு | 12.5 | சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் மூன்றாம் ஆண்டு | 15 | சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் நான்காம் ஆண்டு | 17.5 | சதவீதம் |
| இயைபான ஆண்டை அடுத்துறும் ஐந்தாம் ஆண்டு | 20 | சதவீதம் |

(ஆ) “இயைபான திகதி” என்னும் சொல்லமைப்பு 1995 நவம்பரை முந்தாமலும் 1997 ஏப்பிரலைப் பிந்தாமலும் அத்துடன் அப்பொறுப்பு முயற்சியால் தெரிவு செய்யப்பட்டு அம்மாதத்தின் கடைசித் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் – தலைமை அதிபதிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும் ஏதேனும் பஞ்சாங்க மாதத்தின் முதலாம் நாள் என்று பொருள்படும்;

ஆயினும், இயைபான திகதி அவ்வாறு ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படாதவிடத்து, 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியானது இயைபான திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) “புதிய மூலதனச் செலவினம்” என்னும் சொல்லமைப்பானது, மேம்பாடடைந்த தொழில்நுட்பவியலைப் பெறுவதற்காகவும் பயன்படுத்துவதற்காகவும் அப்பொறுப்பு முயற்சியால் ஏதேனும் –

(i) புதிய பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, பொருத்திகள் அல்லது உபகரணம்; அத்துடன்,

(ii) ஓராம் உட்பிரிவில் உள்ளடக்கப்படாத சொத்து (ஏதேனும் காணியை அல்லது கட்டிடத்தைத் தவிர)

என்பனவற்றின் கொள்வனவில் உறப்பட்டசெலவினம் என்று பொருள்படும்;

ஆயினும், இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அப்பொறுப்பு முயற்சியின் சொத்துக்களின் பாகமாக அமைந்த பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி பொருத்திகள் அல்லது உபகரணம் எதனையும் இயைபான திகதியின் பின்னர் மாற்றீடு செய்வதில் உறப்பட்ட ஏதேனும் செலவினம், புதிய மூலதனச் செலவினம் அல்லவெனக் கருதப்படுதல் வேண்டும்.”

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஈஈஈஈ என்னும் பிரிவு "ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏழு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு, அப்பிரிவின் 5ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் "அவ்வாளுக்கு ஏற்புடைத்தலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வாளுக்கு ஏற்புடைத்தலாகாது;

ஆயின், மேலும் (அ) என்னும் பந்தியின் (1)ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளில் உள்ளது எதுவும், எவரேனும் ஆளினால் அவ்வாள், மூலதனச் சொத்துக்களை வாடகைக்கு விடும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு கம்பனியாயிருப்பின், 1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் வாடகைக்கு விடப்பட்டிருக்கும் ஏதேனும் மூலதனச் சொத்து தொடர்பில் ஏற்புடைத்தாதல் ஆகாது." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. –

"இப்பந்தியின் நோக்கங்களுக்காக வட்டி" என்னும் பதம், 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

(i) ஏதேனும் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கு அல்லது கொள்வனவிற்கு அல்லது ஏதேனும் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கென ஏதேனும் இடத்தின் கொள்வனவிற்கு ;

(ii) விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பனி எதனிலும் ஏதேனும் பங்கின் கொள்வனவிற்கு;

(iii) ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயன்படுத்துவதற்கு ஏதேனும் மூலதனச் சொத்தைப் பெறுவதற்கு எனப் பெறப்பட்ட கடனொன்றின் மீது செலுத்தப்பட்ட ஏதேனும் வட்டி என்று பொருள்படும்."

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅஅ) என்னும் பந்தியில் "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அறுபதினாயிரம் ரூபா படியொன்றுடன் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அறுபதினாயிரம் ரூபா படியொன்றுடன்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அஅஅஅஅ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் ;

“(அஅஅஅஅஅ) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டு தொடர்பில் ஒரு இலட்சம் ரூபா படியொன்றுடன் அத்துடன்” ; அத்துடன் ;

(இ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் “(அஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது “(அஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “(அஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅ) என்னும் பந்தியில் அல்லது (அஅஅஅஅஅ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்

(அ) அவ்வப்பிரிவிற்கான முதலாம் காப்பு வாசகத்தில்,

(i) அக்காப்பு வாசகத்தின் (எ) என்னும் பந்தியில், “1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக “1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும்,” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அக்காப்பு வாசகத்தின் (எ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் -

“(எ) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் ஒரு இலட்சம் ரூபா விடு தொகையொன்று;

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான இரண்டாம் காப்புவாசகத்தில் -

(i) அக்காப்பு வாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியில், “இருக்குமிடத்து இருபத் தேழாயிரம் ரூபாவுக்கும், அத்துடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “இருக்குமிடத்து இருபத்தேழாயிரம் ரூபாவுக்கும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அக்காப்பு வாசகத்தின் (iii) ஆம் உட்பந்தியில், “1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் மதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து அறுபதினாயிரம் ரூபாவுக்கு” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக “1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து அறுபதினாயிரம் ரூபாவுக்கு; அத்துடன்” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்,

(iii) அக்காப்பு வாசகத்தின் (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் -

“ (iv) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 1996 ஏப்பிரல்1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டொன்றாக இருக்குமிடத்து ஒரு இலட்சம் ரூபாவுக்கு; ”

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் “1979 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்காக” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “1979 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1996 ஏப்பிரல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (5ஈ) என்னும் உட்பிரிவில் “1990 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “1990 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 1996 ஏப்பிரல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) உட்பிரிவு (5ஈ) என்பதனை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் –

“(5உ) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு –

(அ) கம்பெனியொன்றைத் தவிர வேறு எவரேனும் ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்திலிருந்து –

(i) இரண்டாம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங), (ட) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவைகளைத் தவிர வேறு எல்லாத் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அவரால் செய்யப்பட்ட அல்லது அவரால் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட கழிப்பனவு அத்தகைய வரிவிதிக்கப் படற்பாலதான வருமானத்தின் மூன்றிலொரு பங்கு அல்லது இருபத் தையாயிரம் ரூபா என்பவற்றில் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகையை விஞ்சுதலாகாது ;

(ii) இரண்டாம் உட்பிரிவின் (இ), (க), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாத் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அவரால் செய்யப்பட்ட அல்லது அவரால் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட கழிப்பனவு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது ;

(iii) இரண்டாம் உட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாத் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட கழிப்பனவு அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மூன்றிலொரு பங்கை விஞ்சுதலாகாது ; அத்துடன்,

(iv) இவ்வுட்பிரிவின் (i) ஆம் (ii) ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் எல்லாத் தகைமையளிக்கும் கொடுப்பனவுகளினதும் கூட்டு மொத்தம் தொடர்பில் அத்தகைய கழிப்பனவு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது. ;

(ஆ) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் கம்பனியின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்து (2)ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவைகளைத் தவிர வேறு எல்லாத் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் அக்கம்பனியால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட கழிப்பனவு அத்தகைய வரிவிதிக்கப்படற் பாலதான வருமானத்தின் ஐந்திலொரு பங்கை விஞ்சுதலாகாது."

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்(viii)ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் –

"(ix) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11எ என்னும் பாகத்தில் விதித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில் ;"

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில்,

(அ) அக்காப்பு வாசகத்தின் (v) ஆம் உட்பந்தியில், "1992 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், 1995 ஏப்பிரல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும், அத்துடன் " என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 1995 ஏப்பிரல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்திரண்டாயிரம் ரூபாவையும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அக்காப்பு வாசகத்தின் (vi) ஆம் உட்பந்தியில் "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும் அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அக்காப்பு வாசகத்தின் (vi)ஆம் உட்பந்தியை உடனடுத்து பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் ;

"(vii) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாவையும்".

(3) அப்பிரிவின் (2)ஆம் உட் பிரிவில் –

அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "பணத்தொகையொன்றின் ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவாறான அத்தகைய பாகத்தைத் தவிர ஓய்வுபெறும் பணக் கொடையொன்றாக பெறப்பட்ட பணத்தொகை ஒன்று, அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணத்தொகையொன்றின் ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபா ; அல்லது

சேவையில் பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்கப்பட்டு அத்தகைய பணிக்கொடையைச் செலுத்துகின்றவரான தொழில்தருநரின் கீழ் ஏதேனும் தொழிலிலிருந்து அவர் ஓய்வுபெறுவதற்கு நேர் முந்திய மூன்று ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியின் போது அத்தகைய தனியாளுக்குச் செலுத்தப்பட்ட சராசரி மாதச் சம்பளத்திற்கு அல்லது கூலிக்குச் சமமான பணத்தொகை

என்பவற்றுள் எது கூடுதலானதோ அதனை விஞ்சுகின்றதான அத்தகைய பணத் தொகையின் அத்தகைய பாகத்தைத் தவிர ஓய்வுபெறும் பணிக்கொடையொன்றாகப் பெறப்பட்ட பணத்தொகை ஒன்று.

(ஆ) அவ்வுட்பிரிவின் (viii) ஆம் பந்தியில் "1994 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் "இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11எ என்னும் பாகத்தில் விதித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,

1994 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1996 ஏப்பிரல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஊ என்னும் பாகத்தில் அல்லது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (viii) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் ;

"(ix) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11எ என்னும் பாகத்தில் ;

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 இஇ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 இஇஇ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

இலங்கையில் ஊழியத்துக்கமர்த்தப் பட்டுள்ள பிரசை அல்லாத ஒருவரின் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப் பகுதிக்கான ஊழியத்திலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மீதான வருமானவரி வீதம்

(1) 32 இஇஇ (1) பிரிவு 67 என்பதன் (7) ஆம் உட்பிரிவின் கீழ் மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வதிவற்றவராகக் கருதப்பட்ட தனியாளொருவர் அத்தகைய காலப் பகுதி முடிவடைந்த பின்னர் தொடர்ந்தும் இலங்கையில் ஊழியத்திலிருக்குமிடத்து, மூன்றாண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப்பகுதியின் முடிவிலிருந்து தொடங்கும் இரண்டு ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப் பகுதிக்கு அத்தகைய தனியாளின் அத்தகைய ஊழியத்திலிருந்து கிடைக்கும் இலாபங்கள், இச்சட்டத்தின் முரணாக எது எவ்வாறிருப்பினும் பதினைந்து சதவீதப்படி வருமான வரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) 1995 நவம்பர் 8ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதும் பிரிவு 11 என்பதன் (அஅ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள்ளான ஃபிளாக் ஷிப் கம்பனியொன்றாகவுள்ளதுமான கம்பனியொன்றில் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ளவரும் 67ஆம் பிரிவின் (7)ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தின் கீழ் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வதிவற்றவராகக் கருதப்பட்டவருமான தனியாள் ஒருவர் ;

அத்தகைய காலப் பகுதி முடிவடைந்த பின்னர் அத்தகைய ஃபிளாக் ஷிப் கம்பனியில் தொடர்ந்தும் ஊழியத்திலிருக்குமிடத்து, ஐந்தாண்டுகளைக் கொண்ட அத்தகைய காலப் பகுதியின் முடிவிலிருந்து தொடங்கி அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் அத்தகைய ஃபிளாக் ஷிப் கம்பனியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் விலக்களிப்பு இல்லாதொழியும் திகதியன்று முடிவடையும் காலப் பகுதிக்கு அத்தகைய ஃபிளாக் ஷிப் கம்பனியில் ஊழியத்திலிருந்து கிடைக்கும் அத்தகைய தனியாளின் இலாபங்கள், இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பதினைந்து சதவீதப்படி வருமானவரி அறவிடப்படற்பாலனவாதல் வேண்டும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32உஉஉ என்னும் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது ;

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப் பீட்டாண்டாக" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் –

"(ஈ) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு, 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்தும் அத்துடன் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களின் தொகையானது –

(i) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்தும் – நாலாயிரத்து எண்ணூற்றி ஐம்பது ரூபாவுக்கு, அல்லது

அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரித்தொகைக்குச் சமமான தொகையொன்று என்பவற்றில் எது குறைவானதோ அது.

(ii) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்தும் ஆனால் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத விடத்தும் –

மூவாயிரத்து இருநூற்றி நாற்பத்தெட்டு ரூபா அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்கள் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவின் மீதான விஞ்சுதொகையின் ஐம்பத்து நாலு சதவீதத்தால் குறைக்கப்பட்டு வரும் தொகைக்கு அல்லது

அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தனியாளின் ஊழியத்திலிருந்து இயைபான இலாபங்களுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான வருமான வரியின் தொகை

என்பவற்றுள் எது குறைவானதோ அதற்குச் சமமான ஒரு தொகை ".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஔ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (iii) ஆம் பந்தியில் "முதலாவதாகக் கூறப்பட்ட பங்கிலாபம் பெறப்படும் திகதியிலிருந்து ஓராண்டுக்குள்ளாக அத்தகைய கம்பனியினால் செலுத்தப்பட்டவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முதலாவதாகக் கூறப்பட்ட பங்கிலாபம், அக்கம்பனியால், இரண்டாவதாகக் கூறப்பட்ட பங்கிலாபம் பெறப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் போது அல்லது அதன் பின்னர் ஓராண்டிற்குள் செலுத்தப்பட்டிருப்பின் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (i) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் ;

"(அ) பிரிவு 32ஏ என்பதில் அல்லது பிரிவு 32ஓ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையளிக்கப்பட்ட ஏற்றுமதி இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து, அல்லது

பிரிவு 32க என்பதில் அல்லது பிரிவு 32ங என்பதில் குறிப்பீடு செய்யப்படும் இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து ;"

அத்தகைய இலாபங்களும் வருமானமும் பதினைந்து சதவீதப்படி வரிவிதிக்கப் படற்பாலதான காலப் பகுதியின் போது அல்லது அதன் பின்னர் ஓராண்டிற்குள் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஒன்றாகவிருக்கும்" ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில், "முதலில் கூறப்பட்ட பங்கிலாபம் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள்ளாக அத்தகைய கம்பனியினால் செலுத்தப்பட்டதுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"முதலாவதாகக் கூறப்பட்ட பங்கிலாபம் அக்கம்பனியால் இரண்டாவதாகக் கூறப்பட்ட பங்கிலாபம் பெறப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் போது அல்லது அதன் பின்னர் ஓராண்டிற்குள் செலுத்தப்பட்டிருப்பின், "

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரிவின் 2ஆம் உட்பிரிவில் "32ஊ, அல்லது 32ஏ அல்லது 32ஓ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக அச்சொற்களும் இலக்கங்களும் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் "32ஊ, அல்லது 32ஏ, அல்லது 32ஓ, அல்லது 32க அல்லது 32ங என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் "32ஏ, அல்லது 32ஓ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக அச்சொற்களும் இலக்கங்களும் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம், "32ஏ, அல்லது 32ஓ, அல்லது 32க, அல்லது 32ங என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33இ என்னும் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் பந்தியில், அப்பந்தியின், (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(ஆ) பின்வரும் பிரிவுகளான, அதாவது

(i) 32ஊ என்னும் பிரிவின் கீழ்

(ii) 32ஏ என்னும் பிரிவின் கீழ்

(iii) 32ஓ என்னும் பிரிவின் கீழ்

(iv) 32க என்னும் பிரிவின் கீழ்

(v) 32ங என்னும் பிரிவின் கீழ்

(vi) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவை யல்லாத வேறு வீதங்களில் வரிவிதிக்கப்படற்பாலதான இலாபங்களும் வருமானமும்; அத்துடன் ".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு அப்பிரிவின் 2 (அ) என்னும் உட்பிரிவின் (iii) ஆம் பந்தியில் "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ இன் கீழ்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,

"ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு பிரிவு 32ஏ அல்லது பிரிவு 32ஓ அல்லது பிரிவு 32க அல்லது 32ங இன் கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அவ்வுட்பிரிவின் (vi) ஆம் பந்தியில் "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும்", என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அறுபதினாயிரம் ரூபாவையும்; அத்துடன்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (vi) ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் –

"(vii) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாவையும்."

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92ஆம் பிரிவு, அப்பிரிவின் (2அஅ) என்னும் உட்பிரிவில் "வரி மதிப்பீட்டாளர் ஒருவர், அந்த வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்துறும் வரி மதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து முப்பது நாட்களுக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரி மதிப்பீட்டாளர் ஒருவர் அந்த வரி மதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து முப்பது நாட்கள் முடிவுறுவதற்கு முன்னர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 99ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. –

"(1) (அ) மாதம் ஒன்றுக்கு எண்ணாயிரத்து முந்நூற்றி முப்பத்து மூன்று ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறும் எவரேனும் தனியாளை, அல்லது

(ஆ) இலங்கையில் செய்த சேவைகளுக்காக மாதமொன்றுக்கு எண்பத்தைந்து ரூபாவுக்கு அல்லது ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலான ஊதியத்தைப் பெறுகின்ற வதிவற்ற தனியாள் எவரையும்,

தொழிலுக்கமர்த்தியுள்ளவரும் 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 107இ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது இச்சட்டத்தின் இவ்வத்தியாயத்தின் கீழ் ஆணையாளர் தலைமை – அதிபதிக்கு அறிவித்தல் கொடுத்திராத வருமான தொழில்தருநர் ஒவ்வொருவரும் (இதனகத்துப் பின்னர் இவ்வத்தியாயத்தில் "குறித்துரைக்கப்பட்ட ஊழியர்" ஒருவராகக் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான) அத்தகைய ஆளைத் தாம் தொழிலுக்கமர்த்தி யிருப்பதாக 1996 செப்தெம்பர் 30ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்."

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஓ என்னும் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "கூட்டுமொத்தமாகத் திரளும் குறித்துரைக்கப்பட்ட, கட்டணத்தை அல்லது கட்டணங்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூட்டு மொத்தமாகத் திரளும் குறித்துரைக்கப்பட்ட ஒரு கட்டணத்தை அல்லது கட்டணங்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ண என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது. –

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் – (1) "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் –

(இ) 1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஊழியரின் அத்தகைய வேதனாதிகளின் மீது இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஏ என்னும் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின்படி, அவற்றிலிருந்து ஒரு இலட்சம் ரூபா பணத்தொகையொன்றைக் கழிப்பனவு செய்த பின்னர், வருமான வரி கணிப்பிடப்படும்.

23. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது. –

(1) அவ்வட்டணையின் பாகம் 11ஊ என்பதில் "1994 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :–" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "முறையே 1994 ஏப்பிரல் 1ஆம் திகதியன்றும் 1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்றும் தொடங்கும் இரண்டு வரி மதிப்பீட்டாண்டுகளுக்கான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் – " ; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் பாகம் 11ஊ என்பதனை உடனடுத்துப் பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும் –

" பாகம் 11எ "

1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் -

| | |
|---|---|
| வரி விதிக்கப்படற்பாலதான வருமானமாகிய முதலாவது ரூபா 35,000 இன் மீது | 10 சதவீதம் |
| வரி விதிக்கப்படற்பாலதான வருமானமாகிய அடுத்த ரூபா 35,000 இன் மீது | 15 சதவீதம் |
| வரி விதிக்கப்படற்பாலதான வருமானமாகிய அடுத்த ரூபா 35,000 இன் மீது | 25 சதவீதம் |
| வரி விதிக்கப்படற்பாலதான மீதி வருமானத்தின் மீது | 35 சதவீதம் |

24. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஏழாம் அட்டவணை, "பிரிவு 32ஒ அல்லது பிரிவு 33 " என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக அவ்வட்டவணையில் அச்சொற்களும் இலக்கங்களும் காணப்படும் இடங்களிலெல்லாம் "பிரிவு 32ஒ அல்லது பிரிவு 32 க" அல்லது பிரிவு 32ங என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. (1) இச்சட்டத்தின் 4ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 1990 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 13ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம், 23ஆம் பிரிவுகளால் பிரிவு 32ஔ பிரிவு 33அ, பிரிவு 33இ, பிரிவு 38 என்பவற்றிற்கும் அத்துடன் ஏழாம் அட்டவணைக்கும் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காவும் ;

1994 அக்டோபர் 31ஆம் திகதியன்று வலுவுக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் 20ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஒ என்னும் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும், 1992 நவம்பர் 18ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

26. இச் சட்டத்திலுள்ள சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம்

[1996 ஜூலை மாதம் 26ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## சுயதொழில் புரியும் ஆட்களுக்கான ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நன்மைத் திட்டத்தை முகாமை செய்வதற்காகச் சமூகப் பாதுகாப்புச் சபையொன்றைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியதும் (இதனகத்துப் பின்னர் "நியமித்த திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

### சமூகப் பாதுகாப்புச் சபையைத் தாபித்தல்.

2. (1) (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுதும்) 3ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்டுள்ளதும் சமூகப் பாதுகாப்புச் சபை என அழைக்கப்படுவதுமான குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாகவிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

3. (1) சபை, அமைச்சரினால் நியமிக்கப்படும் ஏழு பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களில் ஒருவராவது திறைசேரியின் பிரதிநிதி ஒருவராக இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரானவர் பணிப்பாளர்களுள் ஒருவரைச் சபையில் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள், பணிப்பாளர்களின் பதவிக்கான நியதிகளும் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியமும், சபையின் கூட்டங்கள், அத்துடன் சபையின் இலச்சினை என்பன தொடர்பாகப் பயனுடையனவாதல் வேண்டும்.

4. சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, சபையின் பணிகள் (இதனகத்துப் பின்னர் "திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) கடற்றொழிலில் அத்துடன் கமத்தொழிலில் உள்ளவர்கள் தவிர்ந்த சுயதொழிலிலுள்ள ஆட்களுக்கானதுமான ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நன்மைத் திட்டமொன்றைத் தாபித்தலும் அத்துடன் அத்தகைய திட்டத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் என்பனவாகவிருத்தல் வேண்டும்.

5. சபையானது அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல், ஈடு வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையாடுதல் ;

(ஆ) ஒன்றில் நேரடியாகவோ அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளுதலும் புரிதலும் ;

(இ) அதன் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் அவர்களுக்கு லீவு வழங்குதல் என்பன உட்பட அவர்கள் தொடர்பான விதிகளை ஆக்குதல் ;

(ஈ) திட்டத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் ;

(உ) திட்டம் தொடர்பில் தேவைப்பட்ட தொகைக் கணிப்பு சார், நிதிசார், அத்துடன் தொழிற்பாடுசார் அறிக்கைகளைப் பேணுதல். ;

(ஊ) திட்டத்தின் கீழ் எவரேனும் உதவுதொகை செலுத்துநருக்குச் செலுத்தப்பட வேண்டிய நன்மைகளைத் தீர்மானித்தல் ;

(எ) சபையின் அபிப்பிராயப்படி அதன் பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்கு அல்லது திட்டத்தை நிருவகிப்பதற்கு அத்துடன் செயற்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்.

6. அமைசசர், காலத்துக்குக் காலம், திட்டத்தை நிருவகிப்பதன் உசிதமாந்தன்மையையும், சுயதொழில் புரியும் ஆட்களினால் கொண்டு நடாத்தப்படும் தான்புரி தொழில்களில் உள்ளடங்கிய தான்புரிதொழில்சார் ஆபத்துக்களையும் கவனத்திற்கொண்டு, திட்டத்துக்கு உதவுதொகை செலுத்துவதற்கு உரித்துடையோராகவிருக்கும் சுயதொழில் புரியும் ஆட்களின் வகுதிகளை கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் தீர்மானிக்கலாம். இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட சுயதொழில்புரியும் ஆட்களின் வகுதியினுள் அடங்கும் சுயதொழில் புரியும் எவரேனுமாள் இதனகத்துப் பின்னர் “இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ள ஆளொருவர்” எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

## பாகம் II

### சுயதொழில்புரியும் ஆட்களுக்கான ஒய்வூதிய சமூகப் பாதுகாப்பு நன்மைத் திட்டம்

7. இச்சட்டம் ஏற்புடையதாகவுள்ளவரும், விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டவரும், பதினெட்டு வயதுக்குக் குறையாதவரும் ஐம்பத்தியொன்பது வயதுக்கு மேற்படாதவருமான எவரேனுமாள் திட்டத்தில் சேருவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.ள

8. (1) இத்திட்டத்தில் சேருகின்ற எந்த ஆளுக்கு இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆளொருவர் (இவர் இதனகத்துப் பின்னர் "உதவுதொகை செலுத்துனர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) இத்திட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அடிப்படையில் பின்வரும் நன்மைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும் :-

(அ) விதித்துரைக்கப்பட்ட ஒரு தொகையினதான காலாகால ஓய்வூதியமொன்று ;

(ஆ) நிரந்தரமான பகுதியளவிலான இயலாமையின் விடயங்களில், மொத்தத் தொகையிலான பணிக்கொடையொன்று அல்லது இயலாமையின் பின்னர் அவர் தொடர்ந்து அவரது உதவு தொகைகளைச் செலுத்தினால் மொத்தத் தொகையிலான பணிக்கொடையொன்றும் அத்துடன் வருமதியாகும் பொழுது ஓய்வூதியமொன்றும்;

(இ) நிரந்தரமான முழு இயலாமையின் விடயங்களில், மொத்தத் தொகையிலான பணிக்கொடையொன்று அல்லது விதித்துரைக்கப்பட்டவொரு தொகையிலான காலாகாலப் படியொன்று ;

(ஏ) இறப்புப் பணிக்கொடையொன்று,

(2) ஓர் ஓய்வூதியத்தை, படியை அல்லது பணிக்கொடையைச் செலுத்தும் அடிப்படையானது, ஏனையவற்றுடன் உதவுதொகை செலுத்தும் காலப் பகுதி, உதவுதொகை செலுத்துநரின் வயது, உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்படும் உதவுதொகைகளின் தொகை என்பவற்றைக் கருத்திற் கொண்டு விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

9. (1) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அறுபது வயதடைவதன் மீது ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயினும், ஐம்பத்தைந்து வயதடைந்த பின்னர் உதவுதொகை செலுத்தத் தொடங்கும் உதவுதொகை செலுத்துநர் ஒருவர், விதிந்துரைக்கப்படக்கூடியவாறு அவரது முழு உதவு தொகையையும் செலுத்திய பின்னர், அத்துடன் திட்டத்தில் சேர்ந்த திகதியிலிருந்து ஐந்தாண்டுகள் முடிந்த பின்னர் மட்டுமே ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் எந்த மாதத்தில் இறக்கின்றாரோ அந்த மாதத்தின் இறுதி வரை ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டம் எந்த ஆட்களுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆட்களை இத்திட்டத்திற் சேரத்தூண்டும் நோக்குடன், அமைச்சர் உதவுதொகை செலுத்துநர்களால் செலுத்தப்பட வேண்டிய உதவுதொகையின் மீது தள்ளுபடியொன்றையோ அல்லது கழிவு ஒன்றையோ விதித்துரைக்கலாம்.

11. ஓய்வூதியத்தைப் பெற உரித்துடையவராவதற்கு முன்னர் நிரந்தரமாகவும் பகுதியளவிலும் இயலாதவராக வருகின்ற உதவுதொகை செலுத்துநர் எவரும் விதித்துரைக்கப்பட்ட அடிப்படையில் கணிக்கப்பட்ட மொத்தத் தொகையிலான பணிக்கொடையொன்றைப் பெறுதல் வேண்டும் என்பதுடன், ஒன்றில் மிகுதி உதவுதொகைகளைச் செலுத்திவிட்டு திட்டத்தைவிட்டு விலகுவதுடன் அல்லது திட்டத்தில் தங்கி யிருப்பதுடன் வருமதியாகும்போது ஓய்வூதியத்தையும் பெறலாம்.

12. ஓய்வூதியத்தைப் பெற உரித்துடையவராக வருமுன்னர் நிரந்தரமாகவும் முழு அளவிலும் இயலாதவராகின்ற உதவுதொகை செலுத்துநர் எவரும், அவரது விருப்பத்தின் பேரில் விதிந்துரைக்கப்பட்ட அடிப்படையில் கணிக்கப்பட்ட மொத்தத் தொகையிலான பணிக்கொடையொன்றைப் பெற்றுக் கொண்டு திட்டத்தை விட்டு விலகுதல் வேண்டும். அல்லது விதித்துரைக்கப்பட்ட அடிப்படையில் கணிக்கப்பட்ட காலாகாலப் படியான்றைப் பெற்றுக்கொண்டு மேலும் எவையேனும் உதவுதொகைகளைச் செலுத்தாமல் திட்டத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.

13. உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அவரது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராவதற்கு முன்னரே இறக்கின்ற பட்சத்தில் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய அடிப்படையில் கணிக்கப்பட்ட இறப்புப் பணிக்கொடையொன்று அவரது உயிர் வாழும் வாழ்க்கைத் துணைக்கும் சட்டமுறையான பிள்ளைகளுக்கும் அல்லது அவரது இரத்த முறையிலான உடன்நேர் உறவினர்களுக்கு இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்து ரைக்கப்பட்டவாறான அத்தகைய விகிதாசாரப்படியும் அத்தகைய முன்னுரிமை ஒழுங்கு வரிசைப்படியும் செலுத்தப்படுதல் வேண்டும்.

14. சபையானது, ஆளெவரும் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதன் மீது, அவரால் செலுத்தப்பட வேண்டிய உதவுதொகைகளையும் காப்புறுதிப் பத்திரத்தின் நியதி நிபந்தனைகளையும், அவருக்கு வழங்கப்படும் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் எந்த நன்மைகளுக்கு அவர் உரித்துடையவராகின்றாரோ அந்த நன்மைகளையும் எடுத்துரைக்கும் காப்புறுதிப் பத்திரமொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

15. (1) உதவுதொகை செலுத்துநர் ஒருவரால் எந்தத் திகதிக்கு முன்னர் உதவுதொகைகள் செலுத்தப்படற்பாலனவோ அந்தத் திகதி காப்புறுதிப் பத்திரத்தில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பத்துத் தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறுகின்ற உதவுதொகை செலுத்துநர் எவரும் அவருக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரத்தின் கீழான நன்மைகளை இழத்தலும் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் எவரும் அவருக்கு வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரத்தின் கீழான நன்மைகளை இழந்துள்ளவிடத்து சபையானது அப்பயன்பட அத்தகைய உதவுதொகை செலுத்துநருக்கு அறிவித்தலொன்றை வழங்குதல் ஆகாது.

(3) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் அவரது காப்புறுதிப் பத்திரத்தை செல்லுபடி யாக்குவதற்கென சபைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சபையானது, தவணைப் பணங்களைச் செருலுத்தத் தவறிய மைக்கான காரணங்கள் உதவுதொகை செலுத்துநரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டி ருந்தன எனத் திருப்திப்படுமாயின் காப்புறுதிப் பத்திரத்தைச் செல்லுபடியாக்குதல் வேண்டும்.

(4) சபையானது ஒரு காப்புறுதிப் பத்திரத்தை செல்லுபடியாக்க முடிவு செய்யுமிடத்து, எந்தத் திகதிக்கு முன்னர் தவணைப்பணங்களின் நிலுவைகள் செலுத்தப்பட வேண்டுமோ அந்தத் திகதி உதவுதொகை செலுத்துநருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவின் திகதியே காப்புறுதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் திகதியாதல் வேண்டும்.

(5) சபையின் முடிவால் இன்னலுறும் உதவுதொகை செலுத்துநர் எவரும் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். அதன்மீது அவரது முடிவே இறுதியானதும் முற்றானதுமாதல் வேண்டும்.

16. உதவுதொகை செலுத்துநர் எவருக்கும் திட்டத்தின் கீழான நன்மைகளின் அளிப்பானது திட்டத்திற்கும் திட்டத்திற்குப் பயனளிப்பதற்கென ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க சபையால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

17. தவிசாளரால் அதற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட சபை அலுவலர் எவரும் பகலில் ஏதேனும் நேரத்தில் உதவுதொகை செலுத்துநர் எவராலும் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்கு அவரது தகவு தொடர்பில் கொடுத்துதவப்பட்ட எவையேனும் விவரங்களின் உண்மையை நிச்சயிப்பதற்கென எவையேனும் வளவுகளினுள் அல்லது தொழில் இடத்தினுள் நுழைந்து பார்வையிடலாம்.

18 (1) சபையால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் நன்மையின் அளிப்பில் அதிருப்தியும் உதவுதொகை செலுத்துநர் எவரும் அத்தகைய அளிப்பு பற்றிய அறிவித்தல் கிடைக்கப் பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவரது மேன்முறையீட்டிற்கான ஏதுக்களைக் குறிப்பிட்டு அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) ஏதேனும் அத்தகைய மேன்முறையீட்டின் மீது அமைச்சுச் செயலாளரின் முடிவே இறுதியானதாதல் வேண்டும்.

19. செயற்றிட்டத்திலிருந்து செலுத்தப்படற்பாலதான ஒய்வூதியம், பணிக்கொடை அல்லது படி எதுவும் குறித்தொதுக்கப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது. அத்துடன் அத்தகைய ஒவ்வொரு குறித்தொதுக்குகையும் அல்லது கைமாற்றமும் பூரணமாக வெற்றும் வறிதாதலும் வேண்டுமென்பதுடன் எப்பயனுடையதாதலுமாகாது. அத்தகைய ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை அல்லது படி எதுவும், அத்தகைய எவ்வாளுக்குச் செலுத்தப்படற் பாலதோ, அவ்வாளிலிருந்து வருமதியான ஏதேனும் தனிசு அல்லது கொடுப்பனவு காரண மாக நடுக்கட்டப்படுதலோ அல்லது நிறைவேற்றுகையில் எடுக்கப்படுதலோ ஆகாது.

## பாகம் III

### சபையின் பணியாட்டொகுதி

20. (1) தவிசாளரே சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) சபையானது, அதன் கடமைகள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்கும் செயற்றிட்டம் திறமையாக நிருவகிக்கப்படுவதற்கும், நடைமுறைப்படுத்தப்படுவதற்கும் அவசியமானதென அது கருதப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும், முகவர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர், முகவர் அல்லது சேவையாளர்கள் மீதும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், முகவர்களுக்கும், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய விதத்திலும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்கள் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(4) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன், சபையின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) சபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர் எவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுப் பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) சபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) சபையானது, குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றுக்கு அரசாங்கத்தில் சேவையாற்ற உடன்பட்டுக் கொண்ட ஆளெவரையும் ஊழியத்தில் அமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் சபையுடன் ஆற்றப்படும் சேவைக் காலப் பகுதி எதுவும் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அவ்வாளினால் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## நிதி

21. (1) சபையானது, (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்துக்குப் பின்வருவன செலுத்தப்படல் வேண்டும் :-

(அ) செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் ஒதுக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) உதவுதொகை வழங்குநர்களால் செயற்றிட்டத்துக்கு உதவுதொகைகளாகச் செலுத்தப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) நிதியத்துக்குக் கொடைகளாகவும் நன்கொடைகளாகவும் எம் மூலத்தில் இருந்தும் பெறப்படும் எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஈ) சபையின் முதலீடுகளிலிருந்து வட்டியாக அல்லது இலாபங்களாகச் சம்பாதிக்கப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ;

(உ) இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அத்துடன் புரிகையில் சபையினால் பெறப்படும் எல்லாப் பணத் தொகைகளும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் சபையினால் உறப்படும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தின் மூலம் அல்லது கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

23. சபைக்கு உடனடியாகத் தேவைப்படாதனவான நிதியத்திலுள்ள எல்லாப் பணங்களும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப் பொறுப்புக்களிலும் சபையினால் முதலீடு செய்யப்படலாம்.

23. (1) சபையானது, அமைச்சரினதும் அத்துடன் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதேபோன்ற ஒருப்பாட்டுடன் வழங்கப்படும் ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, சபையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் செயற்றிட்டத்தை நிருவகிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் சபை தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப் பற்று என்ற வகையில் அல்லது வேறு வகையில் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது பேச்சுவார்த்தை மூலம் கடனாகப் பெறலாம்.

ஆயின், இப்பிரிவின் கீழ் சபையினால் திரட்டப்படும் கடன்கள் தொடர்பில் நிலுவையிலுள்ள தொகையின் கூட்டுமொத்தமானது எந்த நேரத்திலும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கக் கூடிய வாறான அத்தகைய பணத்தொகைகளை விஞ்சுதலாகாது.

(2) சபையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் கொடுக்கப்பட்ட சம்மதத்துடன் பின்வரும் எல்லா நோக்கங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கடன்கள் வாயிலாகவல்லாது வேறு வகையாகப் பணத்தைக் கடனாக வாங்கலாம் :-

(அ) சபையின் பயன்பாட்டிற்காகத் தேவைப்படும் எதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைத் தேவைப்படுத்துதல் அல்லது கொள்ளுதல் ;

(ஆ) ஒராம் உட்பிரிவின் கீழ் பெறப்பட்ட ஏதேனும் பணத்தை மீளக் கொடுப்பனவு செய்தல்.

24. (1) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது அதன் வருமானம், அத்துடன் செலவினம் சொத்துக்கள் அத்துடன் பொறுப்புக்கள், அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், சபையின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

25. நிதியானது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, இலங்கை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்டதொரு நிதியமாகக் கருதப்படுதல் வேண்டும்.

26. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் சபைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

## பாகம் V

## பொது

27. தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காவும் சபையின் எல்லாப் பணிப்பாளர்களும், அலுவர்களும் அத்துடன் சேவையாளர்களும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

28. சபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

29. (1) சபையானது, அதன் தத்துவங்கள், கடமைகள் என்பவற்றுள் எதனையும் சபையின் தவிசாளருக்கு, ஒரு பணிப்பாளருக்கு அல்லது ஓர் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எவ்வாளுக்கு ஏதேனும் தத்துவம் அல்லது கடமை கையளிக்கப் பட்டுள்ளதோ அந்த ஒவ்வொரு ஆளும், சபையின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை அல்லது கடமையை நிறைவேற்றுதல் வேண்டும்.

30. (1) (அ) இச்சட்டத்தின் கீழ் சபையினால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காகச் சபைக்கெதிராக ; அல்லது,

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது அவரால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக, சபையின் எவரேனும் பணிப்பாளருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக, துடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பு சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் சபையினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய துடர்ச்சி எதிலும் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையினால் உறப்பட்ட செலவுகள் எவையும் அத்தகைய நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிட்டவாறாக, அத்தகைய ஆள் எவரினாலும், இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது, அவரால் செய்யப்பட்ட அல்லது செய்ததாகக் கருதப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும், நீதிமன்றம் அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதெனக் கொண்டால், அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய செலவு அவரால் அறவிடப்பட்டாலன்றி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

31. எந்தக் கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டும் என இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டனவோ அல்லது தேவைப்படுத்தப்பட்டனவோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் பின்வருவன உட்படவும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) செயற்றிட்டத்தை ஒழுங்குபடுத்துதல், அதன் நிருவாகம், அத்துடன் அதனை முகாமை செய்தல் ;

(ஆ) எந்தவோர் ஆளுக்கு செயற்றிட்டத்தில் சேருவதற்கு இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆளொருவரை உரித்துடையவராக்கும் தகைமைகள் ;

(இ) எந்த நிபந்தனைகள் மீதும், எந்த மட்டுப்பாடுகளுக்கு அமைவாகவும், இச்சட்டம் ஏற்புடைத்தாகின்ற அந்த ஆளொருவரை உரித்துடையவராக்கும் தகைமைகள் ;

(ஈ) உதவுதொகை செலுத்துநர்களால் செய்யப்பட வேண்டிய மொத்த உதவுதொகையினைத் தீர்மானித்தல் ;

(உ) செயற்றிட்டத்தின் கீழ் எந்த அடிப்படை மீது உதவுதொகை செலுத்துநர்களுக்கு ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், அல்லது படிகள் செலுத்தப்படற்பாலனவோ அந்த அடிப்படையைத் தீர்மானித்தல் ;

(ஊ) உதவுதொகை செலுத்துநர்களினாலான உதவுதொகைகளின் கொடுப்பனவுகள் தவணை தவறுகை ஒப்படைத்தல், அத்துடன் உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் தகைமையிழப்பு என்பவற்றை ஆளும் நிபந்தனைகள் ;

(எ) சபையின் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கை முறை ;

(ஏ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பத்திரமொன்றை முடிவுறுத்துதலும், இழப்பித்தலும்; அத்துடன்,

(ஐ) உதவுதொகை செலுத்துநர் ஒருவரின் பகுதியளவிலான அல்லது முழுமையான இயலாமை.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்கு விதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன் கொணரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன்கீழ் ஏலவே செய்யப்பட்ட ஏதேனும் செல்லுபடியாத் தன்மைக்கு பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டிய திகதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

32. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

33. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"தவிசாளர்" என்பவர் 3ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் தவிசாளர் என்று பொருள்படும்.

"பணிப்பாளர்" என்பது 3ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் என்று பொருள்படும்.

"உள்ளூர் அதிகார சபை" என்பது ஒரு மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும், அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகளுக்கு நேரொத்த அல்லது அதேபோன்ற தத்துவங்களை, கடமைகளை, அல்லது கடமைகளின் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்குகிறது ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்பட்டதெனப் பொருள்படும்.

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாணசபை ஒன்று எனப் பொருள்படும்.

## முதலாம் அட்டவணை பிரிவு 3 (4)

### சபையின் பணிப்பாளர்கள் தொடர்பிலான ஏற்பாடுகள்

1. ஆள் ஒருவர் –

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை ஒன்றின் உறுப்பினரொருவராக அல்லது உள்ளூர் அதிகார சபை ஒன்றின் உறுப்பினர் ஒருவராகவிருந்தால் ; அல்லது,

(ஆ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்த சுவாதீனமற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(இ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவரென வெளிப்படுத்தப்பட்டு வொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கி முறிந்த ஆள் ஒருவராகவிருந்தால் ; அல்லது

(ஈ) எவர்மீது இலங்கையில் உள்ள அல்லது வேறதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் (ஒத்தி வைக்கப்பட்ட தண்டனை உட்பட) மறியற் தண்டனை விதிக்கப் பட்டுள்ளதோ அவ்வாளாக இருந்தால், அல்லது

(உ) பணிப்பாளர் ஒருவராக அல்லது பணிகளை அவர் நிறைவேற்றுவதை பங்கமாக பாதிக்கும் சாத்தியம் கொண்ட அத்தகைய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால், அவர் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கோ பணிப்பாளர் ஒருவராகத் தொடர்ந்து இருப்பதற்கோ தகைமையற்றவராதல் வேண்டும்.

2. பணிப்பாளர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

3. அமைச்சர் பணிப்பாளர் ஒருவரைப் பதவியிலிருந்து அதற்கான காரணம் எதனையும் காட்டாமலே அகற்றலாம் என்பதுடன் அத்தகைய அகற்றுதலானது எழுத்தாணை வகையாயினுஞ் சரி அல்லது வேறு வகையிலாயினுஞ் சரி ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

4. (1) பணிப்பாளர் ஒவ்வொருவரும், இறப்பினால் பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதினால் ஏலவே பதவியை வறிதாக்கினாலன்றி அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதலும் வேண்டும். ஆயின் இருந்த அல்லது பதவி விலகிய அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்கிய பணிப்பாளர் ஒருவரின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அவர் ஏலவே பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் எவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்தாரோ அப்பணிப்பாளரின் பதவிக்காலத்தின் முடிவுறா தெஞ்சியுள்ள காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது வேறு எவரேனும் பணிப்பாளர் சுகவீனம் காரணமாக, உடல் இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்கான பணிகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சரானவர், விடயத்திற்கேற்ப, வேறு எவரேனும் பணிப்பாளரை, தவிசாளராகச் செயலாற்றுவதற்கு அல்லது எவரேனும் வேறு ஆளை அத்தகைய பணிப்பாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

5. தவிசாளருக்கும், பணிப்பாளர்களுக்கும், சபையின் நிதியத்திலிருந்து, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கக் கூடிய வாறான அத்தகைய ஊதியம் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

6. சபையினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தம் எதிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர், சபையின் கூட்டமொன்றில் தமக்குள்ள அக்கறையின் தன்மை பற்றி வெளிப்படுத்துதல் வேண்டும். இந்த வெளிப்படுத்துகை சபைக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகளில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பணிப்பாளர் அவ்வொப்பந்தம் தொடர்பில் சபையின் ஏதேனும் தீர்மானத்தில் அல்லது முடிவில் பங்கெடுத்தலுமாகாது. ஆயின், எவரேனும் பணிப்பாளர், அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் அலுவலரொருவராக அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றின் பணிப்பாளர் ஒருவராக இருப்பதன் பயனைக் கொண்டு எந்த ஒப்பந்தம் ஒன்றில் அக்கறை கொண்டுள்ளாரோ அந்த அக்கைறயானது இப்பந்தியின் கருத்தெல்லைக்குள் அக்கறையெனக் கருதப்படுதலாகாது.

7. (1) அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அதன் சார்பிலான கடிதம் மூலம் தவிசாளர் ட:தவியிலிருந்து விலகலாம்.

(2) அமைச்சரானவர் எந்நேரத்திலும் அதன் காரணமொன்றைக் குறித்தொதுக்காது, தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) தவிசாளரின் பதவிக்காலம் சபையில் அவரின் உறுதியின்மைக்காலமாதல் வேண்டும்.

8. (1) இப்பந்தியின் வேறு ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும், அத்துடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கையாளுதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

(2) சபையின் ஒரு கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், நான்கு பணிப்பாளர் ஆதல் வேண்டும்.

9. சபையின் செயல், முடிவு, அல்லது நடவடிக்கை எதுவும் சபையின் வெற்றிடமொன்று இருப்பதால் அல்லது அதன் பணிப்பாளர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதனால் மாத்திரம் செல்லுபடியற்றதாதலாகாது.

10. (1) சபையின் இலச்சினையாவது, சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அதற்கேற்ற வகையில் மாற்றப்படலாம்.

(2) சபையின் இலச்சினையானது, காலத்துக்குக் காலம், சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய ஆட்சளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) சபையின் இலச்சினையானது, இரு பணிப்பாளர்களின் சமூகத்தில் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாத. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்களின் அல்லது ஆவணங்களின் இடாப்பொன்றைச் சபை பேணுதல் வேண்டும்.

## இரண்டாவது அட்டவணை (பிரிவு 13)

இறப்புப் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய விகிதங்களும் முன்னுரிமை ஒழுங்கும் பின்வருமாறாகும் :–

(அ) உயிர்வாழும் வாழ்க்கைத் துணைக்கு இறப்புப் பணிக்கொடையில் அரைவாசி அல்லது ஐம்பது வீதம் ; அத்துடன்

(ஆ) மிகுதி ஐம்பது வீதம், மரணமடைந்த உதவுதொகை செலுத்துநரின் உயிர்வாழும் சட்டமுறையான பிள்ளைகளினால் சம விகிதங்களாக பங்கிடப்படுதல் வேண்டும்.

(இ) உயிர்வாழும் வாழ்க்கைத் துணை இல்லாதவிடத்து இறப்புப் பணிக்கொடை முழுவதும் மரணமடைந்த உதவுதொகை செலுத்துநரான உயிர்வாழும் சட்ட முறையான பிள்ளைகளினால் சமமான வீதங்களில் பங்கிடப்பட வேண்டும்.

(ஈ) உயிர்வாழும் சட்டமுறையான பிள்ளைகள் இல்லாதவிடத்து, இறப்புப் பணிக்கொடை முழுவதும், உயிர்வாழும் வாழ்க்கைத் துணைக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(உ) மரணமடைந்த உதவுதொகை செலுத்துநரின் உயிர்வாழும் வாழ்க்கைத் துணை அல்லது உயிர்வாழும் சட்டமுறையான பிள்ளைகள் இல்லாதவிடத்து, இறப்புப் பணிக்கொடை –

(i) ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்வாழும் பெற்றோர் இருப்பின், உயிர் வாழும் பெற்றோருக்கு சமமான வீதத்தில் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) உயிர்வாழும் ஒரு பெற்றோர் மாத்திரம் இருந்தால், அது முழுவதும் அப் பெற்றோருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(iii) ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்வாழும் சகோதரர் அத்துடன் சகோதரி இருந்தால், சமமான வீதங்களில் உயிர் வாழும் சகோதரர்கள் அத்துடன் சகோதரிகளுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(iv) உயிர்வாழும் ஒரு சகோதரர் அல்லது சகோதரி மாத்திரம் இருந்தால், அச் சகோதரர் அல்லது சகோதரிக்கு அது முழுவதையும் செலுத்த வேண்டும்.

# 1996 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பகிரங்க தொழில் முயற்சிகளைப் புனரமைத்தல் சட்டம்

[1996 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்க தொழில் முயற்சிகளைப் புனரமைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்

1987ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க பகிரங்க கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் கீழ் குறித்த சில பகிரங்கக் கூட்டுத்தாபனங்களும், அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளும் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றப்பட்டு, அத்தகைய கம்பனிகளின் பங்குகள் யாவும், அரசுக்காகவும் அரசின் சார்பிலும் வைத்திருக்கப்படுவதற்காக திறைசேரிச் செயலாளருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளனவாதலாலும் :

அத்துடன் தனியார் மயப்படுத்தல் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதில், அத்தகைய ஒருசில கம்பனிகளில் அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் பங்குகள் அனைத்தும் அல்லது பெரும்பான்மையான பங்குகள் ஏனைய ஆட்களுக்குக் கைமாற்றப்பட்டு.

அத்தகைய ஒரு சில கம்பனிகளின் முகாமைத்துவமும், நிருவாகமும் மீது அல்லது அத்தகைய கம்பெனிகளுக்குச் சொந்தமான ஆதனம் மீது எத்தகைய கட்டுப்பாட்டையும் அரசாங்கம் கொண்டில்லாதொழிந்துள்ளதாதலாலும், அத்தகைய ஒரு சில கம்பனிகளின் தொழில் பொறுப்பு முயற்சிகள் தவறியதன் விளைவாக அத்தகைய கம்பனிகளின் வேலையாட்களுக்கு ஊழிய'ம் வழங்கப்படாமையும், ஆட்குறைப்பும், அவர்களுக்குப் போமதியான வேதனங்களும் நியதிச் சட்ட முறையான சென்மதிகளும் செலுத்தப்படாமையும் ஏற்பட்டுள்ளதாதலாலும் ;

அத்துடன் தேசிய பொருளாதார நலன் கருதியும், அத்தகைய கம்பிகளின் வேலையாட்களது உரிமைகளுக்கு அங்கீகாரமும் மதிப்பும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்திற்காகவும், சனநாயக சமுதாயத்தின் பொது சேமநலன் கருதிய நியாயமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கென அத்தகைய கம்பனிகளின் உற்பத்தியைத் தரம் உயர்த்துவதற்காகவும், அத்தகைய கம்பனிகளைப் புனரமைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வது அவசியமாகவும், உகந்ததாகவும் இருக்கின்றதாதலாலும்: –

எனவே இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, பகிரங்க தொழில் முயற்சிகளைப் புனரமைத்தல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) ஏதேனும் தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்க தொழில் முயற்சியின் பணிப்பாளர் சபையினது ஏதேனும் செயலின் அல்லது செய்யாமையின் விளைவொன்றினால் மட்டும்.

(அ) அத்தகைய தொழில் முயற்சியின் தொழிற் பொறுப்பு முயற்சிகளாக அமையும் எவையேனும் கூறுகளில் வேலை கொண்டு நடாத்தப்படாதொழிந்துள்ளது,

அல்லது கணிசமானளவு குறைந்துள்ளது, அல்லது அவ்வாறு நிகழும் சாத்தியம் உள்ளது; அத்துடன்

(ஆ) அத்தகைய தொழில் முயற்சியின் வேலையாட்களுக்கு அல்லது அத்தகைய வேலையாட்களில் கணிசமான எண்ணிக்கையினர்க்கு தொழில் வழங்கப்படாதுள்ளது அல்லது அவர்கள் ஆட்குறைப்புச் செய்யப்பட்டுள்ளனர் அல்லது அத்தகைய வேலையாட்களுக்கு அல்லது வேலையாட்களின் கணிசமான எண்ணிக்கையினர்க்கு வேதனங்கள் அல்லது நியதிச்சட்ட முறையான சென்மதிகள் செலுத்தப்படாதுள்ளது அல்லது அவ்வாறு நிகழும் சாத்தியம் உள்ளது.

என சனாதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, சனாதிபதியானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சியினது அலுவல்களின் நிருவாகத்தையும் முகாமைத்துவத்தையும் அரசாங்கத்திற்கு உரித்தாக்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளை வலுவிலிருக்கின்ற காலம் வரையில், அத்தகைய தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சியின் அசைவுள்ள அசைவற்ற ஆதனம் யாவற்றினதும் உடைமையும், கட்டுப்பாடும், அதன் உரிமைகளும், பொறுப்புக்களும் அரசாங்கத்திற்கு உரித்தாதலும் வேண்டும்.

(2) தனியார் மயப்படுத்தப்பட்ட ஒரு பகிரங்க தொழில் முயற்சி தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, அத்தகைய தொழில் முயற்சியின் அலுவல்களை முகாமைசெய்து நிருவகிப்பதற்காக நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய தொழில் முயற்சியின் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள், சொத்துக்கள் யாவற்றையும் உடைமை கொள்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் அத்தகைய ஆதனத்தை அத்தகைய தொழில் முயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கும் பயன்கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றிலும், அத்தகைய கட்டளையிலும் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து நான்கு மாதங்களினுள், அல்லது பாராளுமன்றம் அமர்வில் இல்லாதிருப்பின் அடுத்துவரும் அமர்வு ஆரம்பித்து ஐம்பது நாட்களினுள் அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டும் எனும் பிரேரணை மூலம், பாராளுமன்றத்தின் முன்னிலையில் இடப்படுதல் வேண்டும்.

(4) (அ) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை (3)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதிக்குள் பாராளுமன்றம் அங்கீகரிக்க மறுக்கின்றவிடத்து;

(ஆ) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதிக்குள் பாராளுமன்றத்தின் முன்னிலையில் இடப்பட்டு, ஆனால், (3)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதி முடிவடைந்ததிலிருந்து கணிக்கப்படும் நான்கு மாதகாலப் பகுதிக்குள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாதவிடத்து ;

(இ) ஒராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதிக்குள் பாராளுமன்றத்தின் முன்னிலையில் இடப்படாதவிடத்து,

அத்தகைய கட்டளையானது விடயத்திற்கு ஏற்ப பாராளுமன்றம் அத்தகைய கட்டளையை அங்கீகரிக்க மறுத்த திகதியிலிருந்து அல்லது (3)ஆம் உட்பிரிவில் அல்லது இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதி முடிவடைந்த திகதியிலிருந்து ஒழிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று (4)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நடைமுறை காரணமாக ஒழிக்கப்பட்டிருக்கின்றதாகக் கருதப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளை எந்தத் தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்க தொழில் முயற்சி ஒன்றின் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அத்தொழில் முயற்சியின் உரிமைகளும் பொறுப்புக்களும் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தனியார் மயப்படுத்தப்பட்ட தொழில் முயற்சியின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், நிருவகிப்பதற்குமென நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய தொழில் முயற்சியின் முகாமைத்துவத்தை, உடனடியாக, அத்தகைய தொழில் முயற்சியின் பணிப்பாளர் சபை தவிசாளருக்கு அல்லது அத்தகைய தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு கையளித்தல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்பட்ட நேரத்தில் அத்தகைய தொழில் முயற்சியின் அசைவற்ற ஆதனம், பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, வியாபரக் கையிருப்பு பற்றிய பொருட்பட்டியல் ஒன்றைத் தகுதி வாய்ந்த அதிகாரி தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்.

3\. (1) தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்க தொழில் முயற்சியொன்றின் முகாமைத்துவமும், கட்டுப்பாடும் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டவிடத்து, சனாதிபதி, அத்தொழில் முயற்சியின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், நிருவகிப்பதற்குமெனத் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தனியார் மயப்படுத்தப்பட்ட ஒரு பகிரங்க தொழில் முயற்சியின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், நிருவகிப்பதற்கும் என (1)ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர், அத்தொழில் முயற்சியின் ஆதனத்தை உடைமைக்கெடுத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தொழில் முயற்சியின் பணிப்பாளர் சபைத் தவிசாளர் முன்னிலையில் அல்லது அவரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் எவரும் இருந்தால் அவர் முன்னிலையில் அவ்வாறு பொறுப்பேற்கப்பட்ட நேரத்தில் அத்தகைய தொழில் முயற்சியின் அசைவற்ற ஆதனம், பொறித் தொகுதி, எந்திரத்தொகுதி, வியாபாரக் கையிருப்பு பற்றிய பொருட்பட்டியல் ஒன்றைத் தயாரிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரி தமது பணிகளை நிறைவேற்றும் போதும் தத்துவங்களைப் பிரயோகிக்கும் போதும், அத்தொழில் முயற்சியின் வேலையாட்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவற்றை அங்கீகரிக்கப் பெறுவதற்கான அவசியத்தைக் கருத்திற் கொண்டு, சனாதிபதி காலத்திற்குக் காலம் வழங்கக் கூடிய பொதுவானவையும் விசேடமானவையுமான பணிப்புரைகளுக்கு அமைந்தவராக இருத்தல் வேண்டும்.

(4) ஒரு தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சியின் அலுவல்களின் முகாமையும், நிருவாகமும் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரினால் பொறுப்பேற்கப்படுமிடத்து, அத்தகுதிவாய்ந்த அதிகாரியானவர் –

(அ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சியின் அமைப்பக விதிகளினால் அத்தகைய தொழில் முயற்சிகளின் பணிப்பாளர் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், அத்தகைய தொழில் முயற்சி தொடர்பில், பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(ஆ) பணியாற்றாதொழிந்துள்ள அத்தகைய தொழில் முயற்சியின் தொழில் நடவடிக்கைகள் எதனையும் மீள ஆரம்பித்தல் வேண்டும் ;

(இ) அதன் வர்த்தக வளத்தை அதிகரிக்கும் வகையில் அத்தகைய தொழில் முயற்சியை மீளவமைத்தல் வேண்டும் ;

(ஈ) பந்தி (ஆ) விலும், பந்தி (இ) விலும் குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோள்களை எய்தப் பெறுவதற்கு அவசியமான மூலவளங்களை உட்புகுத்தல் வேண்டும்.

(உ) அத்தகைய தொழில் முயற்சியின் முறையான கணக்கீட்டு முறைமைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஊ) அத்தகைய தொழில் முயற்சியின் வேலையாட்களுக்கு வேதனங்கள் உரியவாறு செலுத்தப்படுவதையும் அத்தகைய வேலையாட்கள் தொடர்பிலான அதன் நியதிச் சட்ட முறையான சென்மதிகள் யாவும் அத்தகைய தொழில் முயற்சியினால் உரியமுறையில் இணங்கியொழுகப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(எ) அத்தகைய தொழில் முயற்சியின் அலுவல்களை முகாமை செய்வதிலும், நிருவகிப்பதிலும் உறப்பட்ட எல்லாச் செலவுகளையும், செலவினங்களையும் கொடுத்துத் தீர்த்தல் வேண்டும்.

(ஏ) மேற்கூறியவற்றைப் பயனுறுத்துவதற்கு அவசியமான அல்லது அவற்றின் இடைநேர் விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல் வேண்டும்.

(5) ஒரு தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்க தொழில் முயற்சியின் அலுவல்களது முகாமைத்துவமும் நிருவாகமும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள காலப் பகுதியின் போது, அத்தகைய தொழில் முயற்சியின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த பணிப்பாளர் எவரும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அவ்வாறு செய்வதற்கு வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டு இருந்தாலேயொழிய, அத்தகைய தொழில் முயற்சி தொடர்பில் தத்துவங்கள், கடமைகள், பணிகள் எதனையும் பிரயோகித்தலோ, புரிதலோ, நிறைவேற்றுதலோ ஆகா.

4. இரண்டாம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று (3)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதியினுள் அல்லது 4 (ஆ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப் பகுதியினுள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளை எந்தத் தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சி தொடர்பில் ஆக்கப்பட்டதோ அந்தத் தொழில் முயற்சியின் பங்குதாரர்களினால் வைத்திருக்கப்படும் பங்குகள், அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து அத்தகைய பங்குகள் திறைசேரிக்கான செயலாளரினால் ஏற்கனவே வைத்திருக்கப்படும் விடயங்களில் தவிர, அரசாங்கத்திற்காகவும் அரசாங்கத்தின் சார்பிலும் திறைசேரிக்கான செயலாளருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பிரதான விலை மதிப்பீட்டாளரையும், ஆதனத்தை பெறுமான மதிப்பீடு செய்வதில் பரந்த ஆனுபவமும், ஆற்றலும் கொண்டவர்களென சனாதிபதிக்குத் தோன்றும் இரு வேறு ஆட்களையும் கொண்டமைந்த நட்டவீட்டு நியாய சபையொன்றைச் சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(2) தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சியொன்றின் பங்குகள், 4ஆம் பிரிவின் கீழ் திறைசேரிக்கான செயலாளருக்கு உரித்தாக்கப்பட்ட திகதிக்கு நேர் முந்திய நாளன்று, இருந்த அத்தகைய தொழில் முயற்சியின் பங்குதாரர்கள், அத்தகைய உரித்தாக்கல் தொடர்பில் நியாயமான நட்டவீட்டுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இரண்டாம் பிரிவின், (1)ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் நடைமுறை காரணமாக ஒழிக்கப்பட்டிருக்கின்றதாகக் கருதப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளை எந்தத் தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சி தொடர்பில் ஆக்கப்பட்டதோ, அந்தத் தொழில் முயற்சி, அத்தகைய கட்டளைத் திகதியன்று ஆரம்பித்து அத்தகைய கட்டளை ஒழிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் திகதியன்று முடிவடையும் காலப் பகுதியின் போது ஏற்பட்ட இலாப இழப்புகள் எதற்குமாக நட்டவீட்டுக்கு உரித்தாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் நட்டவீட்டுக்கு உரித்துடையவரான பங்குதாரர்களுக்கும் (3)ஆம் உட்பிரிவின் கீழ் நட்டவீட்டுக்கு உரித்துடையதான தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சிக்கும் செலுத்தப்படற்பாலதான நட்டவீட்டை மதிப்பீடு செய்யும் முறையும் அத்துடன் அத்தகைய நட்டவீடு செலுத்தப்பட வேண்டிய மாதிரியும் முறையும் சம்பந்தமாக நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(5) இச்சட்டத்தின் கீழ் நட்டவீட்டுக்கான உரிமை கோரிக்கைகள் அனைத்தும், (1)ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நட்டவீட்டு நியாய சபைக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நியாயசபை அத்தகைய கோரிக்கையைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அத்தகைய உரிமைக் கோரிக்கை ஒவ்வொன்றும் மீதான அதன் தீர்த்தளிப்பை வழங்குதல் வேண்டும்.

(6) நட்டவீட்டு நியாயசபையினால் வழங்கப்பட்ட தீர்த்தளிப்புக்களின் மூலம் இன்னலுறும் ஆள் எவரும், அத்தகைய ஆளுக்கு அத்தகைய தீர்த்தளிப்பு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களினுள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் கேட்டுப் பெற்ற பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அத்தகைய தீர்த்தளிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம். மாவட்ட நீதிமன்றங்களின் கட்டளைகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள், இப்பிரிவின் கீழ் செய்யப்படும் மேன்முறையீடுகளைச் செய்வதற்கும், கேட்பதற்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின் கீழ் நட்டவீடாகத் தீர்த்தளிக்கப்பட்ட பணத்தொகைகள் யாவும் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

6. (அ) இச்சட்டத்தின் கீழான ஒரு கட்டளை மூலம் அதன் அலுவல்களது, முகாமைத்துவமும், நிருவாகமும் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டிருக்கின்ற தனியார் மயப்படுத்தப்பட்ட

ஒரு பகிரங்க தொழில் முயற்சியின் ஏதேனும் ஆதனத்தின் உடைமையை தகுதி வாய்ந்த அதிகாரியிடம் ஒப்படைக்க மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியின் ஏதேனும் ஆதனத்தை வேண்டுமென்று அல்லது அசட்டையாக அழிக்கின்ற அல்லது சேதமாக்குகின்ற அல்லது இயலாதாக்குகின்ற அல்லது அழிப்பிக்கின்ற அல்லது சேதமாக்குவிக்கின்ற அல்லது இயலாதாக்குவிக்கின்ற அல்லது வேண்டுமென்று மறைக்கின்ற அல்லது அகற்றுகின்ற அல்லது மறைப்பிக்கின்ற அகற்றுவிக்கின்ற ; அல்லது

(இ) அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியினது ஏதேனும் ஆதனத்தில் முகாமைத்துவத்தை பொறுப்பேற்பதில் அல்லது ஆதனத்தை உடைமைக்கெடுப்பதில் அல்லது கட்டுப்பாட்டுக் கெடுப்பதில் தகுதிவாய்ந்த அதிகாரியைத் தடுக்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டை இடுகின்ற அல்லது நேரடியாகவோ, நேரடியாக அல்லாமலோ வேறு எவரேனும் ஆளைக் கொண்டு தடுக்கச் செய்கின்ற அல்லது முட்டுக்கட்டையிடச் செய்கின்ற,

ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்து ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப் பகுதியிலான இரு வகையில் ஒரு வகையிலானான மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

7. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, 1996ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை பகிரங்க தொழில் முயற்சிகள் சீரமைத்தல் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகள், 4ஆம் பிரிவின் கீழ் திறைசேரிக்கான செயலாளருக்கு அவற்றின் பங்குகள் உரித்தாக்கப்படுகின்ற ஏதேனு்ம் தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்க தொழில் முயற்சிக்கும், தொழில் முயற்சி தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

8. (1) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும், ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளியிடப்பட்ட திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியான விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலையில் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அது தொடங்கிய திகதியிலிருந்து ஆறு மாத காலங்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

10. ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 157ஆம் உறுப்புரை, எந்த உடன்பாட்டுக்கு அல்லது உடன்படிக்கைக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த உடன்பாட்டை அல்லது உடன்படிக்கையை இலங்கையுடன் செய்து கொண்டுள்ள ஏதேனும் நாட்டின் –

(அ) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது அமைத்துருவாக்கப்பட்டுள்ள ஏதேனும் தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சிக்கு ; அல்லது

(ஆ) எந்தத் தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்க தொழில் முயற்சியின் எவரேனும் பங்குதாரர் அதன் நாட்டினத்தவராக இருக்கின்றாரோ அந்த தனியார் மயப்படுத்தப்பட்ட தொழில் முயற்சிக்கு ஏற்புடைத்தாகமாட்டாதென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, –

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது (3)ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி எனப் பொருளாகும் ;

"ஆள்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு எதனையும் உள்ளடக்கும் ;

"தனியார் மயப்படுத்தப்பட்ட பகிரங்கத் தொழில் முயற்சி" என்பது 1987ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளைப் பகிரங்க கம்பெனிகளாக மாற்றும் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, அதன் பங்குகள் யாவும் திறைசேரியின் செயலாளருக்குக் குறித்தொதுக்கப் பட்டிருப்பதும், அத்துடன் –

(அ) அத்தகைய பங்குகள் யாவும் அல்லது பெரும்பான்மையான பங்குகள் திறைசேரிக்கான செயலாளரினால் அடுத்துப் பின்னரான கைமாற்றங்கள் இருப்பினும் பொருட்படுத்தாது, வேறு எவரேனும் ஆளுக்கு 1996, சனவரி 10ஆம் திகதிக்கு முன்னர் கைமாற்றப்பட்டிருக்கின்றது. அல்லது,

(ஆ) அரசாங்கம் அத்தகைய கம்பெனியின் அலுவல்களது நிருவாகமும், முகாமையும் மீது பயனுற கட்டுப்பாட்டைக் கொண்டில்லாது ஒழிந்துள்ளதுமான

கம்பனி எனப் பொருளாகும்.

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்படுகின்றதும், அதன் நிதி அல்லது மூலதனம் முழுதாகவோ அல்லது பகுதியளவிலோ அரசாங்கத்தினால் மானியம், கடன் என்ற வகையாக அல்லது வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதும் ஆன ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்.

# 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம்

[1996 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**இலங்கைக்குள் வழங்கப்பட்ட அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள், சேவைகள் என்பன மீது வரியொன்றை விதிப்பதற்கும், சேகரிப்பதற்கும் அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## அத்தியாயம் I

### பண்டங்கள், சேவைகள் மீதான வரியை விதித்தல்

2. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, வழங்கல் நேரத்தின் போது -

(அ) இலங்கையில் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடாத்தும் போது அல்லது நிறைவேற்றும் போது, வரிவிதிக்கப்படற்பாலதான ஒரு காலப்பகுதியில், பதிவுசெய்யப் பட்ட ஆளொருவரினாற் செய்யப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலின் மீதும்: அத்துடன்

(ஆ) எவரேனுமாளினால் இலங்கைக்குள் பண்டங்கள் இறக்குமதி செய்யப்படுவதன் மீதும்,

விடயத்துக்கேற்ப வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியைக் குறிப்பீடு செய்வதன் மூலம், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையினால் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் (இதனகத்துப் பின்னர் "வரி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரி என அழைக்கப்பட வேண்டியதான வரியொன்று இறுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்படும் திகதியன்று அல்லது அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய பிந்திய திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அது கசெற்றில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக் கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் கட்டளை, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந்தன்மைக்குப் பங்கமின்றி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கட்டளை ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) பண்டங்களின் இறக்குமதி மீதான வரி, அது சுங்கத்தீர்வையொன்றென்றாற்போன்றும், இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எல்லாப் பண்டங்களும் தீர்வை விதிக்கப்படற் பாலவையும் சுங்கத்தீராவைக்கு உட்பட்டவையும் என்றாற்போன்று, இறுக்கப்படுதலும், அறவிடப்படுதலும், சேகரிக்கப்படுதலும் வேண்டும். ஏற்றுமதிகளை மேம்படுத்துதல் தொடர்பான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான எல்லா ஒழுங்குவிதிகளும் நடவடிக்கை முறைகளும், இறக்குமதி செய்யப்பட்டவைகளும், ஏற்றுமதியாளரொருவருக்கு, இலங்கையில் வழங்கப்படவுள்ளதும் ஏதேனும் பொருள் உற்பத்தியில் பயன்படுத்தப் படுவனவுமான பண்டங்கள் தவிர்ந்த வரிவிதிக்கப்படற்பாலதான வேறு பண்டங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இரண்டாம் பிரிவில் எது எப்படியிருப்பினும், பண்டங்களின் ஏதேனும் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை வழங்கல்களின் மீது, அத்தகைய பண்டங்களின் உற்பத்தியாளரினால் அல்லது இறக்குமதியாளரினால் பண்டங்கள் மொத்த விற்பனையாக அல்லது சில்லைற விற்பனையாக வழங்கப்படுவதைத் தவிர, வரியெதுவும் அறவிடப்படலாகாது :

ஆயின் எவ்வாறாயினும் 10 ஆம் பிரிவின் கீழ் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட எவரேனும் ஆள், அப்பயன்பட, ஆணையாளர் – தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல், பண்டங்களின் அத்தகைய மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை வழங்கலின் மீது அத்தகைய வரி விதிக்கப்படுதல் வேண்டும்.

4. (1) பண்டங்களின் வழங்கல் நேரம் பின்வரும் சந்தர்ப்பங்களின் போது, இவற்றுள் எது முந்தியதோ அதன்போது, நடைபெறுதல் வேண்டும் : –

(அ) வழங்குநரினால் பண்டங்கள் தொடர்பில் பணப்பட்டியலொன்று வழங்கப்படும் போது; அல்லது

(ஆ) பண்டங்களுக்கான கொடுப்பனவொன்று வழங்குநரினால் பெறப்படும்போது ; அல்லது

(இ) அத்தகைய வழங்கல் தொடர்பில் வழங்குநருக்குக் கொடுப்பனவொன்று வருமதியாகவிருக்கும் போது; அல்லது

(ஈ) பண்டங்களின் ஒப்படைப்புச் செய்யப்பட்டுள்ள போது.

(2) சேவைகளின் வழங்குதல் நேரம் பின்வரும் சந்தர்ப்பங்களின்போது, இவற்றுள் எது முந்தியதோ அதன்போது, நடைபெறுதல் வேண்டும் :–

(அ) சேவைகள் புரியப்படும்போது ; அல்லது

(ஆ) சேவைகளுக்கான அல்லது எதிர்கால சேவைகளுக்கான கொடுப்பனவொன்று செய்யப்படும் போது ; அல்லது

(இ) சேவைகளுக்கான அல்லது எதிர்கால சேவைகளுக்கான கொடுப்பனவொன்று வருமதியாகவுள்ள போது ; அல்லது

(இ) சேவைகள் தொடர்பிலான பணப்பட்டியலொன்று வருமதியாகவுள்ள போது ; அல்லது

(ஈ) சேவைகள் தொடர்பிலான பணப்பட்டடியலொன்று வழங்கப்படும்போது

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பின்வரும் சந்தர்ப்பங்களில் வழங்கலொன்று நட்பைபெறுவதாகக் கருதப்படுதல் வேண்டும் : –

(அ) காலாகாலக் கொடுப்பனவுகளுக்கு ஏற்பாடு செய்கின்றதும், வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை அல்லாததுமான ஓர் உடன்படிக்கையின் கீழ், கொடுப்பனவு வருமதியாகவுள்ளபோது அல்லது கொடுப்பனவு செய்யப்படும்போது, இவற்றுள் எது முந்தியதோ அதன்போது வழங்கலொன்று செய்யப்படுமிடத்து ; அத்துடன்

(ஆ) ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பண்டங்கள் வழங்கப்படுமிடத்து, உடன்படிக்கை செய்துகொள்ளப்படும்போது

5. (1) பண்டங்களினது அல்லது சேவைகளினது வழங்கலின் பெறுமதி –

(அ) வழங்கலானது, பணத்திலான ஒரு பிரதிபயனுக்காகவும் அத்தகைய பிரதிப்பயன் திறந்த சந்தைப் பெறுமதிக்குக் குறையாமலும் இருப்பின், இச்சட்டத்தின் கீழ் இறுக்கப்படற்பாலதான ஏதேனும் வரியையும் அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள். சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையையும் 1991 அம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான தேசியபாதுகாப்பு அறவீட்டையும் கழித்து வரும் அத்தகைய பிரதிபயனாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) வழங்கலானது பணத்திலான பிரதிபயனுக்காக இராதிருப்பின் அல்லது முழுமையாகப் பணத்தைக் கொண்டிராதிருப்பின், அத்தகைய வழங்கலின் திற்நத சந்தைப் பெறுமதியாகவிருத்தல் வேண்டும்.

(2) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, திறந்த சந்தைப் பெறுமதிக்குக் குறைவானவொரு தொகைக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கல் செய்யப்படுமிடத்தும், எவருக்கு வழங்கல் செய்யப்பட்டதோ அவர் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராக இராதிருக்குமிடத்தும், அவ்வழங்கல் தொடர்பிலான பெறுமதி, அத்தகைய வழங்கலின் திறந்த சந்தைப் பெறுமதியாதல் வேண்டும்.

(3) பண்டங்கள் அல்லது சேவைகள், ஊழியத்திலிருந்தான நன்மையாக ஒரு தொழில்தருநரினால் அவரது ஊழியருக்கு வழங்கப்படுமிடத்து, அவ்வழங்கலுக்கான பணத்திலான பெறுமதி, அத்தகைய வழங்கலின் திறந்த சந்தைப் பெறுமதியாதல் வேண்டும் அல்லது அத்தகைய வழங்கலின் திறந்த சந்தைப் பெறுமதி அறியப்பட முடியாததாக இருக்குமிடத்து, அவ்வழங்கலின் பணம் பெறுமதி, வரி மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, வேறெவரேனுமாளினால் துய்க்கப்பட்ட ஒத்த நன்மையின் செலவுத் தொகையாதல் வேண்டும்.

(4) சேவையின் வழங்கலொன்று ஏதேனும் லொத்தரின் கீழ், அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் அல்லது பேரம்பேசுதல் என்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின்கீழ் அல்லது ஒத்த தன்மைத்தான ஏதேனும் தொழிலின் கீழ் செய்யப்படுமிடத்து, அத்தகைய வழங்கலின் பெறுமதி, விடயத்துக்கேற்ப அத்தகைய லொத்தரில் அல்லது அத்தகைய ஒப்பந்தங்களில் அல்லது ஒத்த தன்மைத்தான ஏதேனும் தொழிலில் அளிக்கப்பட்ட பரிசில்களின் அல்லது வெற்றியீட்டுகைகளின் பிரதிபயனைக் கழித்து அத்தகைய வழங்கல் தொடர்பில் பெறப்படற்பாலதான மொத்தப் பணத்தொகையாதல் வேண்டும்.

(5) பண்டங்கள் அல்லது சேவைகள் –

(i) 16 ஆம் பிரிவின் கீழ் பதிவு இல்லாததொழிந்த நேரத்தின் பின்னர் ஆளொருவரினால் வழங்கப்படுமிடத்து ; அல்லது

(ii) 8 ஆம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களைச் செய்கின்ற எவரேனு மாளுக்கு வழங்கப்படுமிடத்து ; அல்லது

(iii) பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லாதவரும் அல்லது 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க விண்ணப்பமொன்றைச் செய்திராத பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரும் ஏதேனும் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை வியாபாரத்தைக் கொண்டு நடாத்துபவரும் அல்லது நிறைவேற்றுபவருமான எவரேனும் ஆளுக்கு வழங்கப்படுமிடத்து ; அல்லது

(iv) வழங்குநரினால் அவரது சொந்தப் பாவனைக்காக அல்லது வரிவிதிக்கப் படற்பாலதான வழங்கலொன்றைச் செய்யும் நோக்கத்துக்காக வல்லாது வேறேதேனும் நோக்கத்துக்காக வழங்குநரினால் தனக்கென்று ஒதுக்கப்படுமிடத்து,

அத்தகைய வழங்கலின் பெறுமதி, திறந்த சந்தைப் பெறுமதியை விடக்குறைவான தல்லவாயிருத்தல் வேண்டும்.

(6) பண்டங்களின் அல்லது சேவைகளின் ஒரு வழங்கல் தொடர்பிலான பிரதிபயன், வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலொன்றுக்கும் வரிவிதிக்கப்படற்பாலதல்லாத வழங்கலொன்றுக்கும் தொடர்புபடுமிடத்து, அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலுக்கான பிரதிபயன், அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாகவுள்ள பிரதிபயனின் அத்தகைய பாகம் எனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழங்கலின் திறந்த சந்தைப் பெறுமதியைவிடக் குறைவாகியிருத்தலுமாகாது.

(7) வழங்குநரினாலோ அல்லது வேறு எவரேனுமாளினாலோ ஏற்பாடு செய்யப்பட்ட, வேறெவையேனும் பண்டங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுமிடத்து அல்லது தயாரிக்கப்படுமிடத்து, அத்தகைய வேறு பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதில் அல்லது தயாரிக்கப்படுவதில் பயன்படுத்தப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட பண்டங்களின் வழங்கற் பெறுமதியும் அத்தகைய உற்பத்தி அல்லது தயாரிப்புச் சம்பந்தமான சேவைகளின் வழங்கற் பெறுமதியும் அத்தகைய வழங்கலின் திறந்த

சந்தைப் பெறுமதியாக அல்லது அத்தகைய வழங்கலுக்காகப் பெறப்பட்ட பிரதிபயன் தொகையாக, இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அதுவாக, இருத்தலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், பண்டங்களின் வழங்கலும், சேவைகளின் வழங்கலும் இரு தனிவேறான வழங்கல்கள் என வரிமதிப்பீட்டாளரின் திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, வரிமதிப்பீட்டாளர், அத்தகைய ஒவ்வொரு வழங்கலையும் தனிவேறான ஒரு வழங்கலாகக் கொள்ளுதல் வேண்டும்.

(8) ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பண்டங்களினது வழங்கலொன்றின் பெறுமதி, 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட காசுவிலையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், திறந்த சந்தைப் பெறுமதியைவிடக் குறைவாகவிருத்தலுமாகாது.

(9) காணி வழங்கலின் பெறுமதி நியமிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் அத்தகைய காணியின் மீது செய்யப்பட்ட சீர்திருத்தங்களின் பெறுமதியாதல் வேண்டுமென்பதுடன், திறந்த சந்தைப் பெறுமதியைவிடக் குறைவாகவிருத்தலுமாகாது.

(10) ஒன்றில் சீட்டொன்றை வழங்குவதன் மேல் அல்லது பணவைப்பின் மூலம் பண்டங்கள் அல்லது சேவைகள் வழங்கப்படுமிடத்து, அத்தகைய வழங்கலின் பெறுமதி விடயத்துக்கேற்ப அத்தகைய சீட்டுக்குச் செலுத்தப்பட்ட தொகையாக அல்லது மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகையாக அல்லாத வைப்பிடப்பட்ட தொகையாக இருத்தல் வேண்டும்.

6\. (1) இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி பின்வருவனவற்றின் கூட்டுமொத்தமாதல் வேண்டும் :-

(அ) சுங்கத் தீர்வையின் நோக்கத்துக்காகத் தீர்மானிக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதி; அத்துடன்

(ஆ) பண்டங்களின் மீதான ஏதேனும் மிகைக் கட்டணமும் ஏதேனும் தீர்வையும் உட்பட, செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சுங்கத்தீர்வையின் தொகை.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக எவையேனும் பண்டங்களின் பெறுமதியைக் கணக்கிடுகையில், பின்வருவன தொடர்பில் இறுக்கப்பட்ட ஏதேனும் தொகை உள்ளடக்கப்படுதல் வேண்டும் :-

(அ) சம்பந்தப்பட்ட பண்டங்கள், அடங்கியுள்ள ஏதேனும் உறை, பொதி, பெட்டி, போத்தல் அல்லது வேறு கொள்கலன் ;

(ஆ) அத்தகைய உறையில், பொதியில், பெட்டியில், போத்தலில் அல்லது வேறு கொள்கலனில் அடங்கியுள்ள அல்லது அவற்றுடன் இணைந்துள்ள வேறு எவையேனும் பண்டங்கள் ; அத்துடன்

(இ) விளம்பரப்படுத்துதல், நிதியளித்தல், சேவையளித்தல், உத்தரவாதமளித்தல், தரகு, இடம் பெயர்த்தல், நிறுவுதல் அல்லது வேறு ஏதேனும் கருமம் என்பவற்றுக்காக அல்லது அவற்றுக்கு ஏற்பாடு செய்வதற்காக இறுக்கப்பட்ட ஏதேனும் தொகையுட்பட (அதே நேரத்தில்செலுத்தற்படற்பாலதாயினுஞ்சரி அல்லது வேறு ஒரு நேரத்தில்

செலுத்தப்படற்பாலதாயினுஞ் சரி) விலையாக இறுக்கப்பட்ட தொகையுடன் சேர்த்து மேலதிகமாக விற்பனை காரணமாக அல்லது விற்பனை தொடர்பில் கொள்வனவுகாரர் விற்பனையாளருக்குச் செலுத்த வேண்டிய ஏதேனும் தொகை.

7. (1) (அ) பண்டங்களின் வழங்கலொன்று வழங்குநரினால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளபோது அத்தகை வழங்குதல் சைபர் வீதமிடப்படுதல் வேண்டும்.

(ஆ) சேவையின் வழங்கலொன்று பின்வருவனவற்றுடன் நேரடியாகத் தொடர்புறுமிடத்து, அத்தகைய வழங்கல் சைபர் வீதமிடப்படுதல் வேண்டும் :-

(i) இலங்கைக்கு வெளியேயுள்ள எதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் ;

(ii) ஏதேனும் வெளிநாட்டுக் கப்பலின் அல்லது வானூர்தியின் ஏதேனும் பழுது பார்த்தல், கடற் கப்பற் சரக்குக் கொள்கலன்களின் ஏதேனும் மீளப் புதுப்பித்தல் அல்லது மீள் ஏற்றுமதி நோக்கத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட வேறெவையேனும் பண்டங்கள் ;

(iii) அத்தகைய உரிமை இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்காகவிருக்கு மிடத்தும் பயன்படுத்தப்படுவதற்காகவிருக்கும் அளவுக்கும், ஒரு பதிப்புரிமை, ஆக்கவுரிமை, உரிமம், வியாபாரக்குறி அல்லது இதையொத்த புலமைச்சொத்து உரிமை.

(2) பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குமிடத்தும் அவ்வழங்கலானது சைபர் வீதமிடப்பட்டதாகவுள்ளவிடத்தும், அப்போது –

(அ) அத்தகைய வழங்கல் தொடர்பில் வரியெதுவும் இறுக்கப்படலாகாது ;

(ஆ) வழங்கலானது, மற்றெல்லா அம்சங்களிலும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்க லொன்றாகக் கொள்ளப்பட்டு அதற்கிணங்க வழங்கலின்மீது வரியானது இறுக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் வீதம் சைபராகும்.

8. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 7 ஆம் பிரிவின் கீழ் சைபர் வீதமிடப்பட்டவாறான அத்தகைய எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள பண்டங்களினது அல்லது சேவைகளினது வழங்கலுக்கும் அத்துடன் பண்டங்களின் இறக்குமதிக்கும் ஏற்புடையனவாதலாகாது.

9. வழங்குநர் இலங்கையில் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடாத்தும் போதும் அல்லது நிறேவற்றும் போதும் அத்துடன் பண்டம் வழங்குநரால் அல்லது அவரது முகவரால், வழங்கப்படும் நேரத்தில் அப்பண்டங்கள் இலங்கையிலிருக்கும்போதும் அல்லது சேவைகள் இலங்கையில் புரியப்படும்போதும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு பண்டங்கள் அல்லது சேவைகள் இலங்கையில் வழங்கப்படுவையாகக் கணிக்கப்படல் வேண்டும்.

# அத்தியாயம் II

## பதிவு

10. (1) நியமிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்றபோது ஆள் ஒவ்வொருவரும் பின்வரும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட பொறுப்பாளராதல் வேண்டும் :-

(ஆ) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியின் முடிவில் அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின் ; அல்லது

(ஆ) அப்போது முடிவடையும் நான்கு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி களின்போது, இலங்கையில் செய்யப்பட்ட அவரது வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலின் மொத்தப் பெறுமதி ஏழு இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின் ; அல்லது

(இ) வரிவிதிக்கப்படறபாலதான காலப்பகுதியொன்றில் அவரது வரிவிதிக்கப்படற் பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சக் கூடிய சாத்தியத்தை அல்லது அடுத்துவரும் நான்கு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகளில் ஏழு இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்குமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு பொறுப்பாக்கப்படும் ஆள் ஒவ்வொருவரும், அவர் அவ்வாறு பொறுப்பானவராகும் திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி, பண்டங்களின் உற்பத்தியாளரினால் அல்லது அப்பண்டங்களின் இறக்குமதியாளரினால் கொண்டு நடாத்தப்பட்ட வியாபார செயற்பாடுகளாகவிராத ஏதேனும் மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரச் செயற்பாட்டின் வழங்கல்களை உள்ளடக்குதலாகாது.

11. (1) இலங்கைக்குள் பண்டங்களின் இறக்குமதியாளராகவுள்ள ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய பண்டங்களை வெளியே எடுக்குமுன்னர் பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் – தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுப்பதற்கு பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பண்டங்களை வெளியெடுப்பதற்காக ஆணையாளர், தலைமையதிபதியிடமிருந்து அடையாள இலக்கமொன்றைப் பெறுதலும் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், தனது சொந்தப் பாவனைக்கு இலங்கைக்குள் பண்டங்களை இறக்குமதி செய்யும் ஆள் ஒருவர் அல்லது 10 ஆம் பிரிவின் கீழ் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆள் ஒருவர் ஆணையாளர் – தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுக்க ஆளாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் – தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்து அடையாள இலக்கமொன்றைப் பெறுவதற்குப் பொறுப்புடையவராக வுள்ள இறக்குமதியாளர் ஒவ்வொருவரும் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்தல் வேண்டும்.

12. மூன்றாம் அத்துடன் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஓர் இறக்குமதியாளர் உட்பட்ட எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான பதிவுக்காக குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

13. (1) எவரேனுமாள் –

(அ) 10 ஆம் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யாதிருந்துள்ளவிடத்தும் ஆனால் அவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற நிறைவேற்றப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு பொறுப்புடையவர் என ஆணையாளர் – தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்தும், அவர் விசாரிக்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அத்தகைய ஆளுக்கு அளித்த பின்னர், அவரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான திகதியிலிருந்து அத்தகைய ஆளைப் பதிவு செய்தல் வேண்டும்.

14. பதின்மூன்றாம் பிரிவின் கீழ் ஆளொருவரைப் பதிவு செய்யும் நோக்கங்களுக்காக ஆணையாளர் – தலைமையதிபதி அவரினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பாக எந்நேரத்திலும் அத்தகைய ஆளிடமிருந்து ஏதேனும் தகவலைக் கோரலாம்.

15. (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஆளொருவரைப் பதிவு செய்ததன் மேல் –

(அ) வரிப்பதிவு இலக்கமொன்றையும் ; அத்துடன்

(ஆ) பதிவுச் சான்றிதழொன்றையும்.

அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) பதிவுச் சான்றிதழலானது, பதிவு செய்யப்பட்ட ஆளின் பெயரையும் மற்றும் வேறு இயைபான விபரங்களையும், பதிவானது பயனுக்கு வரும் திகதியையும், அத்துடன் அத்தகைய ஆளின் வரிப்பதிவு இலக்கத்தையும் தருதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்குப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதோ அந்த ஆள், அவரினாற் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு எவ்விடத்தில் கொண்டு நடத்தப்படுகிறதோ அல்லது நிறைவேற்றப்படுகிறதோ அவ்விடத்தில் அத்தகைய சான்றிதழைத் துலாம்பரமாக வெளிக்காட்டி வைத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் இடங்கள் இருக்கும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழின் பிரதிகள் வெளிக்காட்டி வைக்கப்படலாம்.

(4) எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கயொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர் – தலைமையதிபதி –

(அ) ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு பணத் தொகையிலான தண்டமொன்றை அத்தகைய ஆள் மீது விதிக்கலாம் என்பதுடன், அத்தகைய தண்டம் விதிக்கப்பட்டமை பற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அறிவித்தலும் கொடுக்கலாம் ;

(ஆ) அத்தகைய ஆளை எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தலாம் : –

(i) அத்தகைய தண்டத்தைச் செலுத்தும்படியும் ; அத்துடன்

(ii) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி யொழுகும்படியும்.

(5) நான்காம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் எவரேனுமாள் மீது விதிக்கப்பட்ட தண்டமெதனையும், அத்தகைய ஆள் (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியமை அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாகவிருந்ததென்றும், அவர் அதற்குப் பின்னர் அத்தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரென்றும் ஆணையாளர் – தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தால், ஆணையாளர் – தலைமையதிபதி குறைக்கலாம், அல்லது இல்லாதொழிக்கலாம்.

16. (1) பதிவுத் திகதியைப் பின்தொடர்ந்துவரும் அடுத்தடுத்த எட்டு வரிவிதிக்கப்படற்பாலனவான காலாப்பகுதிகளுக்குப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவரது வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி 10 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள பெறுமதியை விஞ்சாதிருக்குமிடத்தும் அல்லது அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடத்தாது அல்லது நிறைவேற்றாதொழிந்திருக்குமிடத்தும், அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகள் கழிந்த பின்னர் எந்நேரத்திலும் அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் தமது பதிவை இல்லாதாக்குவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஆணையாளர் – தலைமையதிபதி, 3 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய ஆள் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடத்தாது அல்லது நிறைவேற்றாதொழிந்துள்ளார் என, அல்லது அவரது வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி 10 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள பெறுமதியை விஞ்சுகின்றதல்ல எனத் திருப்திப்படுமிடத்து அவரது பதிவை இல்லாதாக்குதல் வேண்டும்.

(2) பத்தாம் பிரிவின் கீழ் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனுமாள் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டுநடாத்தாது அல்லது, நிறைவேற்றாதொழியவில்லை என ஆணையாளர் – தலைமையதிபதி அபிப்பிராயப்படு மிடத்து அல்லது அரசிறையைப் பாதுகாப்பதற்காக அவரது பதிவை தொடர்ந்து வைத்திருத்தல் அவசியமானதும் உசிதமானது என ஆணையாளர் – தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து அத்தகைய ஆளின் பதிவை ஆணையாளர் – தலைமையதிபதி இல்லாதாக்க மறுக்கலாம்.

(4) ஆணையாளர் – தலைமையதிபதி எவரேனுமாளின் பதிவை இல்லாதாக்குகின்றவிடத்து, பதிவஞ்சல் மூலம் அவர் இல்லாதாக்கல் திகதியை அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(5) பதிவு இல்லாதாக்கல் திகதியிலிருந்து அவ்வாளினால் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் சொத்துக்களின் பாகமாக அப்போது அமையும் எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு அத்தகைய எல்லாச் சொத்துக்களும் உட்பட பதிவு செய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள இன்னோராளினால் கொண்டு நடாத்தப்பட்டால் அல்லது, நிறைவேற்றப்பட்டாலொழிய இல்லாதாக்கல் திகதிக்கு நேர்முன்னரான ஒரு நேரத்தில் வரிவிதிக்கப்படற்பாலதான ஒரு செயற்பாட்டைக் கொண்டு நடாத்தும்போது அல்லது நிறைவேற்றும் போது அவ்வாளினால் வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. (1) எவரேனுமாளின் பதிவு ஆணையாளர் – தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்பட்டுள்ள போது, அத்தகைய ஆள் –

(அ) பதிவினது எக்காலப்பகுதியின்போது செல்லுபடியாகவிருந்ததோ அக்காலப்பகுதியின் போது கடைசி வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் கடைசி நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் தமக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை ஆணையாளர் – தலைமையதிபதிக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும் ;

(ஆ) பதிவுச் சான்றிதழை அல்லது அதன் ஒரு பிரதியை அத்தகைய வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடு, கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற ஏதேனுமிடத்தில் வெளிக்காட்டி வைத்தல் ஆகாது ; அத்துடன்

(இ) விடயத்துக்கேற்ப ஏதேனும் வரிப்பணப் பட்டியலை, வரிப்பற்றுக் குறிப்பை அல்லது வரி வரவுக் குறிப்பை வழங்குதலாகாது.

(2) எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர் – தலைமையதிபதி –

(ஆ) ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு பணத் தொகையிலான தண்டமொன்றை அத்தகைய ஆள்மீது விதிக்கலாம் என்பதுடன், அத்தகைய தண்டம் விதிக்கப்பட்டமை பற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அறிவித்தலும் கொடுக்கலாம் ;

(ஆ) அத்தகைய ஆளை எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தலாம் : -

(i) அத்தகைய தண்டத்தைச் செலுத்தும்படியும் ; அத்துடன்

(ii) அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின் கீழான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் படியும்

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் எவரேனுமாள் மீது விதிக்கப்பட்ட தண்டமெதனையும் அத்தகைய ஆள் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியமை, அவரது கட்டுப்பாட்டுக்கு, அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாகவிருந்ததென்றும், அவர் அதற்குப் பின்னர் அத்தேவைகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரென்றும் ஆணையாளர்– தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தால், ஆணையாளர் – தலைமையதிபதி குறைக்கலாம், அல்லது இல்லாதொழிக்கலாம்.

18. பதினாறாம் பிரிவின் கீழ் பதிவு இல்லாததாக்கப்பட்டமை எப்படியிருப்பினும் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் அவரினால் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பானலதான வழங்கல்கள் தொடர்பில் அவர் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராக இருந்தபோது அவரினாற் செய்யப்பட்ட அல்லது செய்யப்படாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காகப் பொறுப்பாளியாதல் வேண்டும்.

19. பதிவு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், பின்வரும் மாற்றங்களை, அம்மாற்றம் ஏற்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் – தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(அ) அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு எப்பெயரிலும் முகவரியிலும் இடத்திலும் கொண்டு நடாத்தப்படுகிறதோ அப்பெயரிலும் முகவரியிலும் இடத்திலுமான மாற்றமெதுவும் ;

(ஆ) அவரினாற் கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் தன்மையிலான மாற்றமெதுவும்,

(இ) விபரத் திரட்டுக்களையும் ஏனைய ஆவணங்களையும் ஒப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளிலான மாற்றமெதுவும் ; அத்துடன்

(ஈ) வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் சொத்தாண்மையிலான மாற்றமெதுவும்

20. (1) வழங்கல் ஒன்றைச் செய்கின்ற பதிவு செய்யப்பட்ட ஆளொருவர், அத்தகைய வழங்கலைப் பெறும் பதிவு செய்யப்பட்ட இன்னொருவருக்கு அத்தகைய வழங்கலின் நேரத்தின் பின்னர் பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் வரிப் பணப்பட்டியல் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) வரிப்பணப்பட்டியல் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுதல் வேண்டும் –

(அ) வழங்குநரின் பெயர், முகவரி அத்துடன் பதிவிலக்கம் ;

(ஆ) அவ்வழங்கல் எவருக்குச் செய்யப்படுகின்றதோ அவரின் பெயர், முகவரி அத்துடன் பதிவிலக்கம் (ஏதேனுமிருப்பின்) ;

(இ) வரிப்பணப்பட்டியல் வழங்கப்பட்ட திகதியும் அதன் தொடரிலக்கமும் ;

(ஆ) வழங்கற்றிகதியும், வழங்கப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் விவரணமும் ;

(உ) வழங்கலின் அளவும் தொகையும் ; அத்துடன்,

(ஊ) வழங்கலின் பெறுமதியும், 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையும், 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தேசிய பாதுகாப்பு அறவீடும் இறுக்கப்பட்ட வரியும் அத்துடன் வழங்கலுக்கான பிரதிபயனும்.

(3) பண்டங்கள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளவிடத்து, சுங்கப் பண்டங்கள் வெளிப்படுத்துகை அல்லது சுங்கப் பணிப்பாளர் – தலைமையதிபதியினால் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட வேறேதேனும் ஆவணம் ஒரு வரிப்பணப் பட்டியலாகக் கொள்ளப் படுதல் வேண்டும்.

(4) எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் வரிப்பணப் பட்டியல் வழங்கப்பட்டதோ அந்தக் காலாண்டு முடிவுற்ற பின்னர் ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு, அத்தகைய வரிப்பணப் பட்டியலின் மூலப் பிரதி அத்தகைய வழங்கல் எவருக்கு வழங்கப்பட்டதோ அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரிப்பணப் பட்டியலின் இணைப்பிரதி அத்தகைய வழங்கலைச் செய்கின்ற ஆளினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(5) ஒவ்வொரு வழங்கலுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிப்பணப் பட்டியல்களை வழங்குவது சட்டமுறையானதாதலாகாது. பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் வரிப்பணப்பட்டியலின் மூலப்பிரதியைத் தொலைத்து விட்டாரெனக் கோரினால், வழங்கலைச் செய்பவர். "பிரதி மாத்திரம்" எனத் தெளிவாக அடையாளமிடப்பட்டஒரு பிரதியை அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளுக்கு வழங்கலாம்.

(6) பதிவு செய்யப்பட்ட ஆளொருவரால் பதிவு செய்யப்படாத ஆளொருவருக்கு வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலொன்று செய்யப்படுமிடத்து, பதிவு செய்யப்பட்ட அத்தகைய ஆள், அத்தகைய வழங்கலின் வரியும் அத்தகைய வழங்கலுக்கு ஏற்புடைத்தான வரிவீதமும் உட்பட பிரதிபயனைக் குறிப்பிட்டு, பதிவு செய்யப்படாத அத்தகைய ஆளுக்கு அனுப்பும் பொருட்பட்டியலொன்றை வழங்குதல் வேண்டும்.

(7) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அதன்பின்னர் குற்றத்தீர்ப்பளிப்பின் பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் பட்சத்தில் அத்தவறு அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாக் குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் எவரேனுமாள், அவரது குற்றத்தீர்ப்புத் திகதியிலிருந்து பதினான்கு நாட்கள் கழிந்த காலப்பகுதிக்குப் பின்னர் அத்தகைய தவறைத் தொடர்ந்து புரியுமிடத்து, நீதிமன்றமானது, ஆணையாளர் – தலைமையதிபதியினால் அல்லது ஆணையாளர் – தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் தொழிலை மூடிவிடுவதற்கான விண்ணப்பம் செய்யப்படுவதன் மீது, அத்தகைய தொழிலை மூடிவிடும்படி கட்டளையிடலாம்.

(99 எட்டாம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மூடிவிடுதற் கட்டளைக்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆள் தவறுகின்ற ஏதேனும் விடயத்தில், நீதிவான், நீதிமன்றப் பிசுக்காலை அத்தகைய கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று முழு நாட்களுக்கு முந்தாத அல்லது ஏழு முழுநாட்களுக்குப் பிந்தாத திகதியொன்றாகவிராததும், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஒரு திகதிக்கு முன்னரானதுமான ஒரு திகதிக்கு முன் அத்தகைய தொழிலை மூடிவிட வேண்டுமெனத் தேவைப்படுத்தியும், அவருக்கு அதிகாரமளித்தும் உடனடியாக அத்தகைய பிசுக்காலுக்குக் கட்டளையிடுதல் வேண்டும். பிசுக்கால் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய பொலிசு அலுவலர் அத்தகைய தொழிலை மூடிவிடுவதற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய உதவியாளர்களுடன் அத்தகைய தொழில் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வளவுகளினுள் பிரவேசிப்பதற்கு அத்தகைய கட்டளை சொல்லப்பட்ட பிசுக்காலுக்கு அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பொலிசு அலுவலருக்குப்போதிய அதிகாரமாதல் வேண்டும்.

## அத்தியாயம் III

## விபரத் திரட்டுகளும் வரியைக் கணக்கிடுதலும்

21\. (1) பதிவு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னர், பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் போது அவரது வழங்கல்கள் பற்றிய விபரத்திரட்டொன்றை ஆணையாளர் – தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். அத்தகைய விபரத்திரட்டு ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய படிவத்தில் தரப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் படக்கூடியவாறான அத்தகைய எல்லா விபரங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும் –

(i) பதிவு செய்யப்பட்ட ஆளொருவரான ஏற்றுமதியாளரொருவர் ; அல்லது

(ii) ஒவ்வொரு மாதமும் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்கள் மீதான வரியை 26 ஆம் பிரிவின் கீழ் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் ; அல்லது

(iii) பதிவு செய்யப்பட்ட ஆளொருவராக இருப்பவரும் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளவரும், இச் சட்டத்துக்கான அட்டவணையின் இனம் (xxvi) இல் அல்லது (xxvii) இல் குறிப்பீடு செய்யப்பட்டவருமான எவரேனுமாள்.

ஒவ்வொரு மாதமும் முடிவுற்ற பின்னர் பதினைந்து நாட்களுக்குப் பிந்தாத வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின்போது அத்தகைய மாதத்தில் அவரினால் செய்யப்பட்ட அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்கள் தொடர்பில் முதலாம் இரண்டாம் மாதத்திற்கு விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாளரொருவர், எழுத்திலான அறிவித்தல் மூலம், அவரது தீர்ப்பில் வரி இறுக்கப்படற்பாலனவாகவுள்ள ஆள் ஒருவரான எவரேனுமாளை, அவர் பதிவு செய்யப்படவில்லை என்ற நிகழ்வைப் பொருட்படுத்தாது, அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விபரத் திரட்டொன்றைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்.

(4) எவரேனுமாளினாற் செய்யப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கல் தொடர்பில் முழுத்தகவலையும் பெற்றுக் கொள்ளும் நோக்கங்களுக்காக, வரிமதிப்பீட்டாளர் ஒருவர் பின்வருவனவற்றைச் செய்யும்படி அவரைத் தேவைப்படுத்தி அத்தகைய ஆளுக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுக்கலாம். –

(அ) அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள், அத்தகைய புத்தகங்களிலும், ஆவணங்களிலும் கணக்குகளிலும் உள்ள பதிவீடுகளைச் சரிபார்ப்பதற்கென எவையேனும் கணக்குப் புத்தகங்களை அவை கை மூலமான அல்லது எந்திரவியல் அல்லது இலத்திரனியல் முறையான வடிவத்தில் அடங்கியிருப்பினுஞ் சரி அல்லது அவற்றின் சேர்க்கையாக இருப்பினுஞ் சரி, வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல் களை, இடாப்புகளை, பணப்பட்டியல்களை, காசோலைகளை, வங்கிக்கூற்றுக்களை, பணஞ்செலுத்தும் சீட்டுக்களை, கணக்குகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை அல்லது குறித்துரைக்கப்படக்கூடியவாறு அவரது உடைமையிலுள்ள ஏனைய ஆவணங்களைப் பரிசோதனைக்குக் காண்பித்தல் அல்லது வரிமதிப்பீட்டாளருக்கு அனுப்பி வைத்தல் ;

(ஆ) அவ்வாளினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பாக விசாரிக்கப்படும் நோக்கத்துக்காக அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய திகதியிலும் அத்தகைய நேரத்திலும் தானகவோ அல்லது அதிகார மளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலமாகவோ வருகை தருதல்.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பிரதி ஆணையாளரொருவர் எவரேனுமாளைப் பின்வருவனவற்றைச் செய்யும்படி தேவைப்படுத்தி எழுத்திலான அறிவித்தலும் கொடுக்கலாம் :-

(அ) அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் எவையேனும் கணக்குப் புத்தகங்களை (அவை கை மூலமான அல்லது எந்திரவியல் அல்லது இரத்திரனியல் வடிவத்தில் அமைந்திருப்பினுஞ் சரி அல்லது அவற்றின் சேர்க்கையாயினுஞ் சரி) வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புகளை, பணப்பட்டியல்களை, காசோலைகளை, பணம் செலுத்தும் சீட்டுக்களை, வங்கிக் கூற்றுக்களை, கணக்குகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை அல்லது அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிவாறு அவரது உடைமையிலுள்ள வேறு ஆவணங்களை அத்தகைய பிரதி ஆணையாளருக்குக் காண்பித்தல் அல்லது அனுப்பி வைத்தல் ;

(ஆ) அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கருமத்தின் மீது அவரை விசாரிக்கும் வகையில் அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய திகதியிலும் அத்தகைய நேரத்திலும் தானகவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலமாகவோ வருகை தருதல்.

(6) நான்காம் உட்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கியொழுக வருகை தரும் ஆளொருவருக்கு அவ்வாறு வருகை தருவதில் அவரினால் அவசியமாக உறப்படும் எவையேனும் நியாயமான செலவுகள் ஆணையாளர் – தலைமையதிபதியினால் அனுமதிக்கப்படலாம்.

(7) பிரதி ஆணையாளரொருவர் அல்லது பிரதி ஆணையாளரொருவரின் அங்கீகாரத்தோடு வரிமதிப்பீட்டாளரொருவர் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அத்தகைய வைத்திருத்தல் அவசியமாகும் காலம் வரை, அத்தகைய புத்தகங்களிலும் ஆவணங்களிலும் கணக்குகளிலும் உள்ள பதிவீடுகளைச் சரிபார்ப்பதற்கென கைமூலமான, அல்லது எந்திரவியல் அல்லது இலத்திரனியல் முறையான வடிவத்தைக் கொண்டுள்ளதாயினுஞ் சரி அல்லது அவற்றின் சேர்க்கை கோரிக்கையாகவிருப்பினுஞ் சரி எவையேனும் புத்தகங்களை வியாபார நிரல்களை, கையிருப்பு நிரல்களை, இடாப்புகளை, பணப்பட்டியல்களை காசோலைகளை, வங்கிக் கூற்றுக்களை, பண்ம் செலுத்தும் சீட்டுக்களை, கணக்குகளை, கணக்காய்வாளர் அறிக்கைகளை அல்லது குறித்துரைக்கப்படக் கூடியவாறு அவரது உடைமையிலுள்ள ஏனைய ஆவணங்களைத் தமது கட்டுக்காப்பில் வைத்திருக்கலாம்.

(8) வரிமதிப்பீட்டாளரொருவர், அவர் அவசியமென எண்ணும் போது எழுத்திலான அறிவித்தலொன்றிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள், பின்வருவனவற்றைக் கொடுத்துதவும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்தி அவருக்கு அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கலாம் :-

(அ) இன்னமும் முழுமையான அல்லது மேலதிகமான விபரத்திரட்டுகள் ; அல்லது,

(ஆ) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான வரியை வரிமதிப்பீடு செய்வதற்கு அவசியமானதாக அல்லது இயைபான தாக இருக்கும் ஏதேனும் கருமம் தொடர்பாக இன்னமும் முழுமையான அல்லது மேலதிகமான தகவல்.

(9) எவரேனுமாளினால் அல்லது அவர் சார்பில் இச்சட்டத்தின் கீழ் கொடுத்துதவப்பட்டதெனக் கொள்ளப்படும் ஒரு விபரத்திரட்டு, கூற்று அல்லது படிவம், முரணாக எண்பிக்கப் பட்டாலொழிய எல்லா நோக்கங்களுக்காகவும் விடயத்துக்கேற்ப அவ்வாளினால் அல்லது அவரது அதிகாரத்தினால் கொடுத்துதவப்பட்டதென கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விபரத்திரட்டை, கூற்றை அல்லது படிவத்தை ஒப்பமிடும் எவரேனும் ஆள் அதன்கண் அடங்கியுள்ள எல்லாக் கருமங்கள் பற்றியும் பரிச்சயமாகவிருப்பவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(10) எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறு மிடத்து, அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் வரிமதிப்பீட்டாளரொருவரினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஓர் அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்தினுள், வரிமதிப்பீட்டாளர் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள ஒரு விபரத் திரட்டைக் கொடுத்துதவும்படி அவரைப் பணிக்கின்ற அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர்–தலைமையதிபதி :–

(அ) ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகையிலான ஒரு தண்டத்தை அத்தகைய ஆளின் மீது விதிக்கலாம் என்பதுடன், அத்தகைய தண்டம் விதிக்கப் பட்டமை பற்றி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அறிவித்தலும் கொடுக்கலாம்.

(ஆ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய ஆளைப் பின்வருமாறு செய்யும்படி தேவைப்படுத்தலாம்.

(i) அத்தகைய தண்டத்தைச் செலுத்தும்படியும் ; அத்துடன்

(ii) அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள், விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்பட்ட விபரத்திரட்டு அவரால் கொடுத்துதவப்பட்டிராவிடின் அத்தகைய தேவைப்படுகளுக்கு இணங்கியொழுகும்படியும்.

(11) ஆணையாளர் – தலைமையதிபதி, (10) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் எவரேனுமாளின் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்தை, அத்தகைய ஆள் விடயத்திற் கேற்ப (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழான பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறியமை அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாகவிருந்ததென்றும் அவர் அடுத்துப் பின்னர் அத்தகைய தேவைப்பாடுகளுக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகியுள்ளா ரென்றும் ஆணையாளர் – தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தால் குறைக்கலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(12) ஓராம் உட்பிரிவின் கீழ் விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவ அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறியமைக்கு (10) ஆம் உட்பிரிவின் கிழ் தண்டமொன்று விதிக்கப்படுமிடத்து அவ்விபரத்திரட்டு அல்லது அறிவித்தல் தொடர்பாக 68 (ஊ) என்னும் பிரிவின் கீழான ஏதேனும் தவறுக்காக அத்தகைய ஆள் குற்றவழக்குத் தொடுப்புக்கு ஆளாதவராதலாகாது.

22. (1) பதிவு செய்யப்பட்ட ஆளொருவர், அவரால் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்கள் தொடர்பில் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளைக் குறிப்பீடு செய்வதன் மூலம் கணக்கிடுதலும் வரிசெலுத்துதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பதிவு செய்யப்பட்ட ஆளொருவர், அத்தகைய ஒவ்வொரு காலப்பகுதியினதும் முடிவில் இச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படற்பாலதாக வுள்ள அவரது உள்ளீட்டு வரியின் அந்த ஆளை வரவு வைப்பதற்கும் பின்னர் அத்தகைய தொகையை அவரிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் வெளியீட்டு வரியிலிருந்து கழிப்பதற்கும் உரித்துடையவராவார்.

(3) பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள், அல்லது அவரினால் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள், பகுதியளவில் அவரினால் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றின் நோக்கங்களுக்காகவும், பகுதியளவில் வேறு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுமிடத்து அல்லது பயன்படுத்தப்படவுள்ளவிடத்து, வழங்கல்கள் இறக்குமதிகள் என்பன மீதான வரி, அவரது வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டிற்கு குறிப்பீடு செய்யப்படற்பாலதான அத்தகைய வழங்கலின் அல்லது இறக்குமதியின் மீதானவரியின் அந்த அளவு மட்டுமே அவரது உள்ளீட்டு வரியாகக் கணக்கிடப்படும் வகையில் பங்கிடப்படுதல் வேண்டும்.

(4) இருபத்தோராம் பிரிவின் கீழ் ஏதேனும் விவரத்திரட்டு கொடுத்துதவப்பட்ட விடத்தும் அத்துடன் விவரத்திரட்டு தொடர்புறுத்தும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில் உள்ளீட்டு வரியின் தொகை வெளியீட்டு வரித்தொகையை விஞ்சினால், உள்ளீட்டு வரியின் விஞ்சுதொகை மீளளிக்கப்படலாகாது. ஆனால் அடுத்து பின்வரும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியினதும் அதன் பின்னரும் வரும் காலப்பகுதியினதும் வெளியீட்டு வரிக்கெதிராக ஈடுசெய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விஞ்சுதொகை எக்காலப் பகுதியில் முதன்முதலாக எழுந்ததோ அக்காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களில் 58 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அவ்வாறு எதிரீடு செய்யப்பட்டிராத அத்தகைய விஞ்சுதொகையின் மீதியெதுவும் மீளளிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அது அவ்வாறு மீளளிக்கப்படாதவிடத்து, ஆணையாளர் - தலைமையதிபதி, மீளளிப்பு வருமதியாகின்ற அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவிலிருந்து ஒரு மாதம் முடிவுறுவதன் மீது தொடங்குகின்றதும் மீளளிப்புத் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கு, அத்தகைய தொகை மீது 59 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வீதத்தில் வட்டி செலுத்துதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியொன்றில், ஏதேனும் மாதத்தில், -

(அ) சைபர் வீதமிடப்பட்ட வழங்கல்களின் பெறுமதி அம்மாதத்திற்கு வரிவிதிக்கப்படற் பாலதான மொத்த வாங்கல்களின் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவாகவிராதவிடத்து, சைபர் வீதமிடப்பட்ட வழங்கல்கள், வரிவிதிக்கப்படற்பாலதான மொத்த வழங்கல்களுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளனவோ அந்த விகிதாசாரத்

துக்குச் சமமானவாறு முன்னைய மாதத்திலிருந்து முன்கொணரப்பட்ட எதேனும் மிகை உட்பட உள்ளீட்டு வரியில் மிகையின் அத்தகைய பாகம். அல்லது

(ஆ) இச்சட்டத்திற்கான அட்டவணையின் (XXVI) அல்லது (XXVII) ஆம் இனங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் போது 21ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (III) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில் வரிவிதிக்கப்படற்பாலதான அத்தகைய காலப்பகுதியொன்றில் அத்தகைய ஏதேனும் மாதத்தில் உள்ளீட்டு விஞ்சு தொகை 58 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, விஞ்சதொகை, எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் எழுந்ததோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி முடிவடைந்த பின்னர் உடனடியாக ஒரு மாதத்துக்குப் பிந்தாமல் மீளளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய மீளளிப்பைச் செலுத்தத் தவறும் பட்சத்தில், அத்தகைய மீளளிப்பின் மீதான வட்டி, மீளளிப்பு வருமதியாக வந்த திகதியிலிருந்து அது கொடுப்பனவு செய்யப்படும் திகதி வரை, 59 ஆம் பிரிவின் கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(5) பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலுக்கு ஏற்றிக் கூறற்படற்பாலதான ஏதேனும் உள்ளீட்டு வரி, பின்வருவன தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழ் கழிக்கப்படுதலாகாது : -

(i) வழங்கலானது தொழில்தருநரினால் அவரது ஊழியர்களை இடம் பெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மோட்டார் சயிக்கிள்கள், பைசிக்கிள்கள் மற்றும் மோட்டார் கோச்சுக்கள் தவிர்ந்த மோட்டார் வாகனங்கள் மற்றும் பொழுது போக்குச் சுற்றுலாப் பயணங்களுக்கு அல்லது உல்லாசப் பயணிகளை இடம் பெயர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள், அல்லது வாடகைக் கார்கள் அல்லது எவையேனும் பண்டங்களை இடம்பெயர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பில் இருக்குமாயின் ;

(ii) பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்கலானது, வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டுடன் சம்பந்தப்படாதிருப்பின் ;

(iii) வழங்கலானது வரிப்பட்டியலொன்றினால், அல்லது சுங்கப் பகுதிப் பண்டங்கள் வெளிப்படுத்துகையொன்றினால் அல்லது, சுங்கப் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் வழங்கப்பட்ட சான்றுறுதி செய்யப்பட்ட வேறு ஆவணத்தினால் ஆதாரமளிக்கப்படாவிடின் ,

23. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட ஆளும், பணப்பட்டியல் அடிப்படையில் வரிக்குக் கணக்குக் காட்டுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், ஆணையாளர் - தலைமையதிபதி, பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் மேல் கொடுப்பனவு அடிப்படையில் வரிக்குக் கணக்குக் காட்டும்படி அத்தகைய ஆளைப் பணிக்கலாம்.

24. ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் செலுத்தப்படற்பாலதான வரித்தொகையை நிச்சயிக்கையில், பதிவு செய்யப்பட்ட ஓர் ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டில் உறப்பட்டதும், அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் போது அறவிடமுடியாததாக வந்துள்ளதுமான ஏதேனும் அறவிட முடியாக்கடனுக்கு நேரோத்ததாகவுள்ள வரித்தொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும். கழிக்கப்படற்பாலதான வரித்தொகையானது பதிவழிக்கப்படவுள்ள, அறவிடமுடியாக் கடன் தொடர்பில் முன்னைய வரிவிதிக்கப்படற்பாலதான ஒரு காலப்பகுதியில் வரியாகச் செலுத்தப்பட்ட தொகையை விஞ்சுதலாகாது ;

ஆயின், அவ்வாறு பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடனின் கணக்கால் அவ்வாளினால் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் பணத்தொகை பெறப்படின், 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அது எந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் பெறப்பட்டதோ அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின்போது வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலாக கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், வரிக்குட்பட்டதாதலும் வேண்டும்.

25. (1) பதிவு செய்யப்பட்ட ஆளொருவர், இன்னுமோர் பதிவு செய்யப்பட்ட ஆளுக்குச் செய்யப்பட்ட வழங்கலொன்றின் மீது வரிப்பணப்பட்டியலொன்றை வழங்கியுள்ளதுடன் வரியைக் குறைத்து இறுப்பனவு செய்தமை மூலம் அல்லது மிகையாக இறுப்பனவு செய்தமை மூலம் சரியற்ற ஒரு தொகைக்குக் கணக்குக் காட்டியுள்ளவிடத்து அவ்வாறு குறைத்து இறுப்பனவு செய்யப்பட்ட அல்லது மிகையாக இறுப்பனவு செய்யப்பட்ட வரித்தொகையைச் சரிக்கட்டும் நோக்கத்திற்காக, விடயத்துக்கேற்ப, அத்தகைய வேறு ஆளுக்கு ஒரு வரிப்பற்றுக் குறிப்பை அல்லது வரிவரவுக் குறிப்பை வழங்குவதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஒரு வழங்கல் தொடர்பிலும் அத்தகைய குறிப்பு வழங்கப்பட்ட காலப்பகுதி தொடர்பிலும் விடயத்துக்கேற்ப வரிப்பற்றுக் குறிப்பு அல்லது வரி வரவுக் குறிப்பு வழங்கப்படுவதன் மேல் : –

(ஆ) வழங்குநர், கணக்குக் காட்டப்பட்ட தொகையை விஞ்சுவதாகவுள்ளதும் அவ்வழங்கல் தொடர்பில் இறுக்கப்படற்பாலதாகவிருந்ததுமான வரியின் அத்தகைய தொகையை வெளியீட்டு வரியாகச் செலுத்துதல் வேண்டும் அல்லது இறுக்கப்படற்பாலதான வரித் தொகையை விஞ்சுவதாகவுள்ளதும், வெளியீட்டு வரியாகக் கணக்குக் காட்டப்பட்டதுமான அத்தகைய தொகையை உள்ளீட்டு வரியாகக் கழித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) எவருக்கு வழங்கல் செய்யப்பட்டதோ அவர் விடயத்துக்கேற்ப வெளியீட்டு வரியாக, கழிக்கப்பட்டிருக்க வேண்டிய தகுந்த தொகையை விஞ்சுவதாகவுள்ளதும் உள்ளீட்டு வரியாக அவரினால் கழிக்கப்பட்டதுமான வரியின் அத்தகைய தொகையை வெளியீட்டு வ்ரியாகச் செலுத்துதல் வேண்டும் அல்லது அவரின் கழிக்கப்படற்பாலதாகவிருந்த அல்லது அவரினால் கழிக்கப்பட்ட உண்மையான தொகையை விஞ்சுவதாகவுள்ள அத்தகைய தொகையை உள்ளீட்டு வரியாகக் கழித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரிப்பற்றுக் குறிப்பு அல்லது வரிவரவுக் குறிப்பு குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### வரிக்கொடுப்பனவு

*28.* (1) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி தவணைத் தவறுகையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரி எந்த ஆளினால் செலுத்தப்படற்பாலதோ அந்த ஆள் அல்லது ஏதேனும் வரி ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் செலுத்தப்படற்பாலதாக உள்ளவிடத்து அத்தகைய ஒவ்வோராளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவறாளராகக் கருதப்படுதலும் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் பெறுமதி ஐம்பது இலட்சம் ரூபாவை அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையை விஞ்சுமிடத்து, அத்தகைய வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதியை உடனடுத்து வரும் ஒவ்வொரு மாதத்திலும் செய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்கள் தொடர்பில் 22 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கணிக்கப்பட்ட வரி, வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதியில் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் பெறுமதி ஐம்பது இலட்சம் ரூபாவை அல்லது அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையை விஞ்சாதொழியும்வரை அடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி தவணைத் தவறுகையாக கருதப்படுதல் வேண்டும்.

ஆயினும், மேலும் 21 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, வரி விதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதியில் எவேரனும் ஆளினால் முதலாம் அல்லது இரண்டாம் மாதத்திற்கான விவரத் திரட்டொன்று கொடுத்துதவப்பட்டிராதவிடத்து, அத்தகைய மாதத்திற்குத் தவணைத் தவறுகையிலுள்ள வரியானது, அத்தகைய வரி விதிக்கப்படற் பாலதான காலப்பகுதிக்குச் செலுத்தப்படற்பாலதான வரியின் மூன்றிலொரு பங்குக்குச் சமமான தொகையொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*27.* (1) ஏதேனும் வரி தவணைத் தவறுகையாகவுள்ள விடத்து, தவறாளர் தவணைத் தவறிய அத்தகைய வரியுடன் சேர்த்து, மேலதிகமாகப் பின்வருவதனைத் தண்டமாகச் செலுத்துதல் வேண்டும் : –

(அ) தவணைத் தவறுகைத் தொகையின் பத்து சதவீதத்துக்குச் சமமான ஒரு பணத்தொகை ; அத்துடன்

(ஆ) தவணைத் தவறுகையான தொகை, அத்தகைய தவணைத் தவறுகையாக வரத்தொடங்கிய மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, ஒவ்வோர் அடுத்து வரும் மாதத்தினதும் பதுனைந்தாம் நாளன்று முடிவடைகின்ற ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும் அல்லது அத்தகைய காலப்பகுதியின் பாகம் தொடர்பிலும் தவணைத் தவறுகையாகவுள்ள தொகையினை இரண்டு சதவீதத்துக்குச் சமமாகவுள்ள ஒரு மேலதிகப் பணத்தொகை ;

ஆயின் எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின் கீழ் தண்டமாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை, தவணைத் தவறுகையான வரியின் நூறு சதவீதத்தை எவ்விடயத்திலும் விஞ்சுதலாகாது என்பதுடன், அத்தகைய தொகையெதுவும் தவணைத் தவறுகை ஏற்பட்ட எவையேனும் விசேட சூழ்நிலைகளின காரணமாக அத்தகைய தொகையின் தள்ளுபடி அல்லது குறைப்பு நீதியானதும் ஒப்புரவானதுமாகவிருக்குமென ஆணையாளர் – தலைமையதிபதி திருப்திப்படின் தள்ளுபடி செய்யப்படலாம் அல்லது குறைக்கப்படலாம்.

(2) VI ஆம் அத்தியாயத்தின் கீழான ஒரு மேன்முறையீட்டின் இறுதித் தீர்மானத்தின் மேல், (1) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் பணத்தொகை அல்லது எவையேனும் பணத்தொகைகள் அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள தவணைத் தவறுகையாகவுள்ள ஏதேனும் வரி, குறைக்கப்படுமிடத்து, அப்போது அத்தகைய பணத்தொகை அல்லது பணத்தொகைகள் அவ்வாறு குறைக்கப்பட்ட வரியின்மீது கணக்கிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

## வரி மதிப்பீடு

28. (1) (அ) வரி மதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி வரியிறுக்கப்படற்பாலரான எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள், ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு ஒரு விபரத் திரட்டைக் கொடுத்துதவத் தவறுமிடத்து ; அல்லது

(ஆ) வரி இறுக்கப்படற்பாலதான எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பில் ஒரு விபரத்திரட்டைக் கொடுத்துதவி, ஆனால் அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான வரியைச் செலுத்தத் தவறுமிடத்து ; அல்லது

(இ) எவரேனுமாள், அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத் திரட்டுக்கு ஏதேனும் மாற்றத்தை அல்லது சேர்க்கையைச் செய்யுமாறு எழுத்தில் ஆணையாளர் - தலைமையதிபதிக்கு வேண்டுகோள் விடுக்குமிடத்து.

வரிமதிப்பீட்டாளர், வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பில் அத்தகைய ஆள் அந்த வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதிக்குச் செலுத்தியிருக்க வேண்டிய வரித்தொகையை வரிமதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன், எழுத்திலான அறிவித்தல் மூலம், உடனடியாக அத்தகைய தொகையைச் செலுத்தும்படி அவ்வாளைத் தேவைப்படுத்துதலும் வேண்டும். ஒரு வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு எவரேனுமாள் தொடர்பில் அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்ட தொகை, அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வரித்தொகையெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு எவரேனுமாள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட வரிமதிப்பீடொன்று, வரிமதிப்பீடு செய்யப்பட்ட தொகை அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு அவரிடமிருந்து வருமதியாகவிருந்த வரித்தொகை என்றாற் போன்று, 27 ஆம் பிரிவின் கீழான தண்டமொன்றுக்கு அத்தகைய ஆள் பொறுப்பாகவிருக்கின்றமையைப் பாதித்தலாகாது.

(3) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி, வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு வரிவிதிக்கப்பாலதான காலப்பகுதி தொடர்பில் விவரத் திரட்டொன்றைக் கொடுத்துதவத் தவறியுள்ள எவரேனும் ஆளினால் வரியாகச் செலுத்தப்பட்ட தொகையானது, வரிவிதிக்கற்பாலதான அக்காலப்பகுதிக்கு அவ்வாளினால் செலுத்தற்பாலதாகும் உள்ளவாறான தொகையை விட குறைவாயிருக்குமிடத்து, வரிமதிப்பீட்டாளர், வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பின்படி அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்டிருக்க வேண்டியதான தொகையை மதிப்பீடு செய்தல் வேண்டும் என்பதுடன் எழுத்திலான அறிவித்தல் மூலம், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு திகதியன்று அல்லது அதற்கு முன் அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கும் அவ்வாளினால் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான தொகையைச் செலுத்துமாறு அவ்வாளைத் தேவைப் படுத்துதலும் வேண்டும்.

(4) வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு எவரேனும் ஆள் தொடர்பில் (3) ஆம் உட்பிரிவின் கீழ் வரிமதிப்பீடொன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கும், வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதிக்கு அவ்வாளினால் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசமானது 28 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வரிவிதிக்கற்பாலதான அக்காலப் பகுதிக்கு தவணைத் தவறுகையிலுள்ள வரியாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய ஆள் வரிவிதிக்கற்பாலதான அக்காலப்பகுதிக்கு எந்தத் திகதியிலிருந்து வரிசெலுத்தியிருக்க வேண்டுமோ அத்திகதியிலிருந்து அத்தகைய தொகை தொடர்பில் தண்டப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

29. வரிவிதிக்கற்பாலதான ஏதேனுமொரு காலப்பகுதிக்கு எவரேனும் ஆளினால் 21 ஆம் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத் திரட்டொன்றை வரிமதிப்பீட்டாளர் ஏற்றுக்கொள்ளாதவிடத்தும் அத்துடன் 31 ஆம் பிரிவின்கீழ் வரிவிதிக்கற்பாலதான அந்தக் காலப்பகுதிக்கு முறையே 28 ஆம் பிரிவின் கீழ் அல்லது 29 ஆம் பிரிவின் கீழ் அவ்வாளின் மீது வரிமதிப்பீடொன்றை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றைச் செய்யுமிடத்தும், அவர் விவரத்திரட்டை ஏன் ஏற்கவில்லையென தபால் மூலம் அனுப்பப்படும் பதிவுக் கடிதத்தின் மூலம் அத்தகைய ஆளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

30. பதிவு செய்யப்பட்ட ஆளொருவர், வரிக்கொடுப்பனவைத் தவிர்க்கும் பொருட்டு திறந்த சந்தைப் பெறுமதியை விடக்குறைவானதொரு பெறுமதிக்கு அல்லது பெறுமதியே இல்லாமல் வரிவிதிக்கற்பாலதான வழங்கலொன்றை செய்துள்ளார் என வரிமதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய வழங்கலின் பெறுமதியை திறந்த சந்தைப் பெறுமதியாகத் தீர்மானித்தல் வேண்டும்.

31. (1) வரி அறவிடப்படற்பாலதான ஆளொருவர் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு வரியாக வரிவிதிக்கற்பாலதான அக்காலப்பகுதிக்கு அவரால் செலுத்தற்பாலதான தகுந்த வரித்தொகையைவிட அல்லது அக்காலப்பகுதிக்கு அவரிடமிருந்து அறவிடற்பாலதான தொகையைவிடக் குறைந்ததொகையொன்று செலுத்தியுள்ளாரென வரிமதிப்பீட்டாளருக்குத் தோன்றுமிடத்து வரிமதிப்பீட்டாளர், ஏதேனும் நேரத்தில் அத்தகைய வரிமதிப்பீட்டாளரின் தீர்ப்பிற்கிணங்க, அத்தகைய ஆளினால் செலுத்தப் பட்டிருக்க வேண்டியதான மேலதிக தொகையில் அத்தகைய ஆளை வரிமதிப்பீடு செய்தல் வேண்டும். வரிமதிப்பீட்டாளர் அத்தகைய ஆளுக்கு வரிமதிப்பீட்டு அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(2) வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு எவரேனும் ஆள் தொடர்பில் (1) உட்பிரிவின் கீழ் வரிமதிப்பீடொன்று செய்யப்படுமிடத்து, அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்ட தொகையானது வரிவிதிக்கற்பாலதான அக்காலப்பகுதிக்கு தவணை தவறுகையிலுள்ள வரியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, அத்தகைய ஆள், வரிவிதிக்கற்பாலதான அக்காலப்பகுதிக்கு எத்திகதியிலிருந்து வரிசெலுத்தியிருக்க வேண்டுமோ அத்திகதியிலிருந்து அத்தொகை தொடர்பில் தண்டப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

32. இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விவரத் திரட்டின் அல்லது வரி மதிப்பீட்டின் ஒரு பிரதி அல்லது பிரித்தெடுப்பு எனக் கருதப்பட்டதான, ஆணையாளர் – தலைமை அதிபதியின் கைப்பட்ட ஆவணம் எதனையும் முன் வைத்தலானது, எல்லா நீதிமன்றங்களிலும் ஏலதாகவாதல் வேண்டும் என்பதுடன் மூலப்பிரதிக்கு போதிய சான்றாதலும் வேண்டும்.

33. (1) பதிவு செய்யப்பட்ட ஆளெவரும் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவியுள்ளவிடத்து அல்லது அக்காலப்பகுதி தொடர்பில் வரிக்கென வரிமதிப்பீடு செய்யப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப வரிவிதிக்கற்பாலதான எந்தக் காலப்பகுதி தொடர்பில் வரிமதிப்பீடு செய்யப்பட்டதோ அல்லது விவரத் திரட்டு கொடுத்துதவப்பட்டதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவுற்ற பின்னர் –

(அ) வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டிராதவிடத்து, வரிமதிப்பீடொன்றைச் செய்வது; அல்லது

(ஆ) வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, மேலதிக மதிப்பீட்டைச் செய்வதற்கு,

வரிமதிப்பீட்டாளருக்கு சட்டமுறையானதாதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆளொருவர், வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு அவரால் செலுத்தற்பாலதான வரித்தொகையைத் தீர்மானிப்பதற்கு அவசியமான எல்லா முக்கிய நிகழ்வுகளினதும் முழுமையும் உண்மையுமான வெளிப்படுத்துகையை வேண்டுமென்றே அல்லது மோசடியாக செய்யத்தவறியுள்ளார் என வரிமதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து –

(அ) வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டிராதவிடத்து, ஏதேனும் நேரத்தில் வரிமதிப்பீடொன்றைச் செய்வது ; அல்லது

(ஆ) வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, மேலதிக மதிப்பீடொன்றைச் செய்வது,

வரிமதிப்பீட்டாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## மேன்முறையீடுகள்

34\. (1) பதிவு செய்யப்பட்ட ஆளெவரும், அவர் தொடர்பில் வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டில் அல்லது மேலதிக வரிமதிப்பீட்டில் அல்லது இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தண்டப்பணம் ஒன்றில் அதிருப்தியுற்றிருந்தால், அவர் விடயத்திற்கேற்ப அத்தகைய வரிமதிப்பீட்டிற்கு அல்லது மேலதிக வரிமதிப்பீட்டிற்கு அல்லது தண்டப்பணத்திற்கு எதிராக, அத்தகைய வரிமதிப்பீடு, மேலதிக வரிமதிப்பிடு அல்லது தண்டப்பணம் பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் - தலைமை அதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய ஆள் மேன் முறையீடு எவ்வாறிருப்பினும், அத்தகைய வரிமதிப்பீட்டால் அல்லது மேலதிக வரிமதிப்பீட்டால் அறவிடப்பட்ட வரியை, இச்சட்டத்தால் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டப்பணத்துடன் சேர்த்து செலுத்துதல் வேண்டும் :

ஆயினும் மேன்முறையீட்டாளர் இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது நியாயமான வேறு ஏதுவினால் அத்தகைய காலப்பகுதிக்குள் மேன்முறையீடு செய்வதிலின்று தடை செய்யப்பட்டார் என ஆணையாளர் - தலைமை அதிபதி திருப்தியுறுவதன் மேல், மேன்முறையீட்டை முன் வைப்பதற்குக் கால நீடிப்பொன்றை அளித்தல் வேண்டும்.

(2) மேன்முறையீடு ஒவ்வொன்றும் ஆணையாளர் - தலைமை அதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனுவொன்றின் மூலம் முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டிற்கான காரணங்களை திட்டவட்டமாகக் குறிப்பிடுதலும் வேண்டும்.

(3) எந்த வரிமதிப்பீட்டிற்கு அல்லது மேலதிக வரிமதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீடு, விவரத்திரட்டொன்றில்லாமல் செய்யப்பட்டுள்ள விடத்து மேன்முறையீட்டு மனு அத்தகைய விவரத்திரட்டுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(4) வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கான வரிமதிப்பீடொன்றிற்கு எதிராக (1) ஆம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீடொன்றை முன்வைக்கும் ஒவ்வோராளும் (அத்தகைய ஆள் ஏற்கனவே அவ்வாறு செய்திருந்தாலன்றி) அத்தகைய காலப்பகுதிக்கு அவரால் கொடுத்துதவப்பட்ட விவரத் திரட்டின் அடிப்படையில் அத்தகைய ஆளினால் செலுத்தற்பாலதானவரித் தொகையை, வரி மதிப்பீடு பற்றிய அத்தகைய அறிவித்தலின் திகதிவரை திரண்ட அதன் மீதான ஏதேனும் தண்டப் பணத்துடன் சேர்த்து ஆணையாளர் - தலைமை அதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கொடுப்பனவின் எண்பிப்பாக பற்றுச்சீட்டொன்றையும் மேன்முறையீட்டு மனுவுடன் அணைத்தல் வேண்டும்.

ஆயினும் ஆணையாளர் - தலைமை அதிபதி, வரிமதிப்பீடு பற்றிய அத்தகைய அறிவித்தலின் நேரத்தில் அல்லது அந்நேரமளவில் மேன்முறையீட்டாளர் பாரதூரமான நிதிநெருக்கடியை அனுபவித்ததன் காரணமாக அல்லது நியாயமான வேறு ஏதுவின் காரணத்தால் அத்தகைய வரியையும் அத்தகைய தண்டப் பணத்தையும்

செலுத்துவதினின்று தடை செய்யப்பட்டார் எனதிருப்பதியுறுவதன் மேல் அத்தகைய வரியினதும் கொடுப்பனவு திகதிவரை திரண்ட அதன் மீதான அத்தகைய வரியினதும் கொடுப்பனவிற்கு கால நீடிப்பொன்றை அளிக்கலாம் என்பதுடன் நீடிக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் கொடுத்துதவப்பட்ட பற்றுச்சீட்டானது, இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, மேன்முறையீட்டு மனுவுடன் அணைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) உட்பிரிவுகள் (1), (2), (3) அத்துடன் (4) என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத அமையாத மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

(6) செல்லுபடியான மேன்முறையீட்டு மனுவொன்று கிடைக்கப்பெற்றதன் மீது, ஆணையாளர் – தலைமை அதிபதி வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் மேலும் ஒரு விசாரணையை செய்விக்கலாம். அத்துடன் அத்தகைய விசாரணையின் போது, மேன்முறையீட்டு மனுவில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக உடன்பாடொன்று இடம்பெற்றால் வரிமதிப்பீட்டில் அவசியமான சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேன் முறையீட்டாளருக்கும் வரிமதிப்பீட்டாளருக்குமிடையில் உடன்பாடொன்று இடம்பெறாதவிடத்து, ஆணையாளர் – தலைமை அதிபதி மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு ஒரு நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(8) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும் மேன்முறையீட்டை விசாரிப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட இடத்திலும் நேரத்திலும் ஆணையாளர் – தலைமை அதிபதியின் முன்னிலையில் சமூகமளித்தல் வேண்டும். மேன்முறையீட்டாளர் விசாரணைக்கு நேரிலோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி மூலமாகவோ சமூகமளிக்கலாம். ஆணையாளர் – தலைமை அதிபதி, பொருத்தமெனக் கருதினால், மேன்முறையீடொன்றை அந்நோக்கத்திற்கென அவர் நிர்ணயிக்க வேண்டியவாறான அத்தகைய நேரத்திற்கும் இடத்திற்கும் காலத்திற்குக் காலம் ஒத்தி வைக்கலாம். மேன்முறையீட்டாளரின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமூகமளிக்கும் ஏதேனும் விடயத்தில் ஆணையாளர் – தலைமை அதிபதி மேன்முறையீட்டின் விசாரணையை ஒத்திவைக்கலாம் என்பதுடன் மேன்முறையீட்டைத் தீர்மானிப்பதற்கு மேன்முறையீட்டாளர் நேரில் சமூகமளிப்பது அவசியம் எனக் கருதினால் மேன்முறையீட்டின் ஒத்தி வைக்கப்பட்ட விசாரணைக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும், இடத்திலும் மேன்முறையீட்டாளர் நேரில் சமூகமளிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம். மேன்முறையீட்டாளரோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியோ மேன்முறையீட்டின் விசாரணைக்கென அல்லது ஏதேனும் ஒத்திவைக்கப்பட்ட விசாரணைக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சமூகமளிக்கத் தவறினால் அல்லது மேன்முறையீட்டாளர் அவ்வாறு சமூகமளிக்குமாறு ஆணையாளர் – தலைமை அதிபதியால் தேவைப்படுத்தப்பட்டபோது நேரில் சமூகமளிக்கத் தவறினால் ஆணையாளர் – தலைமை அதிபதி மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்தல் வேண்டும் :

ஆயினும் மேன்முறையீட்டாளர் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் நியாயமானவொரு காலத்திற்குள் இலங்கையில் இல்லாதிருந்ததன் காரணமாக அல்லது சுகவீனம் காரணமாக அல்லது நியாயமான வேறு ஏதுவின் காரணமாக அத்தகைய மேன்முறையீட்டின் விசாரணைக்கு அல்லது ஏதேனும் ஒத்தி வைக்கப்பட்ட விசாரணைக்கு முறையாக சமூகமளிப்பதினின்று அவரோ அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட

பிரதிநிதியோ தடைசெய்யப்பட்டாரென ஆணையாளர் – தலைமை அதிபதியைத் திருப்திப்படுத்தினால் ஆணையாளர் – தலைமை அதிபதி தள்ளுபடிக் கட்டளையை வறிதாக்கி மேன்முறையீட்டின் விசாரணைக்கென ஒரு நேரத்தையும் இடத்தையும் நிர்ணயிக்கலாம் :

ஆயினும் மேலும், இவ்வத்தியாயத்தின் கீழ் மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் அத்தகைய மேன்முறையீட்டின் உடன்பாடு அல்லது தீர்மானம், ஏதேனும் ஆவணத்தைக் கொடுத்துதவுவதில் அல்லது மேன்முறையீட்டாளர் அல்லது ஆணையாளர் – தலைமை அதிபதி வரிமதிப்பீட்டாளர் ஒருவர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுவதில் தங்கியிருந்தாலன்றி, அத்தகைய மேன்முறையீட்டு மனு ஆணையாளர் – தலைமை அதிபதியால் பெறப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஆணையாளர் – தலைமை அதிபதியால் உடன்பாட்டுக் கொள்ளப்படுதல் அல்லது தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய மேன்முறையீடு அத்தகைய காலப்பகுதிக்குள் உடன்பட்டுக்கொள்ளப்படாதவிடத்து அல்லது தீர்மானிக்கப்படாதவிடத்து மேன்முறையீடு அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வரி அறவிடப்படுதலும் வேண்டும். இப் பிரிவின் கீழ் ஏதேனும் மேன் முறையீடு கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அறிவித்தற் கடிதத்தின் திகதி இப்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்ற திகதியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

இக்காப்பு வாசகத்தின் நோக்கங்களுக்காக (4) ஆம் உட்பிரிவின் கீழ் வரிக்கொடுப்பனவிற்காக மேன்முறையீட்டாளருக்கு காலநீடிப்பொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய வரிக்கொடுப்பனவின் எண்பிப்பான பற்றுச்சீட்டுத் திகதி அத்தகைய மேன்முறையீட்டைப் பெற்றுக்கொண்ட திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(9) மேன்முறையீடு தொடர்பில் எந்த ஆள் சாட்சியமளிக்கக் கூடியவராக இருக்கின்றாரென ஆணையாளர் – தலைமை அதிபதி கருதுகின்றாரோ அந்த எவரேனும் ஆளை அவர் தம் முன்னிலையில் சமூகமளித்து சத்தியத்தின் மீது அல்லது வேறு வகையில் பரிசீலனை செய்வதற்காக அழைப்பதற்கான தத்துவமுடையவராதல் வேண்டும். அவ்வாறு சமூகமளிக்கும் ஆளுக்கு அவ்வாறு சமூகமளித்தலில் அத்தகைய ஆளினால் அவசியமாக உறப்பட்ட எவையேனும் நியாயமான செலவினங்கள் ஆணையாளர் – தலைமை அதிபதியால் அனுமதிக்கப்படலாம்.

(10) ஆணையாளர் – தலைமை அதிபதியானவர், ஏதேனும் மேன்முறையீட்டின் மீது தமது தீர்மானத்தைச் செய்யுமுன்னர், அவ்வாறு செய்வது அவசியம் என அவர் கருதினால், எவரேனும் ஆளுக்கு எழுத்தில் அளிக்கப்படும் அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அவரது உடைமையிலுள்ள ஏதேனும் அத்தகைய உறுதிகள், வரைபடங்கள், சாதனங்கள், புத்தகங்கள், கணக்குகள், வியாபாரப் பட்டியல்கள், கையிருப்புப் பட்டியல்கள், பதிவேடுகள், காசோலைகள், கொடுப்பனவுச் சிட்டைகள், கணக்காய்வாளரின் அறிக்கைகள் அல்லது வேறு ஆவணங்கள் என்பனவற்றை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்குள் பரிசோதனைக்கென முன்வைக்குமாறு அல்லது ஆணையாளர் – தலைமை அதிபதிக்கு அனுப்புமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(11) ஆணையாளர் – தலைமை அதிபதி மேன்முறையீடு தொடர்பில் மேன்முறையீட்டாளரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் சாட்சியத்தை விசாரிக்குமிடத்து அவர் அத்தகைய சாட்சியத்தின் பதிவொன்றைப் பேணுதல் அல்லது பேணுவித்தல் வேண்டும்.

(12) ஆணையாளர் – தலைமை அதிபதி இப்பிரிவின் கீழ் மேன் முறையீடொன்றைத் தீர்மானிக்கையில், எந்த வரிமதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டை உறுதி செய்யலாம். குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது இல்லாதொழிக்கலாம் என்பதுடன் மேன்முறையீட்டின் மீதான அவரது தீர்மானத்தைப் பற்றி மேன்முறையீட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்குதலும் வேண்டும்.

35. ஆணையாளர் – தலைமை அதிபதிக்கு 34 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மீது அவரது தீர்மானத்தினால் இடருற்ற ஆளெவரும் அத்தீர்மானத்தினின்று (1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அத்தகைய சபைக்கான மேன்முறையீடுகள் தொடர்பில் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழான மேன்முறையீடொன்றிற்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

36. (1) மீளாய்வுச் சபையின் முடிவே இறுதியானதாதல் வேண்டும்.

ஆயினும் மேன்முறையீட்டாளரோ அல்லது ஆணையாளர் தலைமை அதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அபிப்பிராயத்திற்கென சட்டப் பிரச்சினையொன்றின் மீதான வழக்கொன்றைக் குறிப்பிடுமாறு மீளாய்வுச் சபையை தேவைப்படுத்தி விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் மேன்முறையீடுகள் தொடர்பிலான 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழான விண்ணப்பத்திற்கும் குறிப்பீட்டிற்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேணடும்.

## அத்தியாயம் VII

### வரி மதிப்பீடுகளினதும் பிழையான விவரத் திரட்டுகளுக்கான தண்டப் பணத்தினதும் இறுதித் தன்மை

37. வரி தொடர்பில் வரிமதிப்பீடொன்றிற்கு எதிராக இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செல்லுபடியான மேன்முறையீடெதுவும் முன்வைக்கப்படாதவிடத்து அல்லது வரித்தொகை மேன்முறையீட்டின் மீது தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து விடயத்திற்கேற்ப மேன்முறையீட்டின் மீது செய்யப்பட்டவாறான அல்லது குறைக்கப்பட்டவாறான அல்லது அதிகரிக்கப்பட்டவாறான அல்லது உறுதிப்படுத்தப்பட்டவாறான வரிமதிப்பீடானது அத்தகைய வரித்தொகை தொடர்பாக இசசட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காவும் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

ஆயினும் இப்பிரிவிலுள்ளது எதுவும் வரிவிதிக்கற்பாலதான அந்தக் காலப்பகுதிக்கு மேன்முறையீட்டின் மீது ஏதேனும் விடயம் மீளவும் ஆரம்பிக்கப்படுவதுடன் சம்பந்தப்படாவிடில்

வரி விதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கு வரிமதிப்பீடொன்றை அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றைச் செய்வதினின்று வரிமதிப்பீட்டாளரைத் தடை செய்தலாகாது.

38. எவரேனும் ஆள் மீது செய்யப்பட்ட வரி மதிப்பீடொன்றில் வரியானது, அவரது விவரத்திரட்டில் குறித்துரைக்கப்பட்ட வரி விதிக்கற்பாலதான வழங்கல்கள் தொடர்பில் அவரிடமிருந்து வருமதியான தொகையாக அவரால் செலுத்தப்பட்ட வரியை விஞ்சுகின்றவிடத்தும் அத்துடன் வரிமதிப்பீடானது. 37 ஆம் பிரிவின் கீழ் இறுதியானதும் முடிவானதாயும் இருக்குமிடத்தும் அத்தகைய விவரத் திரட்டில் அவ்வாளினால் செய்யப்பட்ட வரி விதிக்கற்பாலதான வழங்கல்களைப் பற்றிய வெளிப்படுத்துகையில் மோசடி அல்லது வேண்டுமென்ற புறக்கணிப்பு எதுவும் சம்பந்தப்படவில்லை என ஆணையாளர் – தலைமை அதிபதி திருப்தியுறும் வகையில் அவ்வாள் எண்பித்தாலன்றி ஆணையாளர் – தலைமை அதிபதி பிழையான விவரத் திரட்டொன்றைச் செய்தமைக்குத் தண்டப்பணமாக இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றையும் அத்துடன் வரிமதிப்பீட்டில் கோரப்பட்ட மொத்த வரிக்கும் விவரத் திரட்டின் மீது செலுத்தப்பட்ட வரிக்கும் இடையிலான வித்தியாசத்தின் இருமடங்கிற்குச் சமமான பணத்தொகையொன்றையும் செலுத்துமாறு அவ்வாளுக்குக் கட்டளையிடலாம்.

## அத்தியாயம் VIII

### வரி அறவீடு

39. (1) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக வரியானது, இச்சட்டத்தின் கீழ், விதிக்கப்பட்ட அல்லது உறப்பட்ட தண்டப்பணத்தையும் உள்ளடக்கும்.

(2) ஆணையாளர் – தலைமை அதிபதி 42 ஆம் பிரிவின் கீழ் அல்லது 43 ஆம் பிரிவின் கீழ் சான்றிதழ் ஒன்றை அல்லது 44 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் ஒன்றை வழங்குமிடத்து அதே நேரத்தில் அவர் தவறாளருக்கு அதனைப் பற்றிய அறிவித்தலொன்றை நேரடியாக சேர்ப்பிப்பதன் மூலம் அல்லது தபாலில் அனுப்பப்படும் பதிவுக் கடிதத்தின் மூலம் அல்லது தந்தி மூலம் வழங்குதல் வேண்டும். ஆனால் அத்தகைய அறிவித்தல் தவறாளருக்கு கிடைக்கப்பெறாமை, இப்பரிவின் கீழ் வழக்கு நடவடிக்கைகளை செல்லுபடியற்றதாக்குதல் ஆகாது.

40. தவணைத் தவறுகையிலுள்ள ஏதேனும் வரி தவறாளரின் எல்லாச் சொத்துக்கள் மீதும் முதற் பொறுப்பொன்றாதல் வேண்டும் ;

ஆயினும் –

(i) அத்தகைய பொறுப்பானது 42 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு முன்னர் பெறுமதிக்கு நல்லெண்ணத்துடனான கொள்வனவாளரொருவருக்கு அத்தகைய ஆளினால் விற்பனை செய்யப்பட்ட எவையேனும் பொருட்களை உள்ளடக்குதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

(ii) அசைவற்ற சொத்துக்கள் தொடர்பில் வரியானது, பெறுமதிக்கென நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்டதும் கைப்பெற்றுகையின் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டதுமான ஏதேனும் குத்தகையில் அல்லது பாரபந்தத்தில் முன்னுரிமை வரிசையைப் பெறுதல் ஆகாது ;

(iii) அசைவுள்ள சொத்துக்கள் தொடர்பில் வரியானது வரிவிதிக்கற்பாலதான நான்கிற்கு மேற்பட்ட காலப்பகுதிகளுக்கு தவணை தவறுகையாக இருக்குமிடத்து, வரிவிதிக்கற்பாலதான நான்கு காலப்பகுதிகளுக்கு மட்டும் ஆணையாளர் - தலைமை அதிபதியால் தெரிவு செய்யப்பட வேண்டிய வரி, அத்தகைய வரியின் தவணை தவறுகையின் தேதிக்கு முன்னரான பெறுமதிக்கு நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பட்ட ஏதேனும் சோந்தைக்கு அல்லது பாரபந்தத்திற்கு முன்னுரிமை வரிசைக்கிரமத்தைப் பெறுதல் வேண்டும்.

41. (1) ஏதேனும் வரி தவணைத் தவறுகையிலிருக்குமிடத்து ஆணையாளர் - தலைமையதிபதி அத்தகைய வரியை அறவிட முற்படுமுன்னர் -

(அ) அத்தகைய வரியின் விபரங்களையும் ; அத்துடன்,

(ஆ) அத்தகைய வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி சிந்திக்கப்படுகின்றது எனவும்

குறிப்பிட்டு தவறுகையாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வழங்குதல் வேண்டும்.

(2) எந்த வரி மதிப்பீடு தொடர்பில் அத்தகைய வரிவிதிக்கப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டிற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய தவறாளர் மேன்முறையீடு செய்திராவிடில் அவர், அத்தகைய அறிவித்தலின் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் - தலைமை அதிபதிக்கு அவ்வாறு விதிக்கப்பட்ட வரிக்கு ஏதேனும் ஆட்சேபனை செய்யலாம் என்பதுடன் 37 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஆணையாளர் - தலைமை அதிபதி அத்தகைய ஆட்சேபனைகளை கருத்திற் கொண்டு அதன் மீது அவரது முடிவை வழங்குதல் வேண்டும். அம்முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

42. (1) ஆணையாளர் - தலைமை அதிபதி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வரிச் சேகரிப்பாளர்களாக இருப்பதற்கென ஆட்களை நியமிக்கலாம்.

(2) ஏதேனும் வரி தவணைத் தவறுகையில் உள்ளவிடத்து ஆணையாளர் - தலைமை அதிபதி, அத்தகைய வரியின் விவரங்களும் அத்துடன் தவறாளரின் பெயர், முகவரி என்பனவும் அடங்கிய சான்றிதழொன்றை ஒரு பெரும்பாகச் செயலளாளருக்கு உதவிப் பெரும்பாகச் செயலாளருக்கு, பிசுக்காலுக்கு, பிரதிப் பிசுக்காலுக்கு அல்லது வரிச் சேகரிப்பாளருக்கு வழங்கலாம் என்பதுடன் எந்த அலுவலருக்கு அத்தகைய சான்றிதழ் வழங்கப்படுகின்றதோ அந்த அலுவலர், சான்றிதழில் பெயர் குறிப்பிடப்பட்ட தவறாளரிட மிருந்து அவரது அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் வரியை அறவிடச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றார்.

(3) சொல்லப்பட்ட கைப்பற்றுகையானது, அதன் பொருட்டு மிகவும் உசிதமானதென சொல்லப்பட்ட அலுவலர் கருதவேண்டியவாறான அத்தகைய முறையில் பயனுறுத்தப் படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் ஆதனம் தவறாளரின் செலவுகளிலும் பொறுப்புகளிலும் ஏழு நாட்களுக்கு வைத்திருக்கப்படுதலும் வேண்டும். தவறாளர் தவணை தவறுகையிலுள்ள சொல்லப்பட்ட வரியை செலவுகளுடனும் விதிப்பனவுகளுடனும் சேர்த்து சொல்லப்பட்ட ஏழு நாட்களுக்குள் செலுத்தத் தவறினால்

விடயத்திற்கேற்ப பெரும்பாகச் செயலாளர், உதவிப் பெரும்பாகச் செயலாளர், பிசுக்கால், பிரதிப் பிசுக்கால் அல்லது வரிச்சேகரிப்பாளர் அத்தகைய ஆதனத்தை பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வித்தல் வேண்டும்.

(4) விற்பனையின் மூலம் தேறப்பட்ட பணத்தொகையானது –

(i) முதலாவதாக ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கும் வைத்திருப்பதற்கும் விற்பனை செய்வதற்குமான செலவுகளின் கொடுப்பனவிலும் ; அத்துடன்

(ii) இரண்டாவதாக தவணைத் தவறுகையிலுள்ள வரியைத் தீர்ப்பதிலும் பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன்,

ஏதேனும் மீதி கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(5) கைப்பற்றுகை பயனுறுத்தப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும் வரிச் சேகரிப்பாளர் ஒருவருக்கு இப்பிரிவின் கீழ் தவறாளருக்கு எதிராக வழக்கு நடவடிக்கை எடுப்பதில் அவரால் உறப்பட்ட நியாயமான செலவுகளை அவரிடமிருந்து அறவிடுவது வரிச் சேகரிப்பாளர் ஒருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். காசு கைப்பற்றப்படுமிடத்து அவ்வாறு கைப்பற்றப்பட்ட தொகையிலிருந்து அத்தகைய நியாயமான செலவுகள் முதலில் எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் வரி தவணைத் தவறுகையில் உள்ளவிடத்தும் அத்துடன் (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வழிமுறைகள் மூலம் அதனை அறவிடுவது சாத்தியமல்ல அல்லது உசிதமல்ல என ஆணையாளர் – தலைமை அதிபதி அபிப்பிராயப்படுமிடத்தும், அவர் தவறாளர் வதிகின்ற அல்லது தவறாளருக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் அமைந்துள்ள ஏதேனும் மாவட்டத்தில் நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றிற்கு அத்தகைய வரியின் விவரங்களும் அத்துடன் எந்த ஆளினால் அல்லது ஆட்களினால் வரி செலுத்தற்பாலதாகவிருக்கின்றதோ, அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரும் முகவரியும் அடங்கிய சான்றிதழொன்றை வழங்கலாம் என்பதுடன் அதன்மீது, நீதிமன்றமானது தவறாளரின் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனம் அனைத்தையும் அல்லது எதனையும் அல்லது வரியை அறவிடுவதற்கு அவசியமானதென பிசுக்கால் கருதக்கூடியவாறான அதன் ஏதேனும் பாகத்தை கைப்பற்றுவதற்கும் அத்துடன் விற்பனை செய்வதற்கும் பிசுக்காலுக்கு அதிகாரமளித்தும் அவரைத் தேவைப்படுத்தியும் நிறைவேற்று எழுத்தாணையொன்று வழங்குமாறு பணித்தல் வேண்டும் ; என்பதுடன் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 226 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு "அசைவுள்ள ஆதனம் " என்பது பொறியையும் பொறித் தொகுதியையும் உள்ளடக்குதல் வேண்டும்.

43. (1) ஏதேனும் விடயத்தில் தவணைத் தவறுகையிலுள்ள வரியை கைப்பற்றுகை மூலமும், விற்பனையின் மூலமும் அறவிடுவது சாத்தியமற்றது அல்லது உசிதமற்றது என ஆணையாளர் – தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது தவணைத் தவறுகையிலுள்ள முழுத்தொகையும் அறவிடப்பட்டிராதவிடத்து, அவர், அத்தகைய வரியின் விவரங்களும் தவறாளரின் பெயர் கடைசியாக அறியப்பட்ட தொழிலிடம்

மற்றும் வதிவிடம் என்பனவும் அடங்கிய சான்றிதழொன்றை தவறாளரின் அத்தகைய தொழிலிடம் அல்லது வதிவிடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்ட நீதிவானொருவருக்கு வழங்கலாம். நீதிவான், அதன்மீது, வரியை அறவிடுவதற்கு ஏன் மேலும் வழக்கு நடவடிக்கைகள் அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காண்பிப்பதற்கு தமது முன்னிலைக்கு அத்தகைய தவறாளரை கட்டளைவிட்டழைத்தல் வேண்டும் என்பதுடன், போதிய காரணம் காட்டத்தவறும் பட்சத்தில் தவணைத் தவறுகையிலுள்ள வரியானது குற்றப்பணத்தால் மட்டும் தண்டிக்கப்படற்பாலதான அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாத தவறொன்றுக்காக அத்தகைய தவறாளர் மீது நீதிவானொருவரின் தண்டனைத் தீர்ப்பொன்றின் மூலம் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய தவறொன்றுக்கு விதிக்கப்பட்ட குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறுதல் தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (அ), (ஈ), (ஐ) என்னம் பந்திகளைத் தவிர) அதன்மீது ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளினால் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவரால் செய்திருக்கக் கூடியதான ஏதேனும் பணிப்பையும் ஆக்கலாம் :

ஆயினும், இப்பிரிவிலுள்ள எதுவும், அதன் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஆணையாளர் - தலைமை அதிபதியின் சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைக் கருத்திற் கொள்ள, பரிசோதிக்க அல்லது தீர்மானிக்க நீதிவானுக்கு அதிகாரமளித்தலோ அல்லது அவரைத் தேவைப்படுத்துதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வழக்கில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான உட்பிரிவிலுள்ள எதுவும் ஏற்புடையனவாதல் ஆகாது.

(3) தவறாளர் மீது விதிக்கப்பட்டதென (1) ஆம் உட்பிரிவினால் கருதப்பட்ட குற்றப்பணத்தைச் செலுத்துவதில் தவணைத் தவறியதற்காகத் தவறாளருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கின்றதும், அவ்வுட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான ஏதேனும் விடயத்தில் நீதிவான், சொல்லப்பட்ட குற்றப்பணத் தொகையைச் செலுத்துவதற்கெனக் கால அவகாசம் அனுமதிக்கலாம் அல்லது அத்தொகையைத் தவணைப் பணங்களாகச் செலுத்தும்படி பணிக்கலாம்.

(4) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதன்கண், ஏற்பாடு செய்யப்பட்டவாறு காரணம் காட்டுவதற்கு அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் குற்றப்பணத்தின் கொடுப்பனவுக்கு கால அவகாசத்தை அனுமதிப்பதற்கு, முன் நிபந்தனையொன்றாக பிணைப்பணம் வழங்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன் தவறாளர் பிணை வழங்குமாறு அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் xxxiv ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழ் கொடுப்பனவானது, தவணைக்கட்டணங்களில் பணிக்கப்படுமிடத்தும், அத்துடன் ஏதேனுமொரு தவணைக்கட்டணத்தின் கொடுப்பனவில் தவணைத் தவறுகை செய்யப்படுமிடத்தும் அப்போது செலுத்தப்படாதெஞ்சியுள்ள

எல்லாத் தவணைக் கட்டணங்களினதும் கொடுப்பனவில் தவணை தவறுகை செய்யப் பட்டுள்ளது போன்று அதே வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

44. (1) எவரேனும் ஆளினால் செலுத்தற்பாலதான வரி தவணைத் தவறுகையில் உள்ளவிடத்தும் அத்துடன் ஆளெவரும் –

(அ) தவறாளருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் செலுத்த வேண்டியுள்ளா ரென்பது அல்லது செலுத்தவுள்ளாரென்பது அல்லது,

(ஆ) தவறாளருக்கு அல்லது அவரது முகவருக்காகப் பணத்தை வைத்திருக்கின்றார் அல்லது அவரது கணக்கில் பணம் வைத்திருக்கின்றார் என்பது ; அல்லது

(இ) தவறாளருக்கு அல்லது அவரது முகவருக்குக் கொடுப்பனவுக்கென வேறு எவரேனும் ஆளுக்காக அல்லது அவரது கணக்கில் பணம் வைத்திருக்கின்றார் என்பது ; அல்லது

(ஈ) தவணைத் தவறுகையாளருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் செலுத்துவதற்காக வேறு எவரேனும் ஆளிடமிருந்து அதிகாரம் கொண்டுள்ளார் என்பது,

சாத்தியமாயிருக்கின்றது என ஆணையாளர் – தலைமை அதிபதிக்குத் தோன்றுமிடத்தும் ஆணையாளர் – தலைமை அதிபதி, தவணைத் தவறுகையிலுள்ள வரித்தொகையை விஞ்சாத அத்தகைய பணத்தை அறிவித்தலில் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலருக்குச் செலுத்துமாறு அவரைத் தேவைப்படுத்தி எழுத்திலான அறிவித்தலொன்றை அவருக்குக் கொடுக்கலாம். (இதன் பிரதியொன்று தவறாளருக்குத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்). அறிவித்தலானது, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப் பெறும் திகதியன்று அவரது கையிலுள்ள அல்லது அவருக்கு வருமதியான அல்லது அவரது கைக்கு வரும் அல்லது அவரிடமிருந்து வருமதியாகவரும் அல்லது அத்தகைய அறிவித்தலின் திகதியின் பின்னர் மூன்று மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் ஏதேனும் நேரத்தில் அவரால் செலுத்தப்படவிருக்கும் அத்தகைய எல்லாப் பணத்திற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் கொடுப்பனவைச் செய்துள்ள எவரேனும் ஆள், தவறாளரினதும் சம்பந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களினதும் அதிகாரத்தின் கீழேயே செயற்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கொடுப்பனவு தொடர்பில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் எதிராக, இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கவும்படுகின்றார்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆள், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட பணம் அவரிடம் வரவில்லை அல்லது கட்டுக்காப்பிற்கு வரவில்லை அல்லது அவரிடமிருந்து வருமதியாக வரவில்லை என்ற நிகழ்வின் காரணமாக அதற்கு இணங்கி ஒழுக இயலாதவராக இருக்குமிடத்து அவர் அது முடிவுற்ற பதினான்கு நாட்களுக்குள் ஆணையாளர் – தலைமை அதிபதிக்கு நிகழ்வுகளைப் பற்றி அவருக்கு அறிவித்து எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள், அதற்கு இணங்கியொழுக இயலாதவராக இருக்குமிடத்தும் அத்துடன் (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஆணையாளர் – தலைமை அதிபதிக்கு அறிவித்தல் கொடுக்கத் தவறியுள்ள விடத்தும் அல்லது அறிவித்தல் தொடர்புறுத்தும் வரியை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கழிப்பனவு செய்துள்ளவிடத்தும் அல்லது கழிப்பனவு செய்திருக்கக் கூடியவிடத்தும் அத்துடன் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர் பதினான்கு நாட்களுக்குள் அத்தகைய வரித் தொகையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஆணையாளர் தலைமை அதிபதியால் தேவைப்படுத்தப்பட்டவாறு செலுத்தியிராத விடத்தும், அத்தகைய ஆள், அவர் ஒரு தனியாளாக இருப்பின் அவர் அல்லது அத்தகைய ஆள், கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ் சரி கூட்டிணைக்கப்படாததாயினுஞ் சரி, ஒரு கம்பனியாக அல்லது ஆட்களின் குழுவொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய கம்பனியின் அல்லது குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது பிரதான அலுவலர் தனிப்பட்ட முறையில் அத்தகைய ஆள் எந்த வரியைக் கழிப்பனவு செய்யுமாறு தேவைப்படுத்தப் பட்டுள்ளாரோ அந்த வரி முழுவதற்கும் ஆளாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரி இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லா வழிமுறைகளிலும் அத்தகைய தனியாளிடமிருந்து செயலாளரிடமிருந்து, முகாமையாளரிடமிருந்து அல்லது வேறு பிரதான அலுவலரிடமிருந்து அறவிடப்படலாம்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தவறாளர்" என்னும் சொல்லமைப்பு தவணைத் தவறுகையிலுள்ள ஆளொருவரின் முகவரையும், உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இப்பிரிவின் ஏற்பாடுகள் எவரேனும் ஆள் தவறுகையில் உயிருடனிருந்திருப்பின் வரி அவரால் செலுத்தற்பாலதாய் இருந்திருக்கக் கூடிய ஏதேனும் விடயத்தில் ஏற்புடைத்தாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் வழக்கில் இந்த ஏற்பாடுகளின் ஏற்புடைமையின் நோக்கத்திற்கு (1) ஆம் உட்பிரிவில் "தவறாளர் என்னும் சொல்லமைப்பு –

(அ) மரணமெய்திய அத்தகைய ஆளின் நிறைவேற்றுனர் அல்லது நிருவாகி; அல்லது

(ஆ) மரணமெய்திய அத்தகைய ஆளின் ஆதனத்தை உடைமை கொள்கின்ற அல்லது தகாது இடையீடு செய்கிற எவரேனும் ஆள் என ; அல்லது

(இ) மரணமெய்திய அத்தகைய ஆளின் மரணச் சொத்து தொடர்பில் மரணசாதன தத்துவப் பத்திரத்தினை அல்லது நிர்வாகப் பத்திரத்தினைப் பெறுவதற்கு அல்லது மீள் இலச்சினையிடுவதற்கென மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பிக்க உரித்துடையவரான எவரேனும் ஆள்

எனப் பொருள்படும்.

45. (1) ஆளெவரும் அவரிடமிருந்து வருமதியாகும் வரியைச் செலுத்தாமல் இலங்கையைவிட்டுச் செல்லவிருக்கின்றார் அல்லது விட்டுச் செல்லும் சாத்தியமுண்டென ஆணையாளர் – தலைமை அதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, ஆணையாளர் – தலைமையதிபதி அத்தகைய வரியின் விபரங்களும் அத்தகைய ஆளின் பெயரும் அடங்கிய சான்றிதழ் ஒன்றை நீதிவானொருவருக்கு வழங்கலாம் ; நீதிவான் அது கிடைக்கப்பெற்றதும் வரி செலுத்தாமல் அல்லது அதன் கொடுப்பனவுக்கு ஆணையாளர் – தலைமை அதிபதி திருப்தியுறும் வகையில் பிணைமுறி கொடுத்துதவாமல் இலங்கையை விட்டுச்

செல்வதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுக்குமாறு பொலிசுப் பரிசோதகர் – தலைமையதிபதிக்குப் பணிப்புரையொன்று வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையாளர்– தலைமை அதிபதி நீதிவானுக்குச் சான்றிதழை வழங்கும் நேரத்தில் அதனைப் பற்றிய அறிவித்தலொன்றை நேரடியாகச் சேர்ப்பிப்பதன் மூலம் அல்லது தபாலில் அனுப்பப்படும் பதிவுக் கடிதத்தின் மூலம் அல்லது தந்தி மூலம் அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும். ஆனால் அத்தகைய ஏதேனும் அறிவித்தல் அத்தகைய ஆளினால் கிடைக்கப்பெறாமை இப்பிரிவின் கீழ் வழக்கு நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்காது.

(3) வரி செலுத்தப்பட்டுள்ளதென அல்லது வரிக்கொடுப்பனவுக்கு பிணைமுறி கொடுத்துதவப் பட்டுள்ளதென அல்லது பொலிசு நிலையமொன்றுக்கும் பொறுப்பான பொலிசு அலுவலரொருவருக்கு வரிக்கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதென குறிப்பிட்டு ஆணையாளர் – தலைமை அதிபதியால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழொன்றில் முன்வைப்பானது இலங்கையைவிட்டு செல்ல அத்தகைய ஆளை அனுமதிப்பதற்குப் போதிய அதிகாரமாதல் வேண்டும்.

(4) அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரித்தொகை எந்தப் பொலிசு அலுவலருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்தப் பொலிசு அலுவலர் எவரும் அத்தகைய தொகையை உடனடியாக ஆணையாளர், தலைமை அதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

46. இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அறவீட்டு வழிமுறைகளுள் ஏதேனும் ஒன்றின் பிரயோகம், எவரேனும் ஆளிடமிருந்து வருமதியான முழு வரித்தொகையினதும் கொடுப்பனவைப் பெறத் தவறியுள்ளது அல்லது பெறத் தவறும் சாத்தியமுள்ளது என ஆணையாளர் – தலைமை அதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, 43 ஆம் பிரிவின் கீழ் நீதிவானொருவரால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளது என்பது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட எவையேனும் அறவீட்டு வழிமுறைகளினால் செலுத்தப்படாமல் எஞ்சியுள்ள ஏதேனும் பணத்தொகையை அறவிட முற்படுதல் ஆணையாளர் – தலைமை அதிபதிக்குச் சட்டமுறையாதல் வேண்டும்.

47. ஆணையாளர் – தலைமை அதிபதி எவரேனும் ஆளுக்கு எழுத்தில் கொடுக்கப்படும் அறிவித்தல் மூலம் அத்தகைய ஆளிடமிருந்து அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியான ஏதேனும் வரியை அறவிடுவதற்கென ஆணையாளர்– தலைமை அதிபதி தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் தகவலை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கொடுத்துதவுமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

48. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று ஏதேனும் வரியை உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தியிராதவிடத்து, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு முகாமையாளருக்கு, பணிப்பாளருக்கு, செயலாளருக்கு அல்லது வேறு பிரதான அலுவலருக்கு எதிராக, அத்தகைய தவணைத் தவறுகைக்கு அத்தகைய அலுவலர் பொறுப்பாளியாக இருப்பினுஞ் சரி, இல்லாவிடினுஞ் சரி, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழு தொடர்பில் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் இவ்வத்தியாயத்தின் எல்லா அல்லது எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஒரு பங்காண்மை அல்லது ஒரு கூட்டு முயற்சி ஏதேனும் வரியை உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தியிராதவிடத்து விடயத்துக்கேற்ப அத்தகைய பங்காண்மையின் அல்லது கூட்டுமுயற்சியின் எவரேனும் பங்காளருக்கெதிராக அல்லது ஓர் உறுப்பினருக்கெதிராக, அத்தகைய ஆள் அத்தகைய தவணைத் தவறுகைக்குப் பொறுப்பாளியாக இருப்பினுஞ் சரி அல்லாவிடினுஞ் சரி, எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் இவ்வத்தியாயத்தின் எல்லா ஏற்பாடுகளின் கீழும் அல்லது அவை எவற்றின் கீழும் நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

49. (1) ஆணையாளர் - தலைமை அதிபதி, இச்சட்டத்தால் ஆணையாளர் - தலைமை அதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களையும் பணிகளையும் அவரது கைப்பட எழுத்தின் மூலம் எவரேனும் மதிப்பிட்டாளருக்குக் கையளிக்கலாம்.

(2) எந்த வரிமதிப்பீட்டாளருக்கு (1) உட்பிரிவின் கீழ் ஏதேனும் தத்துவம் அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த வரிமதிப்பீட்டாளர், ஆணையாளர் - தலைமை அதிபதியின் பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கமைய அத்தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

## அத்தியாயம் IX

### விசேடமான விடயங்கள்

50. எவரேனும் ஆளினால் செய்யப்படவேண்டுமென இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயல் அல்லது விடயம், அத்தகைய ஆள் தகைமையற்ற ஆளொருவராக இருப்பின், அத்தகைய தகைமையற்ற ஆளின் நம்பிக்கைப் பொறுப்பாளரால் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

51. எவரேனும் ஆளினால் செய்யப்பட வேண்டுமென இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயல் அல்லது விடயமானது, பங்காண்மையின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் இருக்குமிடத்து அத்தகைய பங்காண்மையின் முன்னுறு பங்காளரால் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

ஆயினும், இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் முன்னுறு பங்காளரொருவராக அல்லது ஒரு பங்காண்மையாக எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த ஆளெவரும், அவர் அப்பங்காண்மையின் பங்காளரொருவர் அல்லர் என அல்லது இலங்கையிலுள்ள வேறோர் ஆளே அதன் முன்னுறு பங்காளர் என அவர் எண்பித்தாலன்றி அவரே அதன் முன்னுறு பங்காளராக கருதப்படுதல் வேண்டும்.

52. (1) கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ் சரி, கூட்டிணைக்கப்படாததாயினுஞ் சரி, ஒவ்வொரு கம்பனியினதும் அல்லது ஆட்கள் குழுவினதும் செயலாளர், முகாமையாளர், பணிப்பாளர் அல்லது வேறு பிரதான அலுவலர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய கம்பனியாக அல்லது ஆட்கள் குழுவால் செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்டவாறான எல்லாச் செயல்களையும் கருமங்களையும் அல்லது விடயங்களையும் செய்வதற்கு பொறுப்பாதல் வேண்டும்.

ஆயினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒரு கம்பனியின் அல்லது ஆட்கள் குழுவின் சார்பில் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் எவரும், அவருக்கு அக்கம்பனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் தொடர்பெதுவும் இல்லையென அல்லது இலங்கையில் வதியும் வேறோர் ஆளே அதன் பிரதம அலுவலர் என எண்பித்தாலன்றி அவரே அதன் பிரதான அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஒரு கம்பனியால் அல்லது ஆட்கள் குழுவால் இச்சட்டத்தின் கீழ் தவறொன்று புரியப்படுமிடத்து தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்கம்பனியின் அல்லது ஆட்கள், குழுவின் செயலாளராக, முகாமையாளராக, பணிப்பாளராக அல்லது வேறு பிரதான அலுவலராக இருந்த ஒவ்வோராளும், அவரது அறிவுக்கு எட்டாமலேயே தவறு புரியப்பட்டதெனவும் அத்துடன் அத்தகைய தன்மையில் அவரது பணிகளின் இயல்பினைக் கருத்திற் கொண்டு அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்க வேண்டியவாறான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தால் எனவும் அவர் எண்பித்தாலன்றி அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

53. (1) இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படுவதற்கமைய, வரிவிதிக்கற் பாலதான ஒரு காலப்பகுதியின் போது வரி அறவிடப்படற்பாலதான ஆளொருவர், வரிவிதிக்கற்பாலதான எந்த செயற்பாடு தொடர்பில் அவர் வரி அறவிடப்படற்பாலராகின்றாரோ அந்த ஏதேனும் செயற்பாட்டை அவர் கொண்டு நடாத்துவதினின்று அல்லது நிறைவேற்று வதினின்று இல்லாதொழிந்த பின்னர் அவர் அத்தகைய வரி விதிக்கற்பாலதான செயற்பாட்டை கொண்டு நடாத்துவதினின்று அல்லது நிறைவேற்றுவதினின்று இல்லாதொழிந்துள்ளார் என்பது எவ்வாறிருப்பினும், வரிவிதிக்கற்பாலதான அக்காலப் பகுதியின் வரி விதிக்கற்பாலதான அச் செயற்பாட்டை அவர் கொண்டு நடாத்திய அல்லது நிறைவேற்றிய காலப்பகுதிக்கு அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு பொறுப்பாதல் வேண்டும்.

(2) வரி விதிக்கற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடாத்தும் அல்லது நிறைவேற்றும் ஆளெவரும் வரிவிதிக்கப்படற்பாலதான அத்தகைய ஏதேனும் தொழில் அல்லது வியாபார செயற்பாட்டின் சொத்தான்மையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சொத்துக்களை வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றுமிடத்து, கைமாற்றத்திற்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு செலுத்தப்படற்பாலதான வரி, கைமாறு பெறுநர் மீது வரிமதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும்,அதனை மாற்றிக் கொடுப்பவரிடமிருந்து அறவிட முடியாதாயின் கைமாறு பெறுநரிடமிருந்து அறவிடப்பட வேண்டும், என்பதுடன், அதற்கிணங்க வரி சேகரிப்பும் அறவீடும் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

54. (1) வரி அறவிடப்படற்பாலரான ஆளெவரும் இறக்குமிடத்து, மரணமெய்திய அத்தகைய ஆளின் நிறைவேற்றுநர் அத்தகைய ஆள் இறக்கும் திகதிக்கு முன்னரான வரிவிதிக்கற்பாலதான எல்லாக் காலப் பகுதிகள் தொடர்பிலும், அத்தகைய ஆள் உயிருடன் இருந்திருப்பின் செலுத்தப்படற்பாலதான வரியைச் செலுத்த ஆளாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் உயிருடன் இருந்திருப்பின் இச்சட்டத்தின் கீழ் எந்தச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கு பொறுப்பா கின்றாரோ அந்தச் செயல்கள், கருமங்கள், விடயங்கள் எல்லாவற்றையும் செய்வதற்கு பொறுப்பாதலும் வேண்டும்.

ஆயினும்

(அ) மரணமெய்திய ஆளின் ஏதேனும் செயல் அல்லது தவணைத் தவறுகைத் தொடர்பில் நிறைவேற்றுநருக்கெதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் தொடரப்படுதலாகாது ;

(ஆ) அத்தகைய ஆள் இறந்த திகதிக்கு முன்னரானவொரு காலப்பகுதி தொடர்பில் வாவிதிக்கற்பாலதான எந்தக் காலப்பகுதியில் இறப்பு நிகழ்ந்ததோ அந்த வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியின் முடிவிலிருந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் ஏதேனும் வரிமதிப்பீடோ அல்லது மேலதிக வரி மதிப்பீடோ செய்யப்படுதலாகாது, அத்துடன்,

(இ) இப்பிரிவின் கீழ் நிறைவேற்றுநரின் பொறுப்பானது -

(i) இப்பிரிவின் கீழ் வரிக்கான பொறுப்பு எழும் என அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியன்று அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலிருந்த மரணமெய்தியவரது மரணச் சொத்தினதும் ; அத்துடன்

(ii) பயனுகரியொருவருக்குச் சென்றிருக்கக் கூடியதான மரண சொத்தின் ஏதேனும் பாகத்தினதும்

பணத்தொகைக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு நிறைவேற்றுநர் மரணமெய்திய ஆளொருவரின் மரணச் சொத்தின் சார்பில், அத்தகைய மரணச் சொத்தின் ஒரு பாகமாகிய ஏதேனும் வரிவிதிக்கற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துமிடத்து, அத்தகைய நிறைவேற்றுநர், அத்தகைய வரிவிதிக்கற்பாலதான செயற்பாடு தொடர்பில், அத்தகைய ஆள் உயிருடன் இருந்திருப்பின் எந்த வரி விதிக்கப்படற்பாலதோ அந்த வரியைச் செலுத்த ஆளாதல் வேண்டும்.

55. வரிவிதிக்கற்பாலதான எந்த செயற்பாடு தொடர்பில் வரி செலுத்தற்பாலதாகின்றதோ அந்த ஏதேனும் வரி விதிக்கற்பாலதான செயற்பாடு எவரேனும் ஆளினால் வேறு எவரேனும் ஆளின் சார்பில் அத்தகைய வேறு ஆளின் முகவர் என்ற வகையில் கொண்டுநடாத்தப்படுமிடத்து, அல்லது நிறைவேற்றப்படுமிடத்து முதற் குறிப்பிடப்பட்ட ஆள், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆள் இச்சட்டத்தின் கீழ் வரிவிதிக்கப்படற்பாலராகும் அதே விதத்திலும் அதே தொகைக்கும் அந்த வரிவிதிக்கற்பாலதான செயற்பாடு தொடர்பில் வரி விதிக்கப்படற்பாலராதல் வேண்டும்.

56. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக அல்லது மரணமெய்திய ஆளொருவரின் மரணச் சொத்தின் நிறைவேற்றுநர்களாகச் செயற்படுமிடத்து இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படற்பாலதான வரி கூட்டாக அல்லது தனித்தனியாக அவர்கள் மேல் விதிக்கப்படலாமென்பதுடன் அத்தகைய வரியைக்கொடுப்பனவு செய்வதற்கும் அவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவர்களாதல் வேண்டும்.

57. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும், கம்பனியொன்று ஒடுக்கப்பட்டவிடத்தும் அத்துடன் எந்த வரிக்கு அக்கம்பனி பொறுப்பாகின்றதோ அந்த வரியை அறவிட முடியாதிருக்குமிடத்தும், அப்போது எந்தக் காலப்பகுதியில் அத்தகைய

வரி செலுத்தற்பாலதாக இருக்கின்றதோ அந்தக் காலப்பகுதியில் அக்கம்பனியின் பணிப்பாளராக இருந்த ஒவ்வோராளும், வரிக் கொடுப்பனவில் தவணைத் தவறுகையானது கம்பனியின் அலுவல்கள் தொடர்பில் அவரைப் பொறுத்தளவில் ஏதேனும் மிக்க கவனமின்மைக்கு பிழையான செய்கைக்கு அல்லது கடமை மீறருக்கு ஏற்றிக் கூறப்பட முடியாது என எண்பித்தாலன்றி, அத்தகைய வரிக்கொடுப்பனவுக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் வரிச் சேகரித்தல் மற்றும் அறவிடல் தொடர்பில் அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

## அத்தியாயம் X

### வரி மீளளிப்பு

58. (1) வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி முடிந்த பின்னர் உடனடியாக மூன்றாண்டுகளினுள் வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதியினுள் தன்னால் மிகையாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் வரியின் அல்லது தண்டத்தின் மீளளிப்புக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் விண்ணப்பஞ் செய்து, அத்தகைய ஆள் அக்காலப் பகுதிக்குச் செலுத்துவதற்கு அவர் பொறுப்பாகவிருந்த தொகைக்கு மேலதிகமாக ஏதேனும் வரியை அல்லது தண்டத்தைச் செலுத்தியுள்ளாரென ஆணையாளர் - தலைமையதிபதியைத் திருப்திப் படுத்தும் போது, அத்தகைய ஆள் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மிகை யாகச் செலுத்தப்பட்ட தொகையின் மீளளிப்புக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் -

(i) ஏற்றுமதியாளரொருவர், அல்லது

(ii) இருபத்தோராம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (iii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆள்

விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட் காலப்பகுதியொன்றுக்குள் மிகையாகச் செலுத்தப்பட்ட அத்தகைய வரியின் அல்லது தண்டத்தின் மீளளிப்புக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கையொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராயிருக்கும் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் இறப்பின் காரணமாக, இயலாமை, வங்கி முறிவு, கலைத்தல் அல்லது வேறு ஏதுவினால் அவ்வாறு செய்ய இயலாதிருக்குமிடத்து விடயத்திற்கேற்ப அவரது நிறைவேற்றுனர் நம்பிக்கைப் பொறுப்பாளர், அல்லது பெறுநர், அத்தகைய ஆளின் அல்லது அவரது மரணச் சொத்தின் நலனுக்காக அத்தகைய ஆளினால் (1) ஆம் உட்பிரிவின் கருத்தெல்லைக்குள் மிகையாக செலுத்தப்பட்ட ஏதேனும் வரியின் அல்லது தண்டத்தின் மீளளிப்பொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவினுள் எது எவ்வாறிருப்பினும் -

(அ) பதிவு செய்யப்பட்ட ஆளெவரும் வரி விதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி அல்லது வரி விதிக்கற்பாலதான காலப்பகுதியொன்றில் மாதமொன்று தொடர்பில் ஏதேனும் வரியை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஆணையாளர் - தலைமையதிபதிக்குச் செலுத்தத் தவறியுள்ளவிடத்து, வருமதியாகும் திகதிக்கு

முன்னர் செலுத்தற்பாலதான ஏதேனும் வரித்தொகையானது, அத்தகைய ஆளுக்கு உரிய அறிவித்தலின் பின்னர் செலுத்தப்படாதிருக்கும் அந்த வரிக்கு ஈடாக அந்த ஆளுக்கு வேறு வகையில் மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகையிலிருந்து அல்லது அத்தொகையின் ஏதேனும் பாகத்திலிருந்து அல்லது 59 ஆம் பிரிவின் கீழ் அந்த ஆளுக்கு செலுத்தப்படற் பாலதான ஏதேனும் வட்டித் தொகையிலிருந்து அல்லது அதன் ஏதேனும் பாகம் எதிலுமிருந்து எதிரீடு செய்யப்படலாம் என்பதுடன் அவ்வாறு எதிரீடு செய்யப்பட்ட ஏதேனும் தொகையை பதிவு செய்யப்பட்ட அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளிடமிருந்து பெறப்பட்ட கொடுப்பனவொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும் ;

(ஆ) பதிவு செய்யப்பட்ட ஆளெவரும் வரி விதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதி அல்லது வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியொன்றில் மாதமொன்று தொடர்பில் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்குரிய ஒரு விவரத் திரட்டைக் கொடுத்துதவத் தவறியுள்ளவிடத்து, அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் அத்தகைய விவரத்திரட்டைக் கொடுத்துதவும் வரை ஆணையாளர் – தலைமை அதிபதி, வேறு வகையில் மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகையின் அல்லது இச்சட்டத்தின் 59 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வட்டித் தொகையின் கொடுப்பனவை பிடித்து வைக்கலாம்.

59. (1) இச்சட்டத்தின் கீழ் மீளளிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகை பதிவு செய்யப்பட்ட ஆளொருவருக்கு, அத்தகைய மீளளிப்பு வருமதியாகும் திகதியிலிருந்து முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் மீளளிக்கப்பட்டிராதவிடத்து, அத்தகைய தொகையின் மீது, வருமதியான திகதியிலிருந்து முப்பதாவது நாளன்று தொடங்கி இச்சட்டத்தின் கீழ், மீளளிக்கப்பட வேண்டுமென ஆணையாளர் – தலைமை அதிபதியால் தேவைப்படுத்தப்பட்டவாறான மீளளிப்பு திகதி வரையிலான காலப்பகுதிக்கு அமைச்சரால் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்பட்ட வீதப்படி அத்தகைய தொகையின் வட்டி அத்தகைய ஆளுக்கு ஆணையாளர் தலைமையதிபதியால் செலுத்தப்படல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்கு “வருமதியான திகதி” என்பது –

(i) வரிமதிப்பீட்டாளரொருவருடன் உடன்பட்டுக் கொண்ட திகதியிலிருந்து அல்லது அந்த வரிமதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த வரிமதிப்பீடு தொடர்பில் மேன்முறையீடொன்று தீர்மானிக்கப்படும் திகதியிலிருந்து ; அல்லது

(ii) 22 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் எழுத்தில் செய்யப்படும் மீளளிப்பொன்றுக்குத் தவிர, எழுத்தினாலான உரிமைக் கோரிக்கையொன்று அத்தகைய ஆளிடமிருந்து ஆணையாளர் தலைமையதிபதியால் பெறப்பட்ட திகதியிலிருந்து தொண்ணூறு நாட்களைக் கொண்டதொரு காலப்பகுதி என்று பொருள்படும்.

## அத்தியாயம் XI

### கொடுப்பனவுகளிலிருந்து வரிக் கழிப்பனவு செய்தல்

60. (1) ஆளொருவர் எந்த ஒப்பந்தத்திற்குத் திறத்தவரொருவராக இருக்கின்றாரோ அந்த ஒப்பந்தமொன்றைப் பின்பற்றி அல்லது ஒப்பந்தமொன்றுக்கு திறத்தவரொருவரான வேறு எவரேனும் ஆளின் சார்பில், அத்தகைய ஒப்பந்தம் நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, ஏதேனும் கொடுப்பனவை செய்கின்ற ஒவ்வோராளும் அத்தகைய கொடுப்பனவிலிருந்து, அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதப்படி அத்தகைய கொடுப்பனவின் நூற்றுவீதமொன்றாக இருக்க வேண்டியதான வரியை கழிப்பனவு செய்தல் வேண்டும். அத்துடன் அவ்விதம் கழிப்பனவு செய்யப் படும் வரித்தொகையானது, அத்தகைய ஆளிடமிருந்து குடியரசிற்கு வருமதியான தனிசு ஒன்றாதலும் வேண்டும் என்பதுடன் உடனடியாக அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும். அல்லது அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரிக்கு மேலதிகமாக அவர்மீது வரிமதிப்பீடு செய்யப்பட்டு விதிப்பனவு செய்யவும் படலாம்.

ஆயினும், அத்தகைய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு செலுத்தப்படற்பாலதாகும் மொத்தப் பிரதிபயன் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து, அத்தகைய கழிப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வரியைக் கழிப்பனவு செய்யும் ஆளெவரும் –

(அ) எந்த ஆளின் கொடுப்பனவிலிருந்து கழிப்பனவு செய்யப்படுகின்றதோ அந்த ஆளுக்கு –

(i) அத்தகைய கொடுப்பனவின் மொத்தத் தொகையையும் ;

(ii) அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வரி வீதத்தையும் தொகையையும் ; அத்துடன்

(iii) உள்ளவாறாகச் செலுத்தப்பட்ட தேறிய தொகையையும்

காட்டும் கூற்றொன்றையும் வழங்குதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய கழிப்பனவைச் செய்த ஏழு நாட்களுக்குள் அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட பணத்தொகையை –

(i) எந்த ஆளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டதோ அந்த ஆளின் பெயரையும் முகவரியையும் அத்தகைய ஆளுக்குப் பதிவிலக்கம் எதுவுமிருப்பின் அதனையும்

(ii) அத்தகைய கொடுப்பனவின் மொத்தத் தொகையையும் ;

(iii) அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வரியின் வீதத்தையும் தொகையையும் ;

(iv) உள்ளவாறு செலுத்தப்பட்ட தேறிய தொகையையும் ; அத்துடன்

(v) கொடுப்பனவைச் செய்த ஆளின் பெயர், முகவரி அத்துடன் அத்தகைய ஆளின் பதிவிலக்கம் என்பவற்றையும்

காட்டும் கூற்றொன்றுடன் சேர்த்து ஆணையாளர் – தலைமை அதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) ஆளொருவரின் வரிவிதிக்கற்பாலதான வழங்கல்கள் எந்தப் பணத்தொகையிலிருந்து (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க வரிக் கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதோ அந்தப் பணத் தொகையொன்றினை உள்ளடக்குமிடத்து, அவர் (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க வழங்கப்பட்ட அத்தகைய பணத்தொகை தொடர்பான கூற்றொன்றை முன்வைப்பதன் மீது, கழிப்பனவு செய்யப்பட்ட வரித்தொகையாக அத்தகைய கூற்றில் காட்டப்பட்ட தொகையிலிருந்து அவரால் செலுத்தற்பாலதான வரியை எதிரீடு செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்கு, "ஒப்பந்தம்" என்பது,

(i) எத்தன்மையதுமான நிர்மாண வேலை அல்லது சேவைகள் தொடர்பில் தொழில் ஒப்பந்தமொன்றல்லாத ஏதேனும் ஒப்பந்தம்

(ii) ஓராம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதற்கான ஏதேனும் ஒப்பந்தம் ; அல்லது

(iii) ஓராம் அல்லது (ii) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் ஏதேனும் துணை ஒப்பந்தம் ;

(iv) களிப்பூட்டுவோன் அல்லது கலைஞன் என்ற வகையில், சேவைகளை வழங்குவதற்கான ஓர் ஒப்பந்தம் உட்பட (ஆனால் தொழில் ஒப்பந்தம் ஒன்றைத் தவிர) சேவைகளை வழங்குவதற்கான ஏதேனும் ஒப்பந்தம் ; அல்லது

(v) சினிமாப் படங்களை வழங்குவதற்கான ஏதேனும் ஒப்பந்தம்

என்று பொருள்படும்.

(5) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி வரியை கழிப்பனவு செய்யத் தவறுகின்ற அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் வரியை ஆணையாளர் – தலைமை அதிபதிக்கு அனுப்பத் தவறுகின்ற ஆளெவரும் தவணைத் தவறுகையில் உள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் வரி அறவீடு தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க அத்தகைய தவணைத் தவறுகை எதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் கழிப்பனவைச் செய்துள்ள அல்லது (2) ஆம் உட்பிரிவை பின்பற்றி ஏதேனும் அனுப்புதலைச் செய்துள்ள ஆளெவரும், எந்த

ஆளினால் வரி செலுத்தப்படற்பாலதாயிருந்ததோ அந்த ஆளின் அதிகாரத்தின் கீழும் அத்துடன் சம்பந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களினதும் அதிகாரத்தின் கீழ் செயற்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின், ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் எதிராக விடயத்திற்கேற்ப அத்தகைய கழிப்பனவு அல்லது அனுப்புகை தொடர்பாக இத்தால் நட்டோத்தரவாதம் செய்யவும்படுகின்றார்.

(7) எவரேனும் ஆள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளவிடத்தும் அத்துடன் அத்தகைய ஒப்பந்தங்களின் தன்மையையும் அவற்றின் திறத்தவர்களையும் கருத்திற்கொண்டு வரிமதிப்பீட்டாளர் அத்தகைய ஒப்பந்தங்கள் தொடர்பில் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுநர் ஒரே ஆள் ஆவார் அல்லது அவரது முகவர் ஆவார் என அபிப்பிராயப்படு மிடத்தும் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு, செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப் படற்பாலதான பணத்தொகை கூட்டுமொத்தமாக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XII

### நானாவிதமானவை

61. (1) இச்சட்டத்தின் கீழ் ஆணையாளர் – தலைமையதிபதியினால் ஒரு பிரதி ஆணையாளரினால் அல்லது ஒரு வரி மதிப்பீட்டாளரினால் கொடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வோர் அறிவித்தலும், விடயத்துக்கேற்ப, ஆணையாளர் – தலைமையதிபதியின் அல்லது பிரதி ஆணையாளரின் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒவ்வோர் அறிவித்தலும், ஆணையாளர் – தலைமை யதிபதியின், பிரதி ஆணையாளரின் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயர் அதன்மீது உரிய முறையில் அச்சிடப்பட்டிருப்பின் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பின் செல்லுபடி யாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் பயனைக்கொண்டு விடுக்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் ஓர் ஆளிடம் நேரடியாகவோ அல்லது அவர் கடைசியாக வசித்த இடத்தில் அல்லது அந்த இடத்துக்கு அல்லது அறிவித்தல் எக்காலப்பகுதி தொடர்பானதோ அக்காலப்பகுதியின் போது அவர் எவ்விடத்தில் வரிவிதிக்கற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்திக் கொண்டிருக்கின்றாரோ அல்லது நடாத்திக் கொண்டிருந்தாரோ அவ்விடத்தில் அல்லது இடத்துக்கு ஒப்படைக்கப்படுவதன் மூலம் அல்லது தபால் மூலம் அனுப்பப் படுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(3) தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல் எதுவும் தபால் சாதாரணமாகச் செல்லும்போது அது எந்நாளன்று பெறப்பட்டிருக்கக் கூடுமோ அந்நாளன்று சேர்ப்பிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) தபால் மூலம் சேர்ப்பிக்கப்பட்டதை எண்பிக்கையில் அறிவித்தலைக் கொண்டிருக்கும் கடிதம் முறையாக முகவரியிடப்பட்டுத் தபாலில் சேர்க்கப்பட்டதென்பதை எண்பித்தல் போதுமானதாதல் வேண்டும்.

(5) ஏதேனும் அறிவித்தலில் அச்சடிக்கப்படுவதும் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கொடுக்கப்படுவதும் அல்லது வழங்கப்படுவதுமான ஏதேனும் சான்றிதழில் ஒப்பமிடப்படுவதும் அத்துடன் அதைக் கொடுப்பதற்கு அல்லது வழங்குவதற்கு, அதிகாரமளிக்கப்பட்ட ஆளினது பெயர் எனக் கொள்ளப்படுவதுமான பெயர் ஒவ்வொன்றும் நீதிமுறையாகக் கவனத்திற்கெடுக்கப்படுதல் வேண்டும்.

62\. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இருப்பதாகக் கொள்ளப்படும் அறிவித்தல், மதிப்பீடு, சான்றிதழ் அல்லது வேறு வழக்கு நடவடிக்கை எதுவும், அதன் படிவம் சரியில்லாத காரணத்தால் அல்லது அதிலுள்ள பிழை அல்லது குறைபாடு அல்லது விட்டுவிடுகை காரணமாக, அது பொருளளவிலும் பயனளவிலும் இச்சட்டத்தின் நோக்கத்துக்கும் கருத்துக்கும் இணங்க அல்லது ஏற்ப இருந்தால், அத்துடன் மதிப்பீடு செய்யப்படும் அல்லது செய்யப்பட முன்னப்படும் ஆள் அல்லது அதனால் பாதிக்கப்படும் ஆள் பொதுவான நோக்கத்தின் அல்லது புரிந்துணர்வின் பிரகாரம் அதில் குறித்துரைக்கப்பட்டிருந்தால் தள்ளுபடி செய்யப்படுதலாகாது அல்லது வறிதானதாக அல்லது வறிதாக்கப்படற்பாலதாகக் கருதப்படலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, மதிப்பீடு ஒன்று –

(அ) வரிவிதிக்கற்பாலதான ஆளினது பெயரில் அல்லது அவரது குடும்பப் பெயரில் அல்லது வரிவிதிக்கற்பாலதான வழங்கல்களின் பெறுமதித் தொகையில் பிழையொன்று இருக்கும் காரணத்துக்காக ; அல்லது

(ஆ) மதிப்பீட்டுக்கும் அதற்கான அறிவித்தலுக்குமிடையில் வேறுபாடு எதுவும் இருக்கும் காரணத்தினால்,

வரி விதிக்கப்படவிருக்கும் ஆளிடம் அத்தகைய மதிப்பீடு பற்றிய அறிவித்தல் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டிருந்தால் அத்துடன் அவ்வறிவித்தல் பொருளளவிலும் பயனளவிலும் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டுமிருந்தால், பாதிக்கப்படுதலோ அல்லது வினாவுக்குட்படுத்தப்படுதலோ ஆகாது.

63\. (1) ஆணையாளர் – தலைமையதிபதியினால் அதற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட உண்ணாட்டரசிறைத் திணைக்கள அலுவலர் எவரும் சமாதான அலுவலர் ஒருவருடன் சென்று பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதனையும் செய்யலாம் :-

(அ) இச்சட்டத்தின் கீழான எவ்வழக்கு நடவடிக்கைக்குப் பயன்படும் அல்லது இயைபாக இருக்கும் என அவர் அபிப்பிராயப்படுகின்ற கணக்குப் புத்தகங்கள், இடாப்புகள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் காணப்படக்கூடும் என அவர் நம்புவதற்குக் காரணம் இருக்கின்றவிடத்து ஏதேனும் கட்டிடத்துக்குள் அல்லது இடத்துக்குள் புகுந்து தேடுதல் நடத்தலாம். அத்துடன் அவ்வாறு எதுவும் காணப்பட்டால், அதைப் பரிசோதனையும் செய்யலாம் ;

(ஆ) அத்தகைய எவையேனும் கணக்குப் புத்தகங்களை, இடாப்புக்களை, பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைக் கைப்பற்றலாம் அல்லது அவற்றின் மீது இனங்காணும் அடையாளங்களை இடலாம் அல்லது அவற்றிலிருந்து பிரித்திடுகைகளை அல்லது பிரதிகளை எடுக்கலாம்,

(இ) இப்பிரிவின் கீழான ஏதேனும் தேடுதலின் போது காணப்படுகின்றதும் இச்சட்டத்தின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்குப் பயன்படும் அல்லது இயைபாக இருக்கும் என அவர் அபிப்பிராயப்படுகின்றதுமான வேறு ஏதேனும் பொருளைப் பற்றிக் குறிப்பொன்று செய்யலாம் அல்லது பொருட்பட்டியல் ஒன்று தயாரிக்கலாம்.

அத்துடன் தேடுதல்கள் தொடர்பிலான குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள், அவை இப்பிரிவின் கீழான தேடுதல்களுக்காக இருக்குமளவிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில், "சமாதான அலுவலர்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அலுவலர் எவருக்கும் அதிகாரமளிப்பதற்கு முன், ஆணையாளர் – தலைமையதிபதி அவ்வலுவலரால் அத்தத்துவங்கள் பயன்படுத்தப்படுவதை அவசியமாக்கும் சூழ்நிலைகளைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் – தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எதனையும் எவரேனும் ஆளிடமிருந்து கைப்பற்றுகின்றவிடத்து, அத்தகைய அலுவலர், அவ்வாளுக்கு, தாம் கைப்பற்றியிருக்கும் புத்தகம் இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் என்பவற்றைக் குறித்துரைக்கின்ற நிருபம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(4) அலுவலர் எவரினாலும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கைப்பற்றப்படும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எதுவும் அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் நுணுக்கமாக ஆராயப்படுவதற்கு அல்லது அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எவ்வாளுக்குச் சொந்தமானதோ, அவ்வாளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் தொடரப்படுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நீண்டகாலத்துக்கு அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

64. (1) ஆணையாளர் – தலைமையதிபதி அல்லது அதற்கென ஆணையாளர் – தலைமையதிபதியினால் எழுத்தில் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தைச் சேர்ந்த வேறு அலுவலர் எவரும் பின்வரும் செயல்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதையும் செய்யலாம் –

(அ) எவரேனும் ஆளினால் எவ்விடத்தில் அல்லது கட்டிடத்தில் வரிவிதிக்கற்பாலதான ஏதேனும் செயற்பாடு கொண்டு நடாத்தப்படுகின்றதோ, அல்லது நிறைவேற்றப் படுகின்றதோ அவ்விடத்துக்குள் அல்லது கட்டிடத்துக்குள், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பது உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகப் புகுந்து பரிசோதித்தல் ;

(ஆ) அங்கு காணப்படக்கூடிய ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஏதேனும் ஆதனத்தைத் திறந்து பரிசோதனை செய்தல் அத்துடன்

அங்கே காணப்படும் எவையேனும் பொருட்கள் பற்றிய பதிவேடொன்றைத் தயாரித்தல் ;

(இ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் காணப்படும் ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசோதனை செய்து அவற்றின் பிரதிகளை அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுகைகளை எடுத்தல் ;

(ஈ) ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை உடைமையில் எடுத்தல் அல்லது அதன்மீது இனங்காணும் அடையாளங்களை இடுதல் ;

(உ) அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் காணப்படும் காசை உடனடியாக எண்ணிப் பதிவு செய்தல் ;

(ஊ) இச்சட்டத்தின் கீழான விடயங்கள் தொடர்பில், அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் அவர் காணுகின்ற ஆளெவரையும் தமது அறிவுக்குட்பட இருக்கும், அத்தகைய தகவலைத் தருமாறு தேவைப்படுத்தல் ;

(எ) இச்சட்டத்தின் கீழான விடயங்கள் தொடர்பில், அத்தகைய இடத்தில் அல்லது கட்டிடத்தில் அவர் காணுகின்ற ஆள் ஒவ்வொருவரையும் தனியாகவோ அல்லது அவர் பொருத்தமானதெனக் கருதுகின்ற வேறு எவரேனும் ஆளின் சமூகத்திலோ பரிசோதனை செய்தல்.

(2) ஆணையாளர் – தலைமையதிபதியினல் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் கணக்குப் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைத் தமது உடைமையில் எடுக்கின்ற விடத்து, அத்தகைய அலுவலர், அவ்வாளுக்கு தாம் தமது உடைமையில் எடுத்துள்ள புத்தகம் இடாப்பு, பதிவேடு அல்லது ஆவணம் பற்றிக் குறித்துரைக்கின்ற நிருபமொன்றை அவ்வாளுக்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஆளெவரினாலும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவரது உடைமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏதேனும் கணக்குப் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் அத்தகைய அலுவலரின் உடைமையில், அத்தகைய புத்தகத்தின், இடாப்பின், பதிவேட்டின் அல்லது ஆவணத்தின் நுண்ணாராய்வுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய காலத்துக்கு, அல்லது அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எவ்வாளுக்குச் சொந்தமானதோ அவ்வாளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுப்பதற்காக அத்தகைய அலுவலரின் உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

65. (1) பதிவு செய்யப்பட்ட ஆளொவ்வொருவரும் ஆணையாளர் – தலைமையதிபதி அல்லது அதற்கென ஆணையாளர் – தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர் வரிக்கான பொறுப்பை நிச்சயிப்பதனை இயலச் செய்வதற்கென, அவரினால் கொண்டுநடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பிலான பதிவேடுகளை வைத்திருந்து பேணிவருதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வைத்திருக்கப்பட வேண்டிய பதிவேடுகளின் படிவங்களும் அவற்றின்கண் எடுத்துக் கூறப்படவேண்டிய விபரங்களும் விதித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக "பதிவேடுகள்" என்ற பதம் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :-

(அ) வரவுகளை அல்லது கொடுப்பனவுகளை அல்லது வருமானத்தை அல்லது செலவினத்தைப் பதிவு செய்கின்ற (அவை ஒரு கைந்நூலில் பொறிமுறை அல்லது இலத்திரன் முறைவடிவத்தில் அல்லது அவற்றின் சேர்க்கையாக இருப்பினுஞ்சரி) கணக்குப் புத்தகங்கள் அத்துடன் அத்தகைய எவையேனும் கணக்குப் புத்தகங்களில் உள்ள பதிவீடுகளைச் சரிபார்ப்பதற்கு அவசியமானவாறான உறுதிச்சீட்டுகளையும், வங்கிக் கூற்றுகளையும் பட்டியல்களையும் வரிப்பட்டியல்களையும், வரிவரவுக் குறிப்புகளையும், வரிப்பற்றுக் குறிப்புகளையும், வரவுகளையும் அத்தகைய வேறு ஆவணங்களையும் உள்ளடக்கும் ;

(ஆ) பண்டங்களின் கையிருப்புகள் வைத்திருக்கப்படும் ஏதேனும் குதம், பண்டக சாலை அல்லது வேறெவையேனும் இடம் பற்றிய விபரங்களும், விடயத்துக் கேற்ப அத்தகைய குதங்கள், பண்டகசாலைகள் அல்லது வேறெவையேனும் இடங்கள் என்பவற்றில் வைத்திருக்கப்படும் பண்டங்களின் கையிருப்புப் பற்றிய விபரங்களும் ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது இதன்கீழான எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் பேணிவரப்படுவதற்கு அல்லது வைத்திருக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் நிரல் அல்லது பதிவேடு.

## அத்தியாயம் XIII

### தவறுகளும், தண்டங்களும்

66 (1) (அ) இரகசியம் பேணுவதற்கான சத்தியப் பிரமாணம் எடுப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆள் ஒருவராக இருந்துகொண்டு 72 ஆம் பிரிவின் கீழ் அவ்வாறு தேவைப் படுத்தப்படும் போது இரகசியம் பேணுவதற்கான சத்தியப் பிரமாணத்தை எடுக்கத் தவறுகின்ற ; அல்லது

(ஆ) 72 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றவகையில் செயலாற்றுகின்ற ; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற வகையில் செயலாற்றுவதற்கு எவரேனும் வேறு ஆளுக்கு உதவுகின்ற, அல்லது அவருக்கு உடந்தையாக இருக்கின்ற அல்லது அவரைத் தூண்டுகின்ற,

ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை

மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

67. (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தகவல் தருமாறு கேட்கப்படும் அல்லது செய்யப்படும் வினா அல்லது வேண்டுகோள் எதற்கும் வாய் மூலம் அல்லது எழுத்தில் பொய்யான மறுமொழி எதுவும் கொடுக்கின்ற ; அல்லது

(ஆ) இச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விபரத்திரட்டில் அவர் உள்ளடக்கியிருக்க வேண்டிய எவையேனும் விபரங்களை அத்தகைய விபரத்திரட்டில் விட்டுவிடுகின்ற ;

(இ) இச்சட்டத்தின் கீழ் செய்யப்படும் ஏதேனும் விபரத் திரட்டில் ஏதேனும் பொய்யான விபரத்தை அல்லது பதிவைச் செய்து,

அதன் மூலம் வரியைத் தவிர்க்கின்ற அல்லது தவிர்க்க எத்தனிக்கின்ற அல்லது வரியைத் தவிர்ப்பதற்கு வேறு எவரேனும் ஆளுக்கு உதவி புரிகின்ற ஆள் எவரும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் –

(i) தவறு எவ்வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி தொடர்பில் புரியப்பட்டதோ அக்காலப்பகுதிக்கு அவர் இச்சட்டத்தின் கீழ் செலுத்துவதற்கு ஆளாக வேண்டிய தொகையொன்றை அவர் அவ்வாறு தவிர்த்தாரோ அல்லது தவிர்க்க எத்தனித்தாரோ அப்பணத்தொகையின் இரண்டு மடங்கு தொகைக்குச் சமனான பணத்தொகையொன்றைக் கொண்டுள்ள குற்றப்பணமொன்றுக்கு ; அத்துடன்

(ii) இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றைக் கொண்ட குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலமொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்,

ஆளாதலும் வேண்டும்.

68. (அ) பத்தாம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவு செய்வதற்கென வேண்டுமென்றே விண்ணப்பிக்கத் தவறுகின்ற ; அல்லது

(ஆ) 19 ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் விடயங்களை ஆணையாளர் – தலைமையதிபதிக்கு அறிவிக்கத் தவறுகின்ற ; அல்லது

(இ) 20 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வரிப்பட்டியல்களை வழங்கத் தவறுகின்ற ; அல்லது

(ஈ) வரிவிதிக்கற்பாலதான வழங்கல் ஒவ்வொன்றுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிப்பணப் பட்டியல்களை வழங்குகின்ற ; அல்லது

(உ) அத்தகைய ஆள் 20 ஆம் பிரிவின் கீழ் வரிப்பணப்பட்டியலை வழங்க உரித்துடையவராக இல்லாதவிடத்து, வரிப்பணப் பட்டியலொன்றை வழங்குகின்ற ; அல்லது

(ஊ) 21 ஆம் பிரிவின் கீழ் விபரத்திரட்டொன்று கொடுத்துதவ அல்லது 21 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலோடு இணங்கியொழுகத் தவறுகின்ற ; அல்லது

(எ) தமக்கு 21 ஆம் பிரிவின் கீழ் அல்லது 34 ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்படும் அறிவித்தலொன்றுக்கு இணங்க உண்ணாட்டரசிறைக்கு திணைக்கள அலுவலர் ஒருவர் முன் தோன்றிய பின், இச்சட்டத்தின் கீழ் செயலாற்றும் அலுவலர் ஒருவரினால் சட்டமுறையாக அவரிடம் கேட்கப்படும் வினா எதற்கும் போதிய காரணம் இன்றி மறுமொழி பகரத்தவறுகின்ற ; அல்லது

(ஏ) வரி செலுத்துவதற்குத் தமக்கேயுள்ள பொறுப்பை அல்லது வேறு எவரேனும் ஆளினது பொறுப்பைப் பாதிக்கின்ற ஏதேனும் கருமம் அல்லது விடயம் தொடர்பில் பிழையான தகவல் எதையும் கொடுக்கின்ற ; அல்லது

(ஐ) ஆணையாளர் – தலைமை அதிபதி தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்கு 44 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படவுள்ள ஏதேனும் தொகை செலுத்தப்படுவதை அனுமதிக்கின்ற ; அல்லது

(ஒ) 60 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட கழிப்பனவு எதையும் தெரிந்துகொண்டே செய்யத் தவறுகின்ற அல்லது 60 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ; அல்லது

(ஓ) 63 ஆம் அல்லது 64 ஆம் பிரிவின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆணையாளர் – தலைமை அதிபதிக்கோ அல்லது வேறு எவரேனும் அலுவலருக்கோ வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடுகின்ற அல்லது அவர்களைத் தாமதிக்க வைக்கின்ற ; அல்லது

(ஔ) 65 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பதிவுகள் பற்றிய இடாப்பொன்று பேணுவதற்குத் தவறுகின்ற ; அல்லது

(க) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராக இல்லாதிருக்கையில் வரிப்பட்டிய லொன்றை வழங்குகின்ற

ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

69. இச்சட்டத்தின் கீழான தவறொன்று தொடர்பிலான குற்றவழக்குத் தொடர்தல் எதுவும், ஆணையாளர் – தலைமை அதிபதியின் தூண்டுதலுடன் அல்லது அனுமதியுடன் அன்றி தொடங்கப்படுதலாகாது.

70. ஆணையாளர் – தலைமை அதிபதி, இச்சட்டத்தின் கீழ் தவறு எதுவும் புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு, திறத்தவர்களின் சம்மதத்துடன், அத்தகைய தவறை இச்சட்டத்தின் கீழ் அத்தகைய தவறுக்காக விதிக்கப்படற்பாலதான, ஆகக்கூடிய குற்றப்பணத்தின்

மூன்றிலொன்றை விஞ்சாத பணத்தொகையொன்றுக்கு இணக்கலாம். இப்பிரிவின் கீழான தவறொன்றை இணக்குவதில் ஆணையாளர் - தலைமை அதிபதியினால் பெறப்படும் பணத்தொகை எதுவும் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XIV

### நிருவாகம்

71. (1) ஆணையாளர் - தலைமை அதிபதி, அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உண்ணாட்டரசிறை ஆணையாளர்களினதும், பிரதி ஆணையாளர் களினதும், சிரேட்ட மதிப்பீட்டாளர்களினதும், மதிப்பீட்டாளர்களினதும், வரி அலுவலர் களினதும் உதவியுடன் இச்சட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் - தலைமை அதிபதி, இச்சட்டத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட அல்லது தம்மீது சுமத்தப்பட்ட அல்லது தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் எவருக்கும் அதிகாரமளிக்கலாம்.

(3) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் ஆணையாளர்- தலைமை அதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது ஒதுக்கப்பட்டுள்ள அல்லது அவர் மேல் சுமத்தப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கின்ற, புரிகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற உண்ணாட்டரசிறை ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் ஒருவர், அதற்கு முரணானது எண்பிக்கப்படும்வரை அத்தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார் என எல்லா நோக்கங்களுக்காவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) உண்ணடாட்டரசிறை ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் ஒருவர், இச்சட்டத்தினால் மதிப்பீட்டாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது ஒதுக்கப்பட்டுள்ள அல்லது அவர்மீது சுமத்தப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

72. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஊழியத்திலமர்த்தப்பட்டிருக்கும் அல்லது ஈடுபட்டிருந்த அல்லது அதில் ஈடுபட்டிருக்கின்ற அல்லது அத்தகைய ஒருவருக்குத் துணைபுரிகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழ் தமது கடமைகளைப் புரிகையில், ஆள் எவரினதும் விவகாரங்கள் தொடர்பில் அவருடைய அறிவுக்கு எட்டக்கூடிய எல்லா விடயங்கள் தொடர்பிலும் இரகசியத்தைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் இரகசியத்தைப் பேணுதலில் உதவுதலும் வேண்டும். அத்துடன், அவர் அத்தகைய விடயம் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாள் அல்லது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்கு அத்தகைய விடயம் பற்றி அறிவித்தல் ஆகாதென்பதுடன், ஆணையாளர் - தலைமை அதிபதியின் உடைமையில், கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும் பதிவேடுகள் எவற்றையும் அணுகிப் பெறுவதைச் சகித்தலோ அல்லது அனுமதித்தலோ ஆகாது.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஆளும் இச்சட்டத்தின் கீழ் செயற்பட முன்னரும் அத்துடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரும் இச்சட்டத்தின் கீழ் செயற்பட முன்னர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு சமாதான நீதிவானின் முன்னிலையில் இரகசியத்தைப் பேணுவதற்கான உறுதியுரையைச் செய்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள ஆளெவரும், இச்சட்டத்தின் அல்லது ஆணையாளர் – தலைமை அதிபதியினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சந்தர்ப்பம் தவிர, இச்சட்டத்தின் கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அவரின் அவதானத்துக்கு வருகின்ற ஏதேனும் விபரத்திரட்டை அல்லது ஆவணத்தை ஏதேனும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அல்லது ஏதேனும் விடயத்தை அல்லது விபரத்தை ஏதேனும் நீதிமன்றத்துக்கு வெளிப்படுத்துமாறு அல்லது அறிவிக்குமாறு தேவைப்படுத்தலாகாது.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும் எப்படியிருப்பினும், உண்ணாட்டரசிறை திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர் எவரும், இச்சட்டத்தின் கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் விடயம் பற்றி, திணைக்களத்தின் வேறு எவரேனும் அலுவலர் அவரது கடமையைப் புரிவதற்கு, அவ்விடயம் பற்றி அறிவித்தல் அவசியமானதாக இருந்தால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணையாளர் – தலைமை அதிபதியினால் நிருவகிக்கப்படும் ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏதேனும் கடமையைப் புரிவதற்கு அவ்விடயம் பற்றி அறிவித்தல் அவசியமானதாக இருந்தால், அவருக்கு அறிவிக்கலாம். அத்துடன் ஆணையாளர் – தலைமை அதிபதி, ஆவணங்களின் எண்பிப்புத் தொடர்பில் சான்றுக்கட்டளைச் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் அல்லது அவரினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அவரினால் பெறப்பட்ட அல்லது அவரது உடைமையிலிருக்கும் ஏதேனும் விபரத்திரட்டல் அல்லது ஆவணத்தில் உள்ள விபரங்களின் பிரதியொன்றை அல்லது அத்தகைய விபரங்களின் சரியான பிரதியென அவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட அல்லது அவரின் சார்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விபரங்களின் பிரதியொன்றை இச்சட்டத்தின் வழக்கு நடவடிக்கைகளில் எவற்றிலும் நீதிமன்றம் எதிலும் சமர்ப்பிக்கலாம் அல்லது சமர்ப்புவிக்கலாம்.

ஆயின், ஆணையாளர் – தலைமை அதிபதி, அத்தகைய விபரத்திரட்டை அல்லது ஆவணத்தை எழுதிய, தயாரித்த அதில் கையொப்பமிட்ட, கொடுத்துதவிய அல்லது அத்தகைய விபரத்திரட்டில் அல்லது ஆளின் கையெழுத்தை அல்லது கையொப்பத்தை எண்பிப்பது அவசியமானதாக இருக்கின்றவிடத்து, ஆனால் அத்தகைய எண்பிப்புக்காக மட்டும், அத்தகைய ஏதேனும் விபரத்திரட்டின் அல்லது ஆவணத்தின் மூலப்பிரதியை ஏதேனும் வழக்கில் சமர்ப்பிக்கலாம் அல்லது சமர்ப்பிக்கப்படலாம் :

ஆயின், மேலும் ஆணையாளர் – தலைமை அதிபதி, அத்தகைய ஆவணத்தின் அல்லது விபரத் திரட்டின் மூலப்பிரதியையோ அல்லது அத்தகைய ஆவணத்தில் அல்லது விபரத்திரட்டில் உள்ள எவையேனும் விபரங்களின் பிரதியையோ ஏதேனும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எச்சந்தர்ப்பத்திலும் நிர்ப்பந்திக்க கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(5) இப்பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும், ஆணையாளர் – தலைமை அதிபதி, கணக்காய்வாளர் – தலைமை அதிபதியை அல்லது அதற்கென அவரினால் முறையே

அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் – தலைமையதிபதி திணைக்களத்தின் அலுவலர் எவரையும், அவரது உத்தியோகபூர்வ கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் எவற்றையும் அணுகிப்பார்ப்பதற்கு அனுமதிக்கலாம். கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது இச்சட்டத்தின் கீழ் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும் இச்சட்டத்தின் கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் விடயத்திலிருந்து சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அல்லது மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆளெவரும் தவறொன்று புரிந்துவிட்டாரென ஆணையாளர் – தலைமை அதிபதிக்குத் தோன்றுகின்றவிடத்து அவர், அத்தகைய தவறு புரியப்பட்ட தொடர்பிலான ஏதேனும் தகவலை அல்லது அத்தகைய தவறு புரியப்பட்டதை எண்பிக்கும் நோக்கத்துக்கு அவசியமான அல்லது உபயோகமான எவையேனும் பொருட்களை கணக்குப் புத்தகங்களை அல்லது வேறு எவையேனும் ஆவணங்களை விடயத்துக்கு ஏற்றவாறு உற்பத்தித் தீர்வை – ஆணையாளருக்கு அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமை – அதிபதிக்கு அறிவிக்கலாம் அல்லது ஒப்படைக்கலாம்.

73. (1) ஆணையாளர் – தலைமையதிபதி, இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் அல்லது எவையேனும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கெனப் படிவங்களைக் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கலாம். அத்துடன், அவ்வாறு குறித்துரைக்கப்படும் படிவம் எதுவும் காலத்துக்குக் காலம் ஆணையாளர் – தலைமையதிபதியினால் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம் அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அல்லது வேறுபடுத்தப்பட்ட படிவம் எதற்கும் பதிலாக வேறு ஏதேனும் படிவம் ஆணையாளர் – தலைமை அதிபதியினால் இடப்படலாம்.

74. (1) இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான கூடிய அளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்துக்கு முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஒழுங்குவிதி எதுவும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதாக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதி எத்திகதியன்று இல்லாதாக்கப்பட்டதெனக் கருதப்படுகின்றதோ அத்திகதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XV

### நிலைபெயர் கால ஏற்பாடுகள்

75. (1) நியமிக்கப்பட்ட திகதிக்கு உடன் முன்னரான ஆறு மாதங்களில் முடிவடையும் பன்னிரண்டு மாத காலத்திலுள்ள ஏதேனும் காலாண்டிற்கு 1981ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் எந்த ஆளின் மொத்த விற்பனை வரவு இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த ஒவ்வோராளும், நியமிக்கப்பட்ட அத்தகைய திகதியன்று வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடாத்துவாராயின் அல்லது நிறைவேற்றுவாராயின் அத்தகைய ஆள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பதிவு செய்யப்பட்ட ஆளொருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட ஆளொருவராகக் கருதப்படும் ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு வரிவிதிக்கப்படற்பாலதான அவரது வழங்கல்கள் 10 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொகையை விஞ்சவில்லை என்பதை சுட்டிக்காட்டி அத்தகைய பதிவு பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுள் ஆணையாளர் - தலைமை அதிபதிக்கு எழுத்திலான ஆட்சேபணை பற்றிய கூற்றொன்றைச் செய்யலாம்.

(3) ஆணையாளர் - தலைமை அதிபதி இக்கூற்றில் திருப்தியுறுமிடத்து அவர், 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அத்தகைய பதிவை இல்லாதொழிக்கலாம்.

## அத்தியாயம் XVI

### பொருள் கோடல்

76. (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"வரிமதிப்பீட்டாளர்" என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் அல்லது சிரேட்ட மதிப்பீட்டாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பதற்கு 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தினால் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள அதே பொருள் இருத்தல் வேண்டும் ;

"மீளாய்வுச் சபை" என்பதற்கு 1979ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தினால் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள அதே பொருள் இருத்தல் வேண்டும்.

"ஆட்கள் குழு" என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் குழு, மாகாண சபை, உள்ளூரதிகார சபை கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது விட்டாலும் சரி ஏதேனும் ஆட்கள் கூட்டுக்குழு, ஆட்கள் தோழமைக்குழு, ஆட்கள் சங்கம் அல்லது கழகம், ஏதேனும் பங்காண்மை எனப் பொருள்படும் என்பதுடன், அது

இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் அரசாங்க திணைக்களத்தையும் அல்லது பொறுப்பு முயற்சியையும் உள்ளடக்கும் ;

“ஆணையாளர் தலைமையதிபதி” என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியெனப் பொருள்படும் என்பதுடன், அது ஆணையாளர் தலைமையதிபதியின் சார்பில் பொதுவாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக் காகவோ செயலாற்றுவதற்கென ஆணையாளர் – தலைமை அதிபதியினால் விசேடமாக அதிகாரமளிக்கப்படும் ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் ஒருவரை உள்ளடக்கும் ;

“ஆணையாளர்” என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் ஆணையாளர் ஒருவர் எனப் பொருள்படும் ;

“கம்பனி” என்பது இலங்கையில் அல்லது வேறு எங்கும் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட கம்பனி எதுவும் எனப் பொருள்படும்.

“பணிப்பாளர்” என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளவாறான பணிப்பாளர் ஒருவர் எனப் பொருள்படும் என்பதுடன், அது தொழில்புரி பணிப்பாளர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

“பிரதி ஆணையாளர்” என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் உண்ணாட்டரசிறைப் பிரதி ஆணையாளர் எனப் பொருள்படும்.

“நிறைவேற்றுனர்” என்பது நிருவாகியையும் உள்ளடக்கும் ;

“பண்டங்கள்” என்பது, எல்லாவகையான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எனப் பொருள்படும். ஆனால், அது பணத்தை உள்ளடக்காது.

“தகுதியற்றவரான ஆள்” என்பது, பராயமடையாத, பித்தனாக இருக்கின்ற, மூடனாக இருக்கின்ற அல்லது சித்த சுவாதீனமற்றவராக இருக்கின்ற ஆள் ஒருவர் எனப் பொருள்படும் ;

“இறக்குமதி” என்பது, ஆளெவரினாலும் இலங்கைக்கு வெளியேயிருந்து இலங்கைக்குள் பண்டங்கள் அல்லது சுங்கப் பகுதியின் சுங்கத்தீர்ப்புப் பண்டசாலையொன்றிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் கொண்டு வரப்படுதலை உள்ளடக்கும் என்பதுடன், அது ஏதேனும் வரியையும் வேறு வருமதிகளையும் அறவிடுவதற்கு சுங்கப் பணிப்பாளர் – தலைமையதிபதியினால் அல்லது இலங்கைத் துறைமுக அதிகாரசபைப் பணிப்பாளர் – தலைமையதிபதியினால் அல்லது ஆணையாளர் – தலைமை அதிபதியினால் செய்யப்படும் விற்பனை ஒன்றில் கொள்வனவு செய்யப்படும் பண்டங்களையும் உள்ளடக்கும் எனக் கருதப்படுதல் வேண்டும் ;

பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பில் "உள்ளீட்டு வரி" என்பது –

(அ) வரி விதிக்கற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துவதில் அல்லது நிறைவேற்றுவதில் பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் பயன்படுத்துவதற்கான எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் மீது செலுத்தப்படும் வரி.

(ஆ) பண்டங்களை இறக்குமதி செய்வதன் மீதும் அவற்றை வரியிடத்தகு வழங்கல்களை ஆக்கும் நோக்கத்துக்காக பயன்படுத்துவதன் மீதும் அவரால் செலுத்தப்பட்டதுமான வரி.

"உற்பத்தி" என்பது ஒரு பொருளை ஆக்குதல், எச்செயல் முறை மூலமும் பொருளொன்றைப் பொருத்துதல் அல்லது இணைத்தல், ஏதேனும் பொருளை விற்பனைக்கேற்றவாறு அமைத்து ஆக்குதல், மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்வது தவிர்ந்த வேறு விற்பனைக்காகப் பொருளொன்றைப் பொதி செய்தல், புட்டியில் அடைத்தல், பெட்டிகளில் அடைத்தல், வெட்டுதல், சுத்தப்படுத்தல், பொருளொன்றுக்குப் பட்டை தீட்டுதல், மேலுறை இடுதல், சுட்டுத்துண்டு இடுதல், அல்லது வேறு ஏதேனும் வழியில் பொருளொன்றை விற்பனைக்காகத் தயார் செய்தல் எனப் பொருள்படும்.

பதிவு செய்யப்பட்ட ஆள் ஒருவர் தொடர்பில் "வெளியீட்டுவரி" என்பது, அத்தகைய ஆளினால் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் பண்டங்கள் அல்லது சேவைகள் வழங்கல் தொடர்பில் விதிக்கற்பாலதான வரி எனப் பொருள்படும் ;

ஏதேனும் தேதியன்று பண்டங்கள் அல்லது சேவைகள் வழங்கல் பெறுமதி தொடர்பில் "திறந்த சந்தைப் பெறுமதி" என்பது, இலங்கையில் அத்தேதியன்று அதே சூழ்நிலைகளில் வழங்கப்பட்டால், அதே வழங்கல் பொதுவாக எவ்வளவு பணம் பெற்றுத்தருமோ அவ்வளவு பணம் எனப் பொருள்படும். இவ்வழங்கல் சுட்டியின்றி வழங்கப்படுவதற்காக இருத்தல் வேண்டுமென்பதுடன் இணைந்திருக்கும் ஆட்கள் அல்லாத ஆட்களுக்கிடையே செய்யப்பட்டதாகவும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான உற்பத்தித் தீர்வையையும் அத்துடன் 1991 ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பாதுகாப்பு அறவீட்டையும் நீக்கம் செய்வதாகவும் இருத்தல் வேண்டும்.

"ஆள்" என்பது, கம்பனியொன்றை அல்லது ஆட்கள் குழுவை உள்ளடக்கும் ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும் ;

"பதிவு செய்யப்பட்ட ஆள்" என்பது, இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஆள் எனப் பொருள்படும் என்பதுடன், அது, இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு ஆளாகக்கூடிய ஆளொருவரையும் உள்ளடக்கும்.

"குறித்துரைக்கப்பட்டது" என்பது உள்ளூரரசிறை ஆணையாளர் – தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட எனப் பொருள்படும்.

"பண்டங்களின் வழங்கல்" என்பது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் சொந்தக்காரராக இருப்பவராக அதைக் கையுதிப்பதற்கான உரிமையைக் கைமாற்றுதல் என்பது பொருள்படும் ;

"சேவைகள் வழங்கல்" என்பது பொருட்கள் வழங்குதல் அல்லாத வேறு ஏதேனும் வழங்கல் எனப் பொருள்படும் ;

பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கல் தொடர்பில் "வழங்குநர்" என்பது, வழங்கலைச் செய்கின்ற ஆள் எனப் பொருள்படும் ;

"வரி விதிக்கற்பாலதான காலப்பகுதி" என்பது, ஒவ்வோராண்டும் முறையே சனவரி முதலாம் திகதியன்று, ஏப்ரல் முதலாம் திகதியன்று, யூலை முதலாம் திகதியன்று அத்துடன் அக்டோபர் முதலாம் திகதியன்று தொடங்கும் மூன்று மாத காலப்பகுதி எனப் பொருள்படும் ;

"வரி விதிக்கற்பாலதான செயற்பாடு" என்பது –

(அ) தொழில், வியாபாரம், உயர் தொழில் அல்லது செய்தொழில் ஒன்றாக அல்லது ஒரு வியாபாரம் என்ற தன்மையில் உள்ள ஒவ்வொரு தொழில்முயற்சி அல்லது அக்கறை ஒன்றெனக் கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் ஏதேனும் செயற்பாடு ;

(ஆ) காசுக்காக அதன் உறுப்பினர்களுக்கு அல்லது வேறு ஆட்களுக்கு வசதிகள் வழங்குதல் அத்துடன் கணனி, சங்கம் அல்லது ஒழுங்கமைப்பு ஒன்றின் விடயத்தில் கட்டுப்பணக் கொடுப்பனவு ;

(இ) செயற்பாடு எதனதும் ஆரம்பம் அல்லது இல்லாதொழிதல் தொடர்பில் செய்யப்படும் எதுவும் அல்லது (அ) வில் அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வசதிகளை வழங்குதல்

(ஈ) அசைவுள்ள ஆதனம் எதையும் வாடகை கொள்வனவுக்கு அல்லது குத்தகைக்கு விடுதல் அல்லது அசைவற்ற ஆதனத்தை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுதல் எனப் பொருள்படும்.

(உ) தனியுரிமைகள், பதிப்புரிமைகள் போன்ற ஏதேனும் தொட்டுணர முடியாத ஆதனத்தை அல்லது அதனையொத்த வேறு சொத்துக்களை தேடிப் பயன்படுத்துதல்.

"வரி விதிக்கற்பாலதான வழங்கல்" என்பது, இச்சட்டத்தின் கீழ் வரிவிதிக்கற்பாலனவும், இலங்கையில் செய்யப்படுவதுமான அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றனவுமான எவையேனும் பொருட்களின் அல்லது சேவைகளின் வழங்கல் எனப் பொருள்படும் என்பதுடன் இது விலக்களிக்கப்பட்ட வழங்கல் ஒன்று தவிர்ந்ததும் சைபர் வீதத்தில் விதிப்பனவு செய்யப்படுகின்றதுமான வழங்கல் ஒன்றையும் உள்ளடக்கும்.

## அட்டவணை

(i) தேங்காய்கள் தேங்காய்த் துருவல்கள், தென்னந்தும்பு, தேங்காய் பிண்ணாக்கு, கொப்பறா, இறப்பர், தேயிலை, தேயிலைப் பச்சிலை, நெல், ஏலக்காய், கறுவா, கராம்பு, சாதிக்காய், மிளகு அல்லது ஏதேனும் கமத்தொழில் தோட்டப் பயிர்ச்செய்கை, விலங்கு வேளாண்மை, பறவை அல்லது மீன்பிடிப் பொறுப்பு முயற்சி என்பவற்றின் வேறேதேனும் பதப்படுத்தப்படாத விளைபொருள் ;

(ii) உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் மிளகாய் என்பவற்றின் இறக்குமதியும், காய்கறி விதைகளின் இறக்குமதியும், வழங்கலும் ;

(iii) அரிசி, அரிசி மா, கோதுமை, கோதுமை மா மற்றும் வேறெல்லாத் தானியங்களினதும் வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல் ;

(iv) வாட்டிய பாண், உள்ளிப்பாண், பிரான்சியப் பாண், வாழைப்பாண், பாண் உருளை, கடினமான பாண், உருளை போன்ற புனையுருவான பாணைத் தவிர வேறு பாண் விநியோகம் ;

(v) பாலுணவை பாலிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட ஏதேனும் பொருள் புற நீங்கலாக பாலை அல்லது பால்மாவை, அல்லது கட்டிப்பாலை விநியோகித்தலும் இறக்குமதி செய்தலும் ;

(vi) அடைக்கப்பட்ட கொள்கலன்களில் அல்லது போத்தல்களில் அல்லாமல் வேறு வகையில் நீர் வழங்கல் ;

(vii) மருந்தியல் உற்பத்திப் பொருட்களை அல்லது ஆயுர்வேத, சித்த வைத்திய, யூனானி அல்லது ஹோமியோபதி மருந்துத் தயாரிப்புகளை அல்லது அத்தகைய உற்பத்தியில் அல்லது தயாரிப்பில் உபயோகப்படுத்துவதற்கென எவையேனும் மூலப் பொருட்களை வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல் ;

(viii) எக் கல்வித் தாபனத்திற்கு அல்லது பள்ளிக்கூடத்துக்கு அரச நிதிகளிலிருந்து மானியக்கொடைகள் வழங்கப்படுகின்றனவோ அல்லது மானியக் கொடைகள் முன்னர் வழங்கப்பட்டுத் தற்போது வழங்கப்படவில்லையோ, அக்கல்வித் தாபனத்தினால் அல்லது பள்ளிக்கூடத்தினால் எவையேனும் சேவைகள் வழங்கப்படல் ;

(ix) புதினத்தாள்கள், பருவகால வெளியீடுகள் அல்லது சஞ்சிகைகள் தவிர்ந்த வேறு எவையேனும் புத்தகங்களின் வழங்கல் அல்லது இறக்குமதி ;

(x) ஏதேனும் கருவாட்டையும், மாசிக்கருவாட்டையும் வழங்குதல் அல்லது இறக்குமதி செய்தல் ;

(xi) சீனி, கருப்பட்டி, சர்க்கரை என்பவற்றை வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல் ;

(xii) மண்ணெண்ணெய், டீசல், மற்றும் திரவ பெற்றோலிய வாயு என்பவற்றை வழங்குதல் அல்லது இறக்குமதி செய்தல் ;

(xiii) கிளிங்கர் உட்பட சீமெந்தை வழங்குதல் அல்லது இறக்குமதி செய்தல் ;

(xiv) றொக் பொஸ்பேற்று உட்பட உரம் வழங்கல் அல்லது இறக்குமதி செய்தல் ;

(xv) சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய எண்ணெய் இறக்குமதி ;

(xvi) பின்வரும் நிதிச் சேவைகள் வழங்குதல் :-

(அ) ஏதேனும் வைப்பு அல்லது சேமிப்புக் கணக்கை நடைமுறைப்படுத்துதல்;

(ஆ) நாணய மாற்று ;

(இ) ஏதேனும் கொடுப்பனவுக்கான பத்திரத்தின் அல்லது கட்டளையின், காசோலையின் அல்லது கடன் பத்திரத்தின் வழங்கல், கொடுப்பனவு, சேகரிப்பு அல்லது சொத்தாண்மை கைமாற்றம் ;

(ஈ) எவரேனும் ஆளினால் கொடுக்குமதியான பணத்தில் உள்ள ஏதேனும் அக்கறையான அல்லது செலுத்தப்படுவதற்கான உரிமையாக இருக்கும் ஏதேனும் தனிசுப் பிணைப்பொறுப்பை வழங்குதல், குறித்தொதுக்கல், சொத்தாண்மையைக் கைமாற்றுதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது புறக்குறிப்பிடுதல்;

(உ) ஏதேனும் நிகர மதிப்புப் பிணையமொன்றின் அல்லது பங்கேற்புப் பிணையமொன்றின் வழங்கீடு, பிரித்தொதுக்கல் அல்லது சொத்தாண்மைக் கைமாற்றம் ;

(ஊ) நிகர மதிப்புப் பிணையமொன்றின், கடன் பிணையமொன்றின் அல்லது பங்கேற்புப் பிணையமொன்றின் வழங்கீட்டைப் பொறுப்பேற்றல் அல்லது கீழ்ப் பொறுப்பேற்றல் ;

(எ) ஏதேனும் கொடுகடன், முற்பணம் அல்லது கடன் வழங்கல் ;

(ஏ) வாடகைக் கொள்வனவு நிபந்தனையான விற்பனை அல்லது கடன் விற்பனை உடன்படிக்கை ஒன்றில் தவணைக் கடன் நிதி வசதி வழங்கல்;

இவ்வசதிக்கு தனிவேறான விதிப்பனவு ஒன்று இறுக்கப்பட்டு பண்டங்கள் எவருக்கு வழங்கப்படுகின்றனவோ அவருக்கு பெறுகிறவருக்கு வெளிவிடப்படுகிறது;

(ஐ) ஆயுட் காப்புறுதி

(xvii) சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகள் தொடர்பிலான இராசதந்திர உறவுகள் மீதான 1961 ஆம் ஆண்டின் வியன்னா சமவலயத்தின் கீழ் இந்த நன்மைகளுக்கு உரித்துடைய இராஜதந்திர தூதுவராலயங்களுக்கும் ஐக்கிய நாடுகளின் ஒழுங்கமைப்புக்கும் அதன் தனித்துவமான முகவராண்மைகளுக்கும் அத்துடன் இத்தூதுவராலயங்களினதும் ஒழுங்கமைப்புக்களினதும் பணியாட்டொகுதி யினருக்கும் பண்டங்களையும் சேவைகளையும் இறக்குமதி செய்தல் அல்லது வழங்குதல் ; ஆயினும் மீள ஏற்றுமதிக்கான தற்காலிக கோர்னெட்டின் கீழான இறக்குமதி உட்பட இலங்கையிலிருந்து அவர்களது இணையொத்த பகுதியினர்க்கு பரஸ்பர நன்மைகள் கிடைக்கத்தனவாக இருத்தலும் ஆணையாளர் – தலைமையதிபதியால் அவ்வாறு இனங்காணப்பட்டதாயிருத்தலும் வேண்டும் ;

(xviii) வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்காகத் தீர்வையற்ற கடைகளில் பொருட்களை இறக்குமதி செய்தலும், வழங்கலும் ;

(xix) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் உபயோகப் படுத்தப்படாத தபால் அல்லது அரசிறை முத்திரைகளை இறக்குமதி செய்தல் அல்லது வழங்கல் ;

(xx) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட பிரயாணிகளின் பொதி (விலக்களிப்பு) ஒழுங்குவிதிகளின் கீழ் தீர்வையற்ற துணை நீக்கத்துக்கு உரித்துடையதான ஏதேனும் பொருளின், அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அ என்னும் அட்டவணையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக மீள் இறக்குமதிச் சான்றிதழின் கீழ் தீர்வையற்றதாக துணை நீக்கப்படும் ஏதேனும் பொருளின், அல்லது கப்பற் களஞ்சியங்களாகப் பயன்படுத்தப்படுதற்கு பிணையின்றி துணை விடுவிக்கப்படும் ஏதேனும் பொருளின் அல்லது மீள் ஏற்றுமதிக்கான ஏதேனும் பொருளின் இறக்குமதி ;

(xxi) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பினால் இறக்குமதி செய்யப்படுபவையும் இயற்கையினால் ஏற்பட்ட அல்லது வேறு போரிடர்களினால் ஏற்பட்ட இடை யூறுக்கான நிவாரணத்துக்காக வெளிநாட்டு ஆட்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்து வரும் கொடைகளென அவரின் திருப்திக்கேற்ப எண்பிக்கப்படுபவையுமான பண்டங்களை இறக்குமதி செய்தல் ;

(xxii) வான்செலவு எரிபொருளையும் பங்கர் எரிபொருளையும் இறக்குமதி செய்தல்;

(xxiii) வான் அல்லது நீர்ப்போக்குவரத்து (உல்லாசப் பிரயாணிகளைக் கொண்டு செல்வதற்கான சேவைகள் அல்லது படிப்பறிவுச் சுற்றுலாக்கள் என்ற வகையிலான சேவைகள் அல்லது வாடகைக் கார் சேவைகள் தவிர்ந்த பொது பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகளுக்கான ஒரு மோட்டார் கோச்சை அல்லது அல்லது ஒரு மோட்டார் கோச்சின் அடிச்சட்டத்தை அல்லது உடற்கோப்பை இறக்குமதி செய்தல் அல்லது வழங்கல் ;

(xxiv) கமத்தொழில் வேலைக்குப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படுவதற்கான உழவு இயந்திரங்களை இறக்குமதி செய்தல் அல்லது வழங்கல் ;

(xxv) ஒரு சொந்தக்காரர் அல்லது வாடகையாளரென்ற தத்தமது தன்மைகளில் கப்பலொன்றின் சொந்தக்காரர் அல்லது வானூர்திச் சொத்துக்காரரால் அல்லது ஒரு கப்பலின் அல்லது வானூர்தியின் வாடகையாளரால் சேவை வழங்கப்படல் ;

(xxvi) *1950 ஆம் ஆண்டின் 19 ஆம்* இலக்க, மின்சாரச் சபைச் சட்டத்தின் கீழ் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு மாதமொன்றுக்கு ஒரு பாவனையாளருக்கு மணித்தியாலமொன்றுக்கு 75 கிலோ வரை மின்சாரம் வழங்குதல் ;

(xxvii) *1978 ஆம் ஆண்டின் 4 ஆம்* இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் *17 ஆம்* பிரிவின் கீழ், இலங்கை முதலீட்டுச் சபையுடன்

(அ) *1996* மே *16* ஆந் திகதிக்கு முன் அல்லது

(ஆ) நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் ரூபா 500 மில்லியனுக்குக் குறைந்த செலவினதான கருத்திட்டமொன்று தொடர்பில்

உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளினால் அத்தகைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய கருத்திட்டம் நடைமுறைப்படுத்தற் கருத்திட்டம் பூர்த்தியடையும் திகதி இவற்றுள் எது முந்தியதோ அதுவரை உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள கருத்திட்ட தொடர்பிலான பொருளொன்றாக விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளின் இறக்குமதி;

(xxviii) *1978 ஆம் ஆண்டின் 4 ஆம்* இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் *17 ஆம்* பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளினால்,

(அ) நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதி, அல்லது

(ஆ) அத்தகைய கருத்திட்டம் பூர்த்தியாகும் திகதி வரை.

இவற்றுள் எது முந்தியதோ அதுவரை, கருத்திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள கருத்திட்டம் தொடர்பிலான பொருளொன்றென விதித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளின் இறக்குமதி ;

(xxix) எவரேனும் ஆளினால், கருத்திட்டத்தின் மொத்தச் செலவு 500 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாயில்லாதிருக்குமிடத்து,

(அ) நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு, அல்லது

(ஆ) அத்தகைய கருத்திட்டம் பூர்த்தியாகும் திகதி இதில் எது முந்தியதோ அதுவரை.

கருத்திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள கருத்திட்டம் தொடர்பிலான பொருள் ஒன்றென விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளின் இறக்குமதி ;

(xxx) எந்தக் கம்பனியுடனும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் நியமித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டதோ அந்தக் கம்பனியொன்றுக்கு அத்தகைய உடன்படிக்கை தொடர்புறுத்தும் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு 50 அமெரிக்க டொலருக்கு அல்லது அதற்குச் சமமான தொகைக்குக் குறைவாயில்லாமல் இருப்பின், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வதிவற்ற ஆளொருவரால் கட்டிடக்கலை, பொறியியல் தொகை அளவீட்டு அல்லது நிர்மாண முகாமைத்துவ சேவைகளை இலங்கையில் வழங்குதல் ;

(xxxi) இலங்கையிலுள்ள ஆளொருவரால் வேறோர் ஆளுக்கு அத்தகைய வேறு ஆளினால் இலங்கைக்கு வெளியே முழுமையாக நுகரப்படுவதற்காக அல்லது பயன்படுத்தப்படுவதற்காக சேவைகளை வழங்குதல்.

77. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996ஆம் ஆண்டின் 35 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்.

[1996 ஆம் ஆண்டு திசெம்பர் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1997 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த முயற்சிகள் தொடர்பில் நிதிகள் ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின், இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில் "நிதியாண்டான 1997 ஆம் ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும், 1997 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி 1997 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைவது மான காலப்பகுதிக்கான சேவைக்காக இருநூற்று எண்ணாயிரத்து நூற்று ஐம்பத்தாறு மில்லியன் அறுநூற்றுப் பதினோராயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி –

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும் ; அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும், பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியில் கூட்டு மொத்தத் தொகையானது தொண்ணூற்று ஏழாயிரத்து ஐந்நூற்று இருபத்தாறாயிரம் ரூபாவினை விஞ்சுதலாகாது. இதன்கண் முன்னர் குறிப்பிட்ட இருநூற்று எண்ணாயிரத்து நூற்று ஐம்பத்தாறு மில்லியன் அறுநூற்றுப் பதினோராயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அரசாங்கத்துக்காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1997 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். ஆனால், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் III ஆம் நிரையில் உள்ள நேரோத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையை விஞ்சுதலாகாது. அத்தகைய முயற்சியின் தேறிய மிகை ஏதேனும் இருப்பின் அத்தேறிய மிகையானது நிதியாண்டான 1997 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பின்வரும் கட்டணங்கள், அவையாவன :-

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற்பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மானமானவையாயினுஞ்சரி, முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற்றும் ஏனைய செலவுகள் ; அத்துடன்,

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு, என்பன ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1997 ஆம் ஆண்டின் போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின்பேரிலும், அரசாங்கத்தால் உறப்படும் செலவினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து, அரசாங்கம் பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஆனால் அத்தகைய செலவினம் அந்த அட்டவணையின் II ஆம் நிலையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

(4) நிதியாண்டான 1997 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் VI ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லையை விஞ்சுதலாகாது. அத்துடன் அந்த நிதி ஆண்டின் இறுதியில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள் அந்த அட்டவணையின் V ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய எல்லையை விஞ்சுதலாகாது.

4. நிதியாண்டான 1997 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் பெறுகைகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதியளவாயிராவிடின் அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்கு சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுக்கப்படற்பாலதாதல் வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் கட்டளை மூலம் பணிக்கலாம் ; எவ்வாறாயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டுமொத்தத் தொகை, அந்த அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரோத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள

செலவினங்களின் ஆகக்கூடிய எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி தொடர்பில் அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சரால் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்திற்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குக் குறித்தொதுக்கப் பட்டிருந்து, ஆனால் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறேவரேனும் அலுவலரின் கட்டளை மூலம் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்குட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்துக்கென செய்யும் குறித்தொதுக்கலுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவரும் செலவினத்தின் அல்லது மூலதனச் செலவினத்தின் குறித்தொதுக்கலுக்கும் கைமாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்டம் எதன் கீழும் ஆக்கப்பொருட் செலவினத்துக்கென ஒதுக்கப் பட்டுள்ள பணங்களெவையும் குறித்தொதுக்கலில் இருந்து கைமாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள், அதிகார மளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கு என எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும், விடக் குறைவாக இருக்குமென, அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாதென, அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த ஏதேனும் பிற நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தில் அதிகாரத்தின் கீழான செலவினத்துக்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. (1) (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையிலும் III ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள, ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும் ;

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரையிலும் குறித்துரைக்கப் பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் ;

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு 1998 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

(2) இப்பிரிவின் கீழ் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும், பாராளு மன்றத்தினாலான தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி பயனுடையதாதல் ஆகாது.

(3) அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட திகதிக்கு முந்தியதுமான அத்தகைய திகதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அந்த அட்டவணையின் தோதான நிரைகளுக்கு, ஏதேனும் முயற்சியையும், அத்துடன்

(அ) அத்தகைய முயற்சி தொடர்பான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்,

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும்,

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்.

[1996, திசெம்பர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் விரிவுப் பெயர் "முறையே 1992 சனவரி 1, 1993 சனவரி 1, 1994 சனவரி 1, 1995 சனவரி 1, அத்துடன் 1996 சனவரி 1 என்ற திகதிகளில் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "முறையே 1992 சனவரி 1, 1993 சனவரி 1, 1994 சனவரி 1, 1995 சனவரி 1, 1996 சனவரி 1, அத்துடன் 1997 சனவரி 1 என்ற திகதிகளில் தொடங்குகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "முறையே 1992 சனவரி 1, 1993 சனவரி 1, 1994 சனவரி1, 1995 சனவரி 1, மற்றும் 1996 சனவரி 1 என்ற திகதிகளில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1992 சனவரி 1, 1993 சனவரி 1, 1994 சனவரி 1, 1995 சனவரி 1, 1996 சனவரி 1, அத்துடன் 1997 சனவரி 1 என்ற திகதிகளில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "ஏதேனும் தங்கத்தின் பெறுமதி ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தங்கத்தின் பெறுமதி" ; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "அத்தகைய பொருளின் பெறுமதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய பொருளின் பெறுமதி அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஏ) சர்வதேச வாகனப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படுவதும் ஏதேனும் வான்வழி அல்லது கப்பற்றொழிற் கம்பெனிக்குச் சொந்தமாக உள்ளதும் அல்லது அத்தகைய வான்வழி அல்லது கப்பற்றொழில் கம்பெனிகளில் வாடகைக்கு அமர்த்தப்பட்டதுமான ஏதேனும் வானூர்தியை அல்லது கப்பலைப் பழுதுபாாப்பதற்கென அல்லதுபராமரிப்பதற்கென ஏதேனும் உதரிப்பாகம் இலங்கையில் பயன்படுத்தப்படவுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி

திருப்திப்படுமளவிற்கு எண்பிக்கப்பட்டால், அத்தகைய வான்வழி அல்லது கப்பற்றொழிற் கம்பெனியினால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய உதிரிப்பாகத்தின் பெறுமதி."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவானது அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

(ஊ) 1996 சனவரி 1ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1997 சனவரி 1ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கு –

(i) (அ) இந்த உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவாகவிராத அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை : அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக் குள்ளான ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாக விராத ஏதேனும் பொறித்தொகுதியின், இயந்திரத் தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் இரண்டு சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை,

அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு–

(அ) இவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவாகவிராத அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை : அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாகவிராத ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திரத் தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் இரண்டு சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை.

அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தொகையானது இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் அத்துடன் (ii) ஆம் உட் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டு மொத்தத்தால் குறைக்கப்பட்டு அக்காலாண்டின் முடிவை உடனடுத்து வருகின்ற மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் : அத்துடன்

(எ) 1997 சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1998 சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் அக்காலாண்டின் முதலாம் மாதத்திற்கு –

(i) (அ) இந்த உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவாகவிராத அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை : அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்தெல்லைக் குள்ளான ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாக விராத ஏதேனும் பொறித்தொகுதியின், இயந்திரத் தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் இரண்டு சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை.

அக்காலாண்டின் இரண்டாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ;

(ii) அக்காலாண்டின் இரண்டாம் மாதத்திற்கு–

(அ) இவ்வுட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவாகவிராத அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் நாலரைச் சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை : அத்துடன்

(ஆ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாகவிராத ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திரத் தொகுதியின் அல்லது உபகரணத்தின் இறக்குமதியிலிருந்து அல்லது உற்பத்தியிலிருந்து எழுகின்றதான அவ்வாளின் மொத்த விற்பனை வரவின் இரண்டு சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை.

அக்காலாண்டின் மூன்றாம் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ; அத்துடன்

(iii) அக்காலாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான அறவீட்டின் தொகையானது இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் அத்துடன் (ii) ஆம் உட் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட தொகைகளின் கூட்டு மொத்தத்தால் குறைக்கப்பட்டு அக்காலாண்டின் முடிவை உடனடுத்து வருகின்ற மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ”

5. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையானது, அவ்வட்டவணையின் 6ஆம் விடயத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :–

“ 7. 1997 சனவரி 1 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் 1998 சனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு –

(i) இந்த விடயத்தின் (ii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தவிர்ந்த மொத்த விற்பனை வரவின் மீது –

*4.5 சத வீதம்.*

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட ஏதேனும் மோட்டார் கார், மோட்டார் கோச்சு அல்லது லொறியாகவிராத ஏதேனும் பொறித் தொகுதியை, எந்திர சாதனத்தை அல்லது உபகரணத்தை இறக்குமதி செய்வதிலிருந்து அல்லது உற்பத்தி செய்வதிலிருந்து எழுகின்ற மொத்த விற்பனை வரவின் மீது –

*0.5 சத வீதம்"*

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க நாடு காக்கும் உதவுதொகை (திருத்தச்) சட்டம்

[1996ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

1996ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நாடு காக்கும் உதவுதொகைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின்37ஆம் இலக்க, நாடு காக்கும் உதவுதொகை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நாடு காக்கும் உதவு தொகைச் சட்டத்தின் விரிவுப் பெயர் "1996 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "முறையே 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டுகளின் ஒவ்வொரு காலாண்டிற்கும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "இலங்கை வான் படையின் உறுப்பினரொருவராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

(iii) இலங்கைக்கு வெளியே அத்தகைய தனியாளுடன் செய்து கொண்ட தொழில் ஒப்பந்தமொன்றிற்கிணங்க, இலங்கையின் ஏதேனும் இராஜதந்திரத் தூதுவ ராலயத்தில் இலங்கைக்கு வெளியே தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள தனியா ளொருவராக"

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டின்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "முறையே 1996 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் அத்துடன் 1997 ஏப்பிறல் 1ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டுகளின்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. இச்சட்டத்திலுள்ள சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 1996ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்.

[1996ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1996ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. 1993ஆம் ஆண்டின் 63ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்ட (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 5ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது:-

(அ) அப்பிரிவின் (20அ) என்னும் பந்தியில் "இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பனியில் அல்லது இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(ஆ) அப்பிரிவின் (20ஆ) என்னும் பந்தியில் "இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் விலை கோரிப் பெறப்பட்ட பங்குடைய பகிரங்கக் கம்பனியில் அல்லது இலங்கைக் கடன் தகவல் பணியகத்தில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

3. இச்சட்டத்தின் 2ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காவும் 1996 நவெம்பர் 7ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.